கல்கி

ஸ்பீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



"கமல்தான் இன்ஸ்பிரேஷன்..."

KALKI • 25.10.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



BSA MOTORS

இந்த தீபாவளிக்கு சேமிப்பை அதிகரித்து மேலும் ஒளிகூட்டுங்கள்.

இப்போதே BSA மோட்டார்ஸின் எலெக்ட்ரிக் ஸ்கூட்டர் வாங்குங்கள், உடனே உங்கள் சேமிப்பும் துவங்கிவிடும்! **ஸ்க்ராட்ச் கார்டு** பெறுங்கள், ரூ.2,500 முதல் ரூ.10,000 வரை ரொக்கப் பரிசு நிச்சயம். ரூ.800 முதல் ரூ.1,100 மதிப்புள்ள இன்ஷுரன்ஸும் இலவசம்! அதுமட்டுமா, இரண்டு வருடங்களில் ரூ.23,340** வரை சேமிக்கலாமே! இனி என்ன, எலெக்ட்ரிக்கிற்கு மாறுங்கள், சேமிப்பை தொடங்குங்கள், பெட்ரோலையே மறந்து விடுங்கள்.



CHENNAI: BSA MOTORS, Land Marvel Building, MG Road, Shasthri Nagar, Besant Nagar. Phone: 044 42018964 / 9840126666. **BSA Motors,** No. 60, Swaswamy Salai, Mylapore. Phone: 044 42074167 / 9840967329 / 9840126666. **Sri Sastha Motors,** 150 Redhills Road, Barathi Nagar, Pudhur, Ambattur. Phone: 044 64622111 / 9840071280. **BSA Go,** No. 9/430, N.S.K. Nagar, Anna Nagar Main Road. Phone: 044 26262485 / 26211399 / 9380001082. **BSA Motors,** No.30, Venkata Narayana Road, T.Nagar. Phone: 044 42012165 / 9381036174. **Ayyan Agency,** No.3, John Desigar Road, Nanganallur. Phone: 9445256665. **BSA Motors,** No. 7, Hunters Road, Choolai, Vepery. Phone: 044 26425353 / 9444252279. **TIRUVALUR: Vijayalakshmi Motors,** 4/120, JN Road. Phone: 044 27665914 / 9600945611/12/13/14/15. **TIRUNELVELI: Venkateshwara Auto Agency,** No.18 South Bypass Road. Phone: 0462 2575778 / 0462 6450500 / 9442787878. **TUTICORIN: Arasan Auto,** 17, Palayamkottai Road. Phone: 0461 2320125 / 4000125 / 9842910990. **Sri Venkataswara Agency,** 102/c Thilagar Puram Main Road, Ambasamutharam. Phone: 0443162596. **Aseka Auto Agency:** 931, 932 Nagercoil Road, Valloor. Phone: 9443080747. **MADURAI: Susee Cars and Truck Pvt Ltd,** 117/3, Theni Main Road. Phone: 0452 4212222 / 9894677815 / 9600977985. **DINDIGUL: Vasavi motors,** 130-131-132, West Car Street. Phone: 0451 2428065 / 9894978870. **PONDICHERRY: Yogiram Agencies,** GRR Zone. Phone: 0413 2221727 / 9677737733 / 9677733773. **Jay Gurudev Motors,** No.7, A.J. Complex, Ganthigram, Cuddalore Dist., Indhra Nagar, Neyveli. Phone: 9894044881 / 9442233991. **SALEM: Sri Lakshmi Motors,** 20/128-C, Town Railway Station Road. Phone: 0427 2451105 / 9894752323 / 9944452323. **MAYILADUTHURAI: Sana Bike Zone,** Door No:117 No:2 Gandhiji Road. Phone: 04364 223798 / 9364404362 / 9364604364. **IMS Motors,** No.60, North Street, Thiruvarur. Phone: 04366 349249 / 9443122822. **NAGERCOIL: Marikar Motors,** 28, College Road, Tower Junction. Phone: 04652 223605 / 9994793012. **Oliver & Rolands (India) Co,** North Street, Marthandam. Phone: 9488425273. **VELLORE: MSP Motors,** No. A-1, Sundaram Complex, Collector Office Road, TNHB Phase 2, Sathuvachari. Phone: 0416 2253070 / 9444124023 / 9994921710. **ERODE: Krishna Motors,** 165 Perundurai Road, Palayapalayam. Phone: 0424 2277049 / 9442294425. **COIMBATORE: N. Mahalingam & co,** 66, Dr. Nanjappa Road. Phone: 0422 2239802 / 9894175964 / 9600530300. **Sankrithi BSA,** No. 64, Sri Sai Complex, Thadagam Road, Velandipalayam. Phone: 0422 6565563 / 9789490969 / 9245343981.

SMS "BSA" to 56677. www.bsamotorsindia.com

*Conditions apply. #Savings vary from model to model

★ **த.சத்தியநாராயணன், அயன்புரம்**

'நரகாசுரன்' தீபாவளிப் பண்டிகையின் நாயகனா? வில்லனா?

கண்ணனால் 'மோட்சம்' தியேட்டரில் வெளியிடப்பட்ட தீபாவளி ரிலீஸ்.

★ **எம்.அசோக்ராஜ், திருச்சி**

'மாதங்களில் நான் மார்கழி' என்று கிருஷ்ண பரமாத்மா ஏன் கூறினார்?

ஆண்டாளின் 'காதலுக்கு மரியாதை...'

★ **என்.கோமதி, நெல்லை**

பூனை குறுக்கே போனால் அபசகுனம் என்கிறார்கள்... புலி குறுக்கே போனால்?

புலிக்கு அபசகுனம். குறுக்கே போகும் அளவுக்குப் புலி குறுகிப் போய் பூனையானால்... நம்ம ஊர் டிராஃபிக்கில் ஆட்டோ, பஸ்ஸில் அடிபட்டு புலி தரையோடு தரையாக புலியோதரை ஆகிவிடும்.

★ **பவித்ரா, அரக்கோணம்**


ஓர் இதிகாச ஹைக்கூ?

'இன்று கிடைத்த
இதிகாசத் தகவல்படி
கும்பகர்ணன், கர்ணன்
இருவரும் பலியானது
நன்றிக் காய்ச்சலால்...'

★ **ஜே.துரைராஜ், சென்னை**

மருந்து, பத்தியம் - இதில் எது முக்கியம்?

பாவம் வியாதி; பரிகாரம் மருந்து; புண்ணியம் பத்தியம்!



★ **பா.அசோக், திருவில்லிப்புத்தூர்**

கிரேஸியாரே... மனைவிக்கு 'சோப்' போடலாமா?

அசோக்காரே...உங்கள் கார்டில் நீங்கள் உங்களுக்குப் புனைப் பெயர் வைக்கும்படி வேறு கேட்டிருக்கிறீர்கள். அதிக கேள்வி கேட்பதால் உங்களுக்கு 'மனைவி' என்ற புனைப்பெயரை வழங்கலாம் என்று முதலில் நினைத்தேன். மனைவிக்கு 'சோப்' போடலாமா என்றும் கேட்டதால், 'சோப்'ளாங்கி என்று வைத்துக் கொள்ள சிபாரிசு செய்கிறேன்.

★ **மு.மதிவாணன், அரூர்**

கஷ்டப்படாமல் சம்பாதிப்பது எப்படி?

கஷ்டப்படாமல் கெட்ட பேரைத்தான் சம்பாதிக்கலாம்!

★ **எம்.சம்பத், கரூர்**

நிலவில் நிலம் வாங்க அட்வான்ஸ் கொடுத்து விட்டீர்களா?

நல்ல நாள் 'அமாவாசை' அன்று கொடுக்கலாம் என்றிருக்கிறேன்.

★ **எம்.செல்லையா, சாத்தூர்**

அடிக்கிற கைதான் அணைக்குமா?

ஆரம்பத்தில் அன்னையின் அடிக்கிற

இதிகாச

கை அணைக்கும். முடிவில் எரியும் உடலை அணைக்கும் வெட்டியானின் கை, விறைத்துக்கொள்ளும் மேனியைக் கம்பால் அடிக்கும்.

★ **வி.ஜே.சத்தியநாராணன், நங்கநல்லூர்**

ஆறறிவு கொண்ட மனிதன் ஐந்தறிவு கொண்ட குதிரையின் மீது பணம் கட்டி ரேஸ் ஆடலாமா?

நூறு அறிவு இருந்தாலும் ரேஸுக்குப் போவது சிலருக்குப் 'புரவி' குணம்!

★ **ஆர்.ராஜலக்ஷ்மி, ஹுப்ளி**

பெரியவர்களின் அறிவுரை இளைஞர்களுக்கு அறுவையாக இருப்பது ஏனோ?

அதை அறுவைச் சிகிச்சையாக எடுத்துக்கொள்ளும் இளைஞர்கள் யோக்கியமாக



ஹைஹக்கூ?

வும், ஆரோக்கியமாகவும் இருப்பார்கள்.

★ ரகுநாதன், பெங்களூர்

எனக்குச் சுத்தமாக கிரிக்கெட்டும் பிடிக்காது, பரத நாட்டியமும் பிடிக்காது. ஆனால் என் மகன் கிரிக்கெட் ஆடுகிறான். என் மகள் பரத நாட்டியம் ஆடுகிறாள். இது எப்படி?

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பது இதுதான் போலிருக்கிறது.

★ ஆர்.செண்பகவல்லி, விருதுநகர்

கன்னியின் கடைக்கண் பார்வை, நாணத்தால் காலால் போடும் மணல் கோலம்... இதில் எது கவிதை?

கடைக்கண் பார்வை மரபுக் கவிதை; மணல் கோலம் புதுக்கவிதை!

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

ஒரே கேள்வி... ஒரே பதில்...

எம்.பி.க்கள் பயணத்தால்

இந்திய எம்.பி.க்களின் இலங்கை விஸிட்டால் ஏதாவது பயன் இருக்குமா?

தா.பாண்டியன்: ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது வாய்மூடி மௌனமாக நின்ற இவர்கள், இப்போது சாவகாசமாகச் சென்றிருப்பதால் யாருக்கு என்ன பயன்? இது அரசு சார்பு குழு அல்ல; ராஜபட்சேயின் அனுமதியின் பேரில் சென்ற குழு. எனவே, அவர் எதுவரை அனுமதித்தாரோ அதுவரை



சென்று வந்திருக்கிறது. தமிழ் நாட்டில் ஒரு சின்ன விழாவைக்கூட ஆளும்கட்சி சார்பு தொலைக்காட்சிகள் திரும்பத் திரும்ப ஒளிபரப்பும். ஆனால், இந்தக் குழு விஸிட்டில் தொலைக்காட்சியாளர்களோ பத்திரிகையாளர்களோ இல்லையே ஏன்? நான்காயிரம் ஆண்டு கால வரலாற்றுக்குச் சொந்தமானவர்கள் தமிழர்கள் என்று இனி சொல்லிக்கொள்வதற்கான தகுதியை நாம் இழந்துவிட்டோம். இது போன்ற அரசியல் மோசடிகளைக் குறித்து தமிழக மக்களே சிந்திக்கட்டும். ஆட்டுக்கறியும், ஐந்நூறு ரூபாயும் அவர்கள் தேர்தலில் முடிவெடுக்கத் தூண்டுதலாக இருந்தால் நாம் என்ன செய்ய முடியும்?''

''மக்களுக்காகவே எங்கள் இயக்கம்'' என்று சொல்லும் நக்ஸலைட்டுகளின் வன்முறை மக்களைப் பாதிக்கிறதே...?

அஜிதா(வழக்கறிஞர் - மனித உரிமை ஆர்வலர்): நக்ஸலைட்டுகளின் பிரச்னையை சட்டம் - ஒழுங்கு பிரச்னையாகப் பார்க்காதீர்கள். சமூகப் பிரச்னையாகப் பாருங்கள். வருடாவருடம், ஆயிரக்கணக்கான கோடிகள் செலவழித்தும், எந்த ஒரு திட்டமும் அடித்தட்டு மக்களைச் சென்றடையாததலால் உருவான இயக்கம் அது. இன்னும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். நமது நாட்டில் அறுபது சதவிகிதம் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். நக்ஸலைட்டுகள் விரும்பும் மாறுதலைத் தேர்தல் மூலம் செய்யலாமே என்கிறார்கள். இன்று தேர்தல் ஜனநாயகத்தில் பாமரர்களுக்கு இடம் இருக்கிறதா? ஒரு லட்சம் கிராம மக்கள் மீது தீவிரவாதிகள் என்று வழக்குப் பதிவு செய்து கொடுமைப்படுத்தி வருகின்றன மாநில அரசுகள். வன்முறையில் யார் இறங்கினாலும் கண்டிக்க வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. அது அரசாக இருந்தாலும் சரி; நக்ஸலைட்டுகளாக இருந்தாலும் சரி.''



''தினமலர்'' விவகாரத்தில் எல்லா பத்திரிகையாளர்களையும் திரையுலகத்தினர்



திட்டியது சரிதானா?

ராதாரவி (நடிகர் சங்கச் செயலாளர்):

''அன்று நாங்கள் ஒன்று கூடிய போது எப்படிப் பட்ட கொந் தளிப்பு அங்கே இருந்தது என்பது பார்த்தவர்களுக்குத் தெரிந்திருக்கும். 'தினமலர்' செய்தியி னால் வேதனைப்பட்டுப் பாதிக்கப்பட்ட வர்களோ அல்லது அவர்களது குழந்தை களோ விபரீத முடிவெடுத்திருந்தால் அதற்கு யார் பொறுப்பு? இருந்தும் நாங்கள் வெளிப்படையாகவும் பொறு மையாகவும் இருக்க விரும்பினோம்.

என்ன பயன்?

எனவேதான் கூட்டத்துக்கு வலைத்தளப் பத்திரிகைகள் உட்பட எல்லோரையும் அனுமதித்தோம். 'குறிப்பிட்ட பத்திரிகை யைக் கண்டித்து கூட்டம்' என்று மேடை யின் பின்னணியில் பேனர் வைக்கப் பட்டிருந்தது. எங்கள் சக தோழியரின் தன்மானம் பாதிக்கப்படும்போது நாங்கள் கொதிப்படைவது இயற்கை. இலங்கைத் தமிழர்களின் அவலங்களைப் பேசும் கூட்டத்தில் தமிழர்கள் என்று சொன்னால் அது ஈழத் தமிழர்களைத்தான் குறிக்கும். அதுபோல அந்தக் கூட்டத்தில், ''பத்திரி கையாளர்கள்'' என்று பேசினாலும் நாங்கள் குறிப்பிட்டது அந்தப் பத்திரி கையைத்தான். கண்ணியமான நடுநிலை யான பத்திரிகையாளர்களும் பத்திரிகை களும் நிறையவே இருக்கிறார்கள். அவர்கள் என்றென்றும் எங்கள் நண்பர்கள்; நாங்கள் மதிப்பவர்கள். எனவே அவர்கள் கவலைப்பட வேண் டாம்.

ஒபாமாவுக்கு நோபல் பரிசு சரிதானா?

பேராசிரியர் ஜவாஹிருல்லா (தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகம்):

''உலக சமாதானத்துக்குப் பாடுபட்ட தற்காக ஒபாமாவுக்கு இந்த விருது என்கிறார்கள். இது எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என்று புரியவில்லை. பதவிக்கு வந்த சில மாதங்களிலேயே விருது வழங்கத் தீர்மானிக்கப்பட்டி ருக்கிறது. முந்தைய அதிபர் ஜார்ஜ் புஷ்ஷில் இருந்து வேறுபட்டு, கொள்கை அளவில் ஒபாமா எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. வேண்டுமானால், தோற்றம், நடை, உடை, பேச்சில் வித்தி யாசங்கள் இருக்கலாம். அவ்வளவுதான்.

குறிப்பாக, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் இருந்து படைகளை முற்றிலு மாக வாபஸ் பெற்று, அந்நாட்டு மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்ள ஒபாமா அனுமதிக்கவில்லை. அதுபோல அறுபது வருடங்களாக நடக் கும் பாலஸ்தீனப் போராட்டத்துக்கு எந்தத் தீர்வையும் காணவில்லை.

அமெரிக்காவைச் சேர்ந்த மார்ட்டின் லூதர் கிங்குக்கு இந்த விருது வழங்கப் பட்டபோது, உலகம் அதைப் பாராட்டியது. காரணம், அவர் உண்மையிலேயே இன வெறிக்கு எதிராகப் பாடு பட்டவர். ஆனால், உலக சமாதானத்துக்காக, ஒபாமா இன்னும் தன் முத்திரையைப் பதிக்கவில்லை.



- ப்ரியன்

ஜே.எஸ்.ராகவன்

(தீபாவளிக்காக பாமாவுக்கும் ருக்மணிக்கும் தான் செலக்ட் செய்த டிசைனர் புடைவைகள் அவர்களைக் கவரவில்லை என்று தெரிந்து கொண்ட கிருஷ்ணர், மூட் மியூசிக்காக சோக இசையை ஊத புல்லாங்குழலை எடுக்கும்போது நரகாசுரன் வந்து வணங்கி நிற்கிறான்)

கிருஷ்: அட! நரகாசுரனா? இந்த வருட தீபாவளிப் பண்டிகை பூலோகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறதா?

நரகா: பிரபோ... என்னைத் தாங்கள் வதம் செய்த நாளன்று மக்கள் மகிழ்ந்து கொண்டாட வேண்டும் என்று என் அன்னை வேண்டினாள். தாங்களும் வரம் அளித்தீர்கள். ஆனால், தற்போது பலர் அவ்வாறு செய்வதில் நாட்டமற்று இருக்கிறார்கள்.

கிருஷ்: அப்படியா? காரணம்?

நரகா: *(பெருமூச்சு விட்டு)* பூலோகத்தில் சேவல்கள்கூட விடியற்காலையில் எழுந்திருப்பதில்லை. நடு நிசி வரை டே - நைட் மாட்ச் பார்ப்பதாலோ, கால் சென்டரில் வேலை செய்வதாலோ, தீபாவளி அன்று பலர் மெள்ள ஏழு மணிக்குத்தான் எழுந்திருக்கிறார்கள், பிரபோ! அதற்குள் தீபாவளி தெருக்கோடிக்குப் போய்விடுகிறது.

கிருஷ்: அப்படியா? எண்ணெய்க் குளியலாவது உண்டா?

நரகா: மருந்துக்கு ஏதோ அங்கேயும் இங்கேயுமாக உண்டு. இப்போதெல்லாம் கங்கா ஸ்நானம் ஆச்சா என்று அவ்வளவாகக் குசலம் விசாரித்துக் கொள்வதுகூட இல்லை.

கிருஷ்: ஏன்? அதானே சம்பிர தாயம்.

நரகா: குழலோனே! மனிதர்களின் அலட்சியப் போக்கால் மாக படிந்து வரும் கங்கை



நரகாசுரன் கேட்ட போனஸ்!

யிலா நீராடுவது என்கிற சிந்தனை சில சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர்களை அவ்வாறு சிந்திக்க வைக்கலாம். அடுத்த சில தீபாவளிகளில் 'மினரல் வாட்டர் வாரியம்' சப்ளை செய்யும் குழாய் நீரில் மக்கள் குளித்தாலும் குளிக்கலாம்.

கிருஷ்: புத்தாடைகளையாவது அணிகிறார்களா?

நரகா: முன்னெல்லாம் தீவுளிக்குத் தீவுளி, பொங்கலுக்குப் பொங்கல்தான் வாங்குவார்கள். அதில் த்ரில் இருந்தது. இப்போ நினைச்சா வாங்க ஜவுளிக் கடல்கள் அலைமோதுகின்றன.

கிருஷ்: நரகாசுரா... அந்தக் கால ஒரு ஆஃப் சீஸனில் துச்சாதனன் மயங்கி விழும் வரையில் திரௌபதிக்குத் தொடர்ந்து புடைவைகளைச் சரமாரியாக அளிப்பதற்குள் திண்டாடித் திணறி விட்டேன். சரி, பட்சணங்கள்?

நரகா: பெட்டி பெட்டியாக வாங்குகிறார்கள். வழங்குகிறார்கள். ஆனால், டயட்டிங், கெட்ட கொலஸ்ட்ரால், டிரைகிளஸரைட்ஸ்னு சொல்லி பல இளைஞர்களும் இளைஞிகளும் தொடுவதில்லை. 'டயாபடீஸ் சக்கரைவர்த்தி'ப் பெருசுகள்தான் திருட்டுத்தனமாகத் தின்றுவிட்டு இன்சுலின் பரிகாரம் செய்து கொள்கிறார்கள்.

கிருஷ்: பட்டாசு?

நரகா: ஒரு சிறுவனின் கனவில் போய், "தம்பி! நீ ஏன் பட்டாசுகளை வெடிப்பதில்லை?"ன்னு கேட்டேன். அதற்கு அந்தச் சிறுவன், "நரகாசுர அங்கிள்! உங்க அப்பா விஷ்ணுவாக பாற்கடலில் இருக்கலாம். ஆனா அம்மா பூமாதேவிதானே? உங்க மம்மி மேலே ஆட்டம்பாமை வெச்சு வெடிச்சா அவங்களுக்கு வலிக்காதா?" என்று கேட்கிறான்.

கிருஷ்: அவ்வளவு விவரமாக இருக்கிறார்களா? சரி நீ வந்த விஷயம் என்ன?


நரகா: பிரபோ! எனக்குத் தீபாவளி போனஸ் வேணும்.

கிருஷ்: நரகாசுரனுக்கே தீபாவளி போனஸா?

நரகா: தீபாவளி எதிர்பார்ப்பும், கொண்டாட்டமும் தேய்மானம் அடையாமல் நிரந்தரமாக மக்கள் மனத்தில் தங்க வேண்டும்.

கிருஷ்: *(சிரித்து)* நரகாசுரா! சட்டி வாணம் அதிலுள்ள மருந்து இருக்கும் வரைதானே பூக்களாக வாரிக் கொட்டும். சந்தோஷமாக இருக்க வேண்டும் என்கிற எண்ணம் மனிதனுடைய மனத்தில் இருக்கும் வரைதான் பண்டிகைகளும் இனிக்கும். மக்களுக்காக நீ கேட்ட போனஸ் அவர்களிடமே இருக்கிறது என்பதை உன்னால் முடிந்தால் அவர்களுக்குப் புரியவை. ○

துக்கடா நியூஸ்



விஞ்ஞானி ஐன்ஸ்டீனிடம் எப்போதும் மூன்று கண்ணாடிகள் இருக்கும். அவரைக் காண வந்த நண்பர் ஒருவர், "ஏன் மூன்று கண்ணாடிகள் வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "படிப்பதற்கு ஒன்றைப் பயன்படுத்துகிறேன். மற்றொன்றைத் தூரப் பார்வைக்குப் பயன்படுத்துகிறேன்" என்றார்.

"மூன்றாவது கண்ணாடி?"

"இரண்டும் அடிக்கடி காணாமல் போய்விடுகின்றன. அவற்றைத் தேட மூன்றாவது கண்ணாடியை உபயோகப்படுத்துகிறேன்."

- மலை அரசன், வேலூர்

டாக்டர் ஏ.வி.ஸ்ரீனிவாசன்

பேசிப் பிரயோஜனமில்லை!

ஆணுக்கும் பெண்ணுக்கும் மூளை ஒரே மாதிரிதான் இருக்குமா? என்றால் அதுதான் இல்லை. அளவு, எடை என்று பல வகையிலும் வேறுபடுவதே, இருவரின் வேறுபட்ட குணம் மற்றும் நடத்தைக்குக் காரணம்.

நமது கபாலத்துக்குள்... உடைக்கப்பட்ட தேங்காயின் இரு மூடிகளைப் போல வலது அறைக் கோளம்; இடது அறைக்கோளம் என்று இரண்டு பிரிவுகளாக மூளை பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு அறைகோளத்திலும் சிறு சிறு அறைகள் உள்ளன. ஒவ்வோர் அறைக்கும் வெவ்வேறு வேலைகள். அது மட்டுமின்றி இவ்விரண்டு அறைகளும் ஒன்றோடொன்று இணைந்தும் வேலை பார்க்கும். எப்படி அது?

'கார்பஸ் கொலாஸம்' எனும் நரம்பிழை நார்கள் இவ்விரண்டையும் இணைக்கின்றன. அதனால் கட்டளைகளை வலது அறை இடதுக்கும் இடது அறை வலதுக்கும் கடத்திச் செயல்படுகின்றன.

கார்பஸ் கொலாஸம் ஆணுக்குப் பெண்ணைவிட 10 சதவிகிதம் மெல்லியதாகக் காணப்படும். அது மட்டுமின்றி இவ்விரண்டு அறைக்குமான தொடர்பும் பெண்ணைவிட ஆணுக்கு 30 சதவிகிதம் குறைந்து இருக்கும். அதனாலென்ன? இருங்க சொல்றேன்...

ஒன்று தெரியுமா?

உலகம் முழுக்க நடத்திய கருத்துக் கணிப்பில் பெண்கள்.... ''என் கணவன் புத்தகமோ, செய்தித்தாளோ படித்துக் கொண்டிருக்கும்போது, நான் என்ன சொன்னாலும் அவரால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை'' என்ற குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆனால் பெண்கள் அப்படியில்லையே ஏன்?

காதுக்கும் தோளுக்கும் இடையே செல்லைச் செருகிக் கொண்டும் தலையைச் சாய்த்துக்கொண்டும் பேசிக் கொண்டிருப்பாள். இரு கையும் அடுப்பில் வேலை பார்த்துக்



மிஸ்டர் & மிஸ் மேல்மாடி

சீக்ரெட் ஆஃப் ப்ரெய்ன்-2

கொண்டிருக்கும். 'வாசல்ல எவ்வளவு நேரமா பெல் அடிக்குது யார்னு பார்க்கக்கூடாதா?' என்பாள். இதற்கிடையே பாடத்தைத் தப்பாய் ஒப்பிக்கும் பிள்ளையைத் திருத்துவாள்.

அஷ்டாவதானிதான், ஒவ்வொரு பெண்ணும். ஒவ்வொரு வீட்டிலும் அரக்கப் பரக்க ஓடும் காலை வேளையில் இந்தக் காட்சியைப் பார்த்தோர் குறைவு.


இதே அந்த வீட்டு ஆண் என்ன செய்வார்? டீ.வி. பார்த்துக் கொண்டிருக்கும்போது ஃபோன்



வந்தால் அவர் செய்வது முதலில் டீ.வி.யை ஆஃப் செய்வதுதான். அதேபோல் பேப்பர் படிக்க உட்காரும்போதும் முதலில் டீ.வியை ஆஃப் செய்து விடுவார். ஒரு சமயத்தில் ஒரு விஷயத்தில்தான் கவனத்தைக் குவிக்க முடியும் அவரால்.

''இப்படி, பேசிட்டே வந்தா ரூட் தப்பாம என்ன பண்ணும்? பாரு மூணாவது ரைட் எடுக்க ரெண்டாவது ரைட் எடுத்துட்டேன். கொஞ்சம் வாயை மூடிட்டு வாயேன் சுதா'' என்று சலித்துக்கொள்வார் கார் ஓட்டும்போது.

''இப்பதான் உனக்குப் பேச நேரமா? இங்க பாரு'' என்று ஷேவ் செய்துகொண்டிருக்கும்போது கன்னத்தில் கட் செய்துகொண்டு முறைப்பார்.



நம் மூளை 1400 கோடி நரம்பு செல்களால் ஆனது. மூளையும் தண்டு வடமும் சேர்ந்ததுதான் மூளையின் நரம்பு மண்டலம். இவை மூன்றடுக்கு உறையால் போர்த்தப்பட்டிருக்கும். போர்வை போன்ற இதற்கு 'மெனிஞ்சஸ்' என்று பெயர். முன் மூளை, நடு மூளை, பின் மூளை என்று மூன்று பகுதிகளாக மூளை பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் ஆண் ஆழ்ந்து ஏதாவது வாசித்துக்கொண்டிருக்கும்போது அவனது மூளையைப் பரிசோதித்தால் இதற்கு விடை கிடைத்துவிடும். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

அவ்வாறு பரிசோதித்துப் பார்த்தபோது படிக்கும் நேரம் மட்டும் கிட்டத்தட்ட அவன் செவிடாக இருப்பதாய் ஆராய்ச்சி அறிவிக்கிறது.

அதேசமயம் தூங்கும்போதுகூட பெண்ணின் மூளை ஆண் மூளையைவிட 30 சதவிகிதம் அதிக சுறுசுறுப்பாக இருக்கிறதாம். அதனால்தான் ஆழ்ந்து தூங்கும்போதுகூட கணவனின் குறட்டையையும் மீறி குழந்தையின் சிறு சிணுங்கலையும் கண்டு கொள்ள முடிகிறது பெண்ணால்.

இப்போது புரிகிறதா... ஏன் இப்போது பேசிப் பிரயோஜனம் இல்லை என்று.

அதனால்தான் கவனத்தைக் குவித்து வேலை செய்யும் தொழில்நுட்பக் கலைஞர்களெல்லாம் பெரும்பாலும் ஆண்களாக இருக்கிறார்கள். ஒரே சமயத்தில் பல வேலை செய்யும் ஆஃபீஸ் செகரெட்டரியாகப் பெரும்பாலும் பெண்களே இருக்கிறார்கள்.


சரி... ஆபீஸிலிருந்து திரும்பிய பிறகு இவர்கள் (கணவன்/மனைவி) வீட்டில் நடத்தும் சம்பாஷணையும் விஸ்வரூபமெடுக்கும் பிரச்னையும் என்ன? என்னதான் தீர்வு?

(அலசுவோம்!)

எழுத்தாக்கம்: **லஷ்மிமோகன்**



கல்கி



2009 அக்டோபர் 25
விரோதி ஐப்பசி 8
மலர் : 68
இதழ் : 13


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

வேண்டாம் உள்நாட்டு யுத்தம்!

மாவோயிஸ்ட், நாக்ஸல் அச்சுறுத்தல் மிக அதிகமாக இருப்பது நமது நாட்டின் மிகப் பின்தங்கிய மாவட்டங்களில்தான் என்பதை மத்திய அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. அடுத்த மாதம், 40,000 வீரர்களைக் கொண்டு நாக்ஸல்கள் மீது கூட்டுத் தாக்குதல் நடத்துவதற்கு இருபது மாநிலங்களில் உள்ள பின்தங்கிய மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருப்பதாக அறிவிப்பும் செய்திருக்கிறது!

பின்தங்கிய மாவட்டங்களில் புரட்சி இயக்கங்கள் உருவாகி, அவை வன்முறைக் கூட்டங்களாக மாறுவது என்பது இன்று நேற்றைய கதையல்ல! நாக்ஸல் இயக்கம் படிப்படியாக வளர்ந்து பரவியபோது அரசு வேடிக்கை பார்த்தது. அவ்வியக்கத்துக்கு மூல காரணம் சமூகத்தில் நிலவும் கடும் ஏற்றத்தாழ்வும் அநீதியும்தான் என்பதை உணர்ந்தும், காரணங்களைக் களைவதற்குப் பதிலாக இயக்கத்தை ஒடுக்க தாமதமாக முற்பட்டது. தற்காலிகமாக ஒடுக்கப்பட்ட இயக்கம், மீண்டும் தலைதூக்கியிருக்கிறது மாவோயிஸ்ட்டுகள் வடிவில்!

இப்போது அரசு மீண்டும் பழைய தவறையே செய்ய முற்பட்டிருக்கிறது! எதிர்ப்புப் பிரகடனங்களும் அச்சுறுத்தல்களும் வன்முறை இயக்கங்களை மேலும் தூண்டுமே தவிர அவற்றைக் கட்டுப்படுத்தாது; மனமாற்றத்தை உருவாக்காது. ஓர் இடத்தில் ஒடுக்கப்பட்டால் வேறொரு இடத்தில் சீறி எழும். இவ்வியக்கங்கள், பின்தங்கிய மாவட்டங்களில் வறுமையில் வாடும் மக்களின் ஆதரவுடன்தான் தழைக்கின்றன. அந்த மக்களின் வாழ்வை அவ்வியக்கங்களால் மலர்விக்க இயலாது என்பது உண்மையே! எனினும் இதனை உணரும் ஆற்றலோ சிந்தனைத் தெளிவோ எளிய மக்களுக்கு இராது. இந்த இயக்கங்கள்





வழங்கும் தற்காலிக உதவிகளிலும் தார்மிக ஆதரவிலும் அவர்கள் மயங்கிப் போகிறார்கள். நீண்ட நெடுங்காலமாகத் தங்களை உதாசீனப்படுத்திய அரசின் மீது உள்ள கோபமும் அவநம்பிக்கையும் அவர்களை வன்முறை சார்ந்த இயக்கங்கள் நோக்கித் திருப்புகின்றன.

மாவோயிஸ்டு, நாக்ஸல் இயக்கங்களுக்கு அயல்நாட்டு (சீன) ஆதரவும் உதவியும் கிடைத்து வருகின்றன என்பதும் ஊரறிந்த ரகசியம். அரசு இதையும் உணர்ந்து ஒப்புக்கொண்டே தனது எதிர்நடவடிக்கையைக் கவனமாக உருவாக்க வேண்டும்.

நாக்ஸலைட்டுகளை ஒடுக்கிய கையோடு வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி, பின்தங்கிய பகுதிகளில் பழங்குடியினர் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கவிருப்பதாக உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி கூறியிருக்கிறார்! இது அலை ஓய்ந்து சமுத்திர ஸ்நானம் செய்கிற கதையாகவே முடியும்.

பதுங்கிப் பாயும் நாக்ஸலைட்டுகள் மீதோ மாவோயிஸ்ட்டுகள் மீதோ அரசு வெளிப்படை யுத்தம் நடத்த முடியாது. அவர்களுக்கு அளிக்கப்படும் அயல்நாட்டு உதவியை நிறுத்த, முதலில் அயலுறவுத்துறை மூலம் பேச்சுவார்த்தை நடத்தி, சீனா, மியான்மார் போன்ற நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும். அதேசமயத்தில் இவ்வியக்கங்கள் வேரூன்றியுள்ள பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படவும் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். தாங்கள் புறக்கணிக்கப்படவில்லை என்கிற உணர்வை இந்த மக்களிடையே கவனமாக, நுண்ணுணர்வுடன் ஏற்படுத்த வேண்டும். இதை வெற்றிகரமாகச் செய்கிறபோது, வன்முறை இயக்கங்கள் தாமாகவே வலிமை இழக்கும். அந்தக் கட்டத்தில் அவ்வியக்கத்தினரையும் தேசிய நீரோட்டத்தில் கலக்கச் செய்வது சாத்தியமாகும். இப்போதைய அரசு தவறான முனையிலிருந்து பணியைத் தொடங்குகிறது. உடனே திருத்திக் கொள்ளாவிட்டால் விளைவுகள் விபரீதமாக இருக்கும்! ●

குமரன் குன்று!

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் எனச் சொல்லியிருப்பதை மெய்ப்பிக்கும் இரத்தினகிரி மலை. மன்னிக்கவும்... அதனை மலை என்று சொல்ல முடியாது. சிறு குன்று. வேலூரிலிருந்து ஆற்காடு சாலையில் பன்னிரண்டு கி.மீ தூரத்தில் உள்ளது இரத்தினகிரி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்.

முருக பக்தர்கள் அவசியம் சென்று வர வேண்டிய கோயில். தரையிலிருந்து நூற்றியெழுபத்து ஏழு படிகள். குன்றேறி குமரனைத் தரிசிக்க படி வழியே இணையாக இரு பாதைகள். ஒன்று மேலேறிச் செல்ல. இன்னொன்று கீழிறங்கி வர. இடையிலே இரு இடங்களில் இளைப்பாறும் மண்டபங்கள். வழிப்பாதையில் வெயில் சுட்டெரிக்காதிருக்க மேலே பிளாஸ்டிக் தகடுகளால் ஆன கூரைகள். குறைந்த அளவு படிகளிலும் ஏறி இறங்க முடியவில்லையா? அந்த மிகச் சிறிய குன்றுக்கு சாலை வசதி. மூன்று கொண்டை ஊசி வளைவுகளில் மோட்டார் வாகனங்களில் பயணித்தால் வந்துவிடுகிறது குன்றின் உச்சியில் கோயில் வாசல்.




இரத்தினகிரி கோயிலைப் பக்தர்களின் வசதிகளுக்காக ஹைடெக் பாணியில் பிரமாண்டமாக வடிவமைத்துள்ளார் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள். திருக்கோயிலில் மட்டும் அல்லாது, கிராமப்புற பொதுமக்கள் நலனுக்காக இயங்கி வருகிறது இரத்தினகிரி ஊரக மருத்துவமனை; இரண்டு ஆம்புலன்ஸ் வண்டிகளுடன். இரத்தினகிரி மெட்ரிகுலேஷன் பள்ளி கல்விப் பணியில் இயங்கி வருகிறது.

இரத்தினகிரி குன்றில் புதிய பகுதிகள் கட்டி முடிக்கப் பதினேழு ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன. மலைப்பாதைச் (கொண்டை ஊசி வளைவு) சாலை மட்டுமே முப்பது லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. 2003ல் கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. தற்போது புதிய அறுகோண தெப்பக்குளத்தில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. முருகன் அழகு நிறைந்தவன். அவன் வீற்றிருக்கும் இத்திருக்கோயிலும் அழகு. மிக அழகு!

வாசகர் யோசனை: கார்த்திகா ஆதித்தன்




Ink for better Printing
GRAPHIKOLOR
No. 3, Veeramamunivar Street, Kandanchavadi,
Perungudi (Post), Chennai - 600 096.

நட்சத்திர சிறுகதை 2


கோல்கொண்டா

நான்கு ஆண்டுகள் எனக்கு ஆங்கிலப் பாடம் ஸாலர் ஜங்க் ஹாலில்தான் நடந்தது. அந்தக் கல்லூரியை இணைத்து ஒரு உயர்தரப் பள்ளிக்கூடமும் இருந்தது. நிஜாமுடைய இரு பேரன்கள் அங்கு படித்துக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு மேல் நான் அதிகம் தெரிந்துகொள்ள முயற்சி செய்யவில்லை. நாற்பது ஆண்டுகள் கழித்து ஸாலர் ஜங்க் மியூசியம் சென்றபோதுதான் எனக்கு ஆங்கிலப் பாடங்கள் ஒரு கலா ரசிகர் பெயர் கொண்ட அறையில் நடந்தது என்று தெரிந்தது. சமீபத்தில் அந்த இரு நிஜாம் பேரன்களில் ஒருவர்தான் எட்டாவது (கடைசி) நிஜாம் என்றும் தெரிந்தது. அந்த மனிதருடைய புகைப்படங்களைப் பார்த்தேன். ''என்னால் என்ன செய்ய முடியும்?'' என்று கூறுவது போலிருந்தது. வரிசையாக மணந்த மனைவிகளில் ஒருத்திதான் இப்போது ஒரு நிஜாம் மாளிகையைப் புதுப்பித்து அதை ஒரு சுற்றுலா இடமாக மாற்றியிருக்கிறாள். அங்கிருக்கும் அரிய ஓவியங்களையும் அலங்கார நாற்காலி சோபாக்களையும் லஸ்தர் விளக்குகளையும் பார்க்க ஐம்பது ரூபாய் நுழைவுக் கட்டணம்.

பாமினிப் பேரரசு உடைந்து ஐந்து சிறு அரசுகளாகப் போனதில் கோல்கொண்டாவும் ஒன்று. அப்போது அதிகாரப் பீடம் கோல்கொண்டாவில்தான் இருந்தது. அந்தக் கோட்டையை அரசு பீடமாக வைத்துக் கொண்டவர்கள் நிஜாமுக்கு மூதாதையர்கள் அல்ல. பாமினி அரசர்களின் கிளை. பாரசீகத்தை மூல நாடாகக் கருதியவர்கள்.



பாரசீகத்துக்கும் கோல்கொண்டாவுக்கும் அதிக ஒற்றுமை இல்லை. ஆனால், ஹைதராபாத் நகரத்தை நிர்மாணித்து ஏராளமான ஏரிகளையும் கோல்கொண்டா கோட்டையையும் வலுப்படுத்தியவர்கள் இந்தக் குடுப் ஷாஹி வம்சத்தினர். நிஜாம் அரசு இருந்த வரை இவர்கள் கல்லறைகள் பரிதாபகரமாக இருந்தன. இப்போது இவையும் புதுப்பிக்கப்பட்டு அங்கு ஒரு தோட்டமும் அமைக்கப்பட்டிருக்கிறது. கோட்டை பெரும்பாலும் பாமினி அரசர்களும் குடுப் ஷாஹி அரசர்கள் வசமும் இருந்தாலும் அவ்வப்போது விஜயநகர அரசின் கைவசமும் சென்றிருக்கிறது.



அசோகமித்திரன்

டானாஷா கோல்கொண்டாவை ஆண்டபோது அவனிடம் பல இந்து அதிகாரிகள் இருந்தார்கள். அதில் ஒருவர்தான் ராமதாஸர் என்று அறியப்படும் கோபண்ணா. கோல்கொண்டாவில் ஒரு குகையில் அவர் சிறை வைக்கப்பட்டிருந்தார். காரணம், தாசில் பணத்தை அரசு கஜானாவில் சேர்க்காமல் மலைக் கோயிலைப் புதுப்பிக்கப் போய்விட்டார்.



நட்சத்திர சிறுகதை

அவரால் பாதுஷாவுக்கு ராமதரிசனம் கிட்டியது என்பார்கள்.

எல்லாமாகச் சேர்ந்து, ஔரங்கசீப்புக்கு டாணாஷாவை நிம்மதியாக இருக்கவிட மனமில்லை. அத்தோடு டில்லி அரசன் யாராயிருந்தாலும் ஒரு முறை தக்காணத்தின் மீது படை எடுக்காவிட்டால் அவன் டில்லி பாதுஷாவே இல்லை. ஔரங்கசீப் அரசனாவதற்கு முன்பே ஒரு முறை கோல்கொண்டாவைத் தாக்கிக் கப்பம் கட்ட வைத்தவன்.

இன்று கோல்கொண்டா கோட்டை அதன் பழைமை பாதிக்காத வகையில் சீர்செய்யப்பட்டுவிட்டது. முன்பு நிஜாம் காலத்தில் நுழைவுக் கட்டணம் கிடையாது. இப்போது உண்டு. பாதிக் கோட்டை ஏறினால் பாராதரி என்று ஒரு கட்டிடம். அதையும் தாண்டி மேலே ஏறினால் ராமதாஸின் சிறை. உச்சியில் இப்போதும் பழைய அரண்மனையின் சிதிலங்கள் உள்ளன.

இருட்டின் பிறகும் கோல்கொண்டா கோட்டைக்குப் போகலாம். அப்போது தான் ஆங்கிலம், ஹிந்தி என்று இரு மொழிகளில் மாறி மாறி ஒலி-ஒளிக் காட்சி. பிரமிப்பாக இருக்கும்; அந்தக் குரல் கூட. காரணம், அமிதாப் பச்சன்.

ஒலி-ஒளிக் காட்சியில் டாணாஷாவுக்கு மற்றவர்களைவிட அதிக நேரம். குலி குதுப்ஷா என்ற இளவரசன் பாக்மதி என்ற பெண்ணைச் சந்திக்கத் தினமும் மூஸி நதியைக் கடக்க வேண்டியிருக்கிறதே என்று இப்ராகிம் குதுப்ஷா ஒரு பாலம் கட்டினான். அந்த மனிதனுக்கு தசரதன் கதை தெரிந்திருக்கும். மகனுக்காகத் தசரதன் உயிரையே விட்டவன் அல்லவா?

அமிதாப் பச்சனும் டாணாஷாவின் முக்கிய அமைச்சர் மாதண்ணா பற்றிச் சிறிது கூறினார். ஒரு நல்ல அமைச்சர் கிடைத்து விட்டால் அரசன் பெரும் புகழும் செல்வாக்கும் பெற்றுவிடுகிறான். மாதண்ணா கோபண்ணாவின் தாய்மாமன் உறவு.



'வேலூர்'கள் : கழிஞ்சூர், அரியூர், அத்திபூர் போன்ற ஊர்கள் சோழர்கள் காலத்தில் உண்டானவை. வேலப்பாடி, தொரப்பாடி, காட்டுப்பாடி போன்ற ஊர்கள் பல்லவர் காலத்தில் உண்டானவை. சங்கரன்பாளையம், புதுப் பாளையம், அம்மாபாளையம் போன்ற ஊர்கள் விஜய நகரப் பேரரசு காலத்தில் உருவானவை. இராணிப் பேட்டை, வாலாஜாபேட்டை, சைதாப் பேட்டை போன்ற ஊர்கள் ஆற்காட்டு நவாப் காலத்தில் உருவானவை.

- அ.யாழினி பர்வதம்

ஔரங்கசீப்பின் முற்றுகை தொடங்கி ஒரு வாரம் முடிந்துவிட்டது. கோட்டை மதில் மீது டாணாஷாவின் சிறு பீரங்கிகள் ஔரங்கசீப்பின் படைகளுக்குள் சேதத்தை விளைவித்தன. முகலாயப் படையிலிருந்து ஒரு குதிரைவீரன் வெள்ளைக் கொடி தாங்கிக் கோட்டைக் கதவருகே வந்து விட்டான். கோட்டைக் கதவின் சிறிய துவாரம் வழியாக அவனை உள்ளே விட்டார்கள். உடனே இருவர் அவன் கண்ணைக் கட்டினார்கள். அவன், ''நான் ஆலம்பனாவின் தூதன். அவருடைய செய்தியை உங்கள் ஷாவிடம்தான் தெரிவிக்க வேண்டும்'' என்றான்.

அவன் ஏதாவது ரகசிய ஆயுதம் வைத்திருக்கிறானா என்று பரிசோதித்தார்கள். பின்னர் அவனை மாதண்ணா முன் நிறுத்தினார்கள்.

''எதற்காக வந்திருக்கிறாய்?''

''யாரது? ஹுஸூரா?''

''இல்லை. அவருடைய திவான்.''

''நான் ஹுஸூரைத்தான் பார்க்க வேண்டும்.''

''எதற்கு?''

''நான் முகலே ஆஜமிடமிருந்து கொண்டு வந்த செய்தியைத் தெரிவிப்பதற்கு.''

''உன்னிடம் ஓலை ஒன்றும் இல்லையே?''

''எங்கள் பாதுஷா ஓலைகள் எழுதுவதில்லை.''

''நீ அவரிடமிருந்துதான் வந்தாய் என்று என்ன சாட்சியம்?''

''நான் அவருடைய அடிமை. என் மார்பில் அவருடைய முத்திரை பதித்திருக்கிறது.''

எப்போது சூடுபோட்டதோ, அவனுடைய மார்பில் பிறையும் நட்சத்திரமும் மங்கலாகத் தெரிவித்தன.

''அடிமையே, நீ என்னிடம் சொல்லலாம். என்னிடம் சொன்னால் எங்கள் எஜமானனிடம் சொன்ன மாதிரிதான்.''

''இல்லை, உங்கள் எஜமானனிடம்தான் சொல்ல முடியும்.''

''உன்னிடமிருந்து செய்தியை வரவழைத்து விடலாம்.''

அந்த அடிமை அலட்சியமாகச் சொன்னான். ''என் உடலெல்லாம் சூடுபோட்ட அடையாளங்களும் சவுக்கடி அடையாளங்களும் உள்ளன. என் கண்ணைக் கட்டியிருக்கிறது. நீங்கள் பார்க்கலாம். நான் பார்க்க முடியாது. ஆனால் யாருமே பார்க்க முடியாதது என் தலைக்குள் இருக்கிறது.''

மாதண்ணா தன் உதவியாளர்களிடம் தெலுங்கில் சொன்னான்: ''இவன்







உண்மையான நிரன். ராஜாவிடம் அழைத்துப் போங்கள்.''

அங்கும் அந்த அடிமை பிடிவாதம் பிடித்தான். ''உங்கள் எஜமானன் காதில் தான் சொல்வேன்.''

அவன் கைகால்களைக் கெட்டியாகக் கட்டி அவனை ஒரு மேடை மீது கிடத்தினார்கள். டாணாஷாவுக்குப் பொறுமை இல்லை. ''இன்னும் எதற்கு இவனை உயிரோடு வைத்திருக்கிறீர்கள்?'' என்று கோபித்தான்.

''இப்போது யாருமில்லை. சொல்லு.''

''என் முகத்தருகே வாரும், ஹுஜூர்.''

''போதுமா?''

அவன் சொன்னது டாணாஷாவை வெகுண்டெழச் செய்தது. கை தட்டினான்.

''இவனைக் கோட்டைக்கு வெளியே தூக்கி எறிந்து விடுங்கள்!''

அந்த அடிமை வெளியே எடுத்துச் செல்லப்பட்டவுடன் மாதண்ணா டாணாஷாவைப் பார்த்தான். ''சமாதானம் ஏற்படுமா?'' என்று கேட்டான்.

டாணாஷா மாதண்ணாவை உற்று நோக்கினான். ''எனக்குத் தெரியவில்லை.''

''அவர்கள் இன்னும் முறையான தாக்குதல் ஆரம்பிக்கவில்லை. அவர்களுடைய ஆள்பலம் மிகப்பெரிது.''

''என்னை இப்போது தனியாக விடு, மாதண்ணா. சிறிது நேரத்துக்குப் பிறகு கூறுகிறேன்.''

டாணாஷா எப்போதும் அந்த மாதிரிப் பேசியது கிடையாது. மாதண்ணாவும் கலக்கத்துடன் வெளியே போனான்.

முற்றுகை தீவிரமாயிற்று. இப்போது ஔரங்கசீப்பின் படைகள் பல திசைகளிலிருந்து பீரங்கி வெடித்தார்கள். கோட்டைக் கதவைப் பிளக்க ஒரு வேப்ப மரத்தை வெட்டிக் கிளைகளைக் கழித்து விட்டு ஒரு நீண்ட உலக்கையாகச் செய்து கொண்டிருந்தார்கள். இந்த உலக்கையை ஒரு உயரமான ஊஞ்சல் போன்று செய்து தொங்க விடுவார்கள். உலக்கையை நீள வாட்டில் ஆட்டினால் அது கதவைத் தாக்கும். இந்த முயற்சியில் நிறைய ஆட்சேதம் இருக்கும். கோட்டை மதிலிலிருந்து கீழே உள்ளவர்களை எளிதாகக் கொன்று விடலாம். ஒரு குழு வீழ்ந்தால் உடனே இன்னொன்று ஊஞ்சலிடம் செல்லவேண்டும்.





இரு நாட்கள் கழித்து மீண்டும் ஓர் அடிமை வெள்ளைக் கொடியைத் தூக்கி வந்தான். அவனும் முதல் அடிமை போலவே நேரில்தான் சொல்வேன் என்பதில் உறுதியாக இருந்தான்.

இம்முறை டாணாஷா அந்த அடி

மையை அடித்துவிட்டான். அவனை வெளியேற்றிய பிறகு குழப்பத்தில் யார் யார் மீதோ எரிந்து விழுந்தான். மாதண்ணா விசாரித்தான்.

''உனக்கு ஒன்றுமில்லை, போ.''

''நான் எப்படிப் போவது? கோட்டை காப்பாற்றப்பட வேண்டும். நம் மக்கள் காப்பாற்றப்பட வேண்டும்.''

''அப்படியானால் உன் தலையை வெட்டிக் கொண்டு வா!''

''என்ன சொல்கிறீர்கள், ஹுஜூர்?''

''இதைத்தான் அந்த முகல் சொல்கிறான். நான் ஏகப்பட்ட காபிர்களை அமைச்சர்களாக வைத்திருக்கிறேனாம்.''

''இதையா குற்றம் என்கிறார்? ஏன்? அவரிடமே நிறைய தளபதிகள் ரஜபுத்திரர்கள்தானே?''

''அவனுக்கு உன்னைப் பிடிக்கவில்லை.''

''என்னைத் தெரியவே தெரியாதே?''

"மாதண்ணா, என் கோபத்தைக் கிளறாதே. போ உன் வீட்டுக்கு. வெடிமருந்து கிடங்கைக் கவனி."

''தெரிந்துதான் உன் தலையைக் கேட்கிறான்.''

''மறுபடியும் மறுபடியும் தலை பற்றிக் கூறுகிறீர்களே?''

''உனக்கு ஒன்றுமில்லை, போ. நான்தான் கல்தான். இது இரண்டு கல்தான்கள் விஷயம்.''

''நான் அப்படி விட்டுவிட முடியுமா?''

''மாதண்ணா, என் கோபத்தைக் கிளறாதே. போ உன் வீட்டுக்கு. வெடிமருந்து கிடங்கைக் கவனி.''

மாதண்ணா சில விநாடிகள் அசைவற்று நின்றான். டாணாஷாவின் வேதனை அவனுக்குத் தாங்க முடியவில்லை.

இரவு கோட்டையில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் விளக்கெரிந்தது. மதில் மீதிருந்தவர்கள் மட்டும் ஒருவர் மாற்றி ஒருவர் தூங்கப் போனார்கள்.

டாணாஷா வெகு நேரம் தூங்கவில்லை. அவனுடைய இரண்டாவது பேகம் அவன் அறைக்கே உணவு கொண்டு வந்தாள். அவளையும் டாணாஷா போகச் சொல்லிவிட்டான். இன்னும் ஓரிரு நாட்களில் ஔரங்கசீப்பின் படைகள் முழு வேகத்துடன் தாக்கத் தொடங்குவார்கள். அப்போது தாக்குப் பிடிக்க முடியுமா? டாணாஷா மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்தான். அப்படியே தரையில் படுத்தான். தூங்கியும் விட்டான்.

அவன் கண் விழித்தபோது இன்னும் பொழுது விடியவில்லை. கோட்டையின் தெற்கு வாசலிலும் தாக்குதல் தொடங்கி விட்டார்கள். அங்கும் ஒரு பீரங்கி ஒரு முறை வெடித்து ஓய்ந்தது.

கூரையிலிருந்து தொங்கிய திரைச்சீலை ஒன்றை டாணாஷா ஒதுக்கினான். பக்கத்து அறையின் விளக்கு அவனறையையும் செறிந்து ஒளியூட்டியது. அவன் பிரார்த்தனை செய்த இடத்துக்கு அருகாமையில் புதிதாக ஓர் அலங்காரப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அது நிச்சயம் டாணாஷாவின் அரண்மனையுடையது அல்ல. பெட்டி மீது இந்து மத அலங்கார ஜோடனைதான் இருந்தது.

டாணாஷா பெட்டியருகே சென்றான். பெட்டி கனமாகத்தான் இருக்க வேண்டும். இருபுறமும் ஆட்கள் தூக்கிச் செல்ல வசதியாகப் பிடிகள் இருந்தன.

டாணாஷா பெட்டியைத் திறந்தான். ஏதோ ஒரு பொருளைப் பட்டுத் துணி போட்டுப் போர்த்தியிருந்தது. நிறைய வாசனைத் திரவியத்தைப் பெட்டியில் பயன்படுத்தியிருந்தார்கள்.

டாணாஷா துணியை விலக்கினான். பெட்டியில் மாதண்ணாவின் தலை இருந்தது.

●

தீபாவளிக்கு 150 புதிய பட்டாசு ரகங்கள் அறிமுகம்.

அதுல ஒண்ணாச்சியும் நம்ம அரசியல் வாண வேடிக்கைங்க கால் தூசுக்குப் பெறுமா?!

ரேஷன் பற்றிய புகார்களுக்குப் புதிய ஹெல்ப் லைன்.

கியூ ரேஷன் கடை வரிசையைவிட நீளமா இருக்குமா?

அரியலூர் அகழ்வாராய்ச்சி களத்திலிருந்து பொது மக்கள் டைனோசர் முட்டைகளை அள்ளிச் சென்றனர். (நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில்)

ஒண்ணு - இரண்டு குஞ்சு பொறிச்சிருந்தா என்ன செஞ்சிருப்பீங்க...?

தெரியாமத்தான் கேட்கறேன்



அரைகுறை வைத்தியர்களுக்கு எதிராக நடவடிக்கை தேவை.

- குடியரசுத் தலைவர்

முழுசா படிச்ச வசூல் ராஜாக்களுக்கு எதிரா என்ன தேவை?

கிராமப்புற மக்களுக்குத் தொலைத் தொடர்பு வசதிகள் கிடைக்க அனைவரும் பாடுபடுவோம். **- அ.ராசா**

அதுக்கப்புறம் கழிப்பறை வசதி கட்டாயம் கிடைச்சுடுமா?

அஸாருதின் (மொராதாபாத் தொகுதி எம்.பி., முன்னாள் கிரிக்கெட் வீரர்) உ.பி.கிராமங்களுக்கு, பிரியாணி சமைக்கும் நிபுணர்களை அழைத்துச் சென்றார். கோழி பிரியாணி, கபாப் போன்று தினுசு தினுசாக மாமிச உணவுகள் சமைக்கச் செய்து கிராம மக்களுடன் விருந்து உண்டார்.

அட்றா சக்கை! தேர்தல் வர்றதுக்குள்ள எல்லா கிராமங்களையும் கவர் பண்ணிடுவீங்களா?

பதுக்கல், கள்ளச் சந்தையைக் கட்டுப்படுத்தி விலைவாசியைக் குறைப்போம்.

- பிரதமர்

அதுக்கப்புறமா எப்படி பொழுது போக்குவீங்க?

தனியார் நிறுவனங்கள் தங்கள் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கு ஆபாசமான ஊதியம் தருவதை நிறுத்த வேண்டும்.

- மத்திய அமைச்சர் ஸல்மான் குர்ஷித்

அரசியல்வாதிங்க அனுபவிக்கிற சலுகைகளும் வாங்கற லஞ்சமும் அழகுணர்ச்சியில குளிச்சு எழுந்திருச்சுருக்குதா?

சுருளிப்பட்டி தைலா

மேஷம் : பணவசதி பெருகும். பொன் பொருள் வாங்குவீர்கள். கடன் தொல்லை தீரும். உடல்ஆரோக்கியம் பாதிக்காது. வராத நிலுவை வசூலாகும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் வாங்குவீர்கள். வெளிநாட்டிலிருந்து அழைப்பு வந்து சேரும். சனி பகவானுக்கு சனிக்கிழமை தோறும் தீபம் ஏற்றி வந்தால் சங்கடங்கள் தீரும்.

ரிஷபம் : மற்றவர்களிடம் வாக்குவாதம் தவிர்க்கவும். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வாகனங்களில் போகும்போது உஷார். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வந்தால் அனுகூலம் உண்டாகும்.

மிதுனம் : தடைப்பட்டு வந்த காரியங்கள் வெற்றி பெறும். வழக்கு முடிவுக்கு வரும். கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த மனக்கசப்பு விலகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். வியாபாரம் க று க று ப் பு



நடக்குமென்பார்;



பெறும். வேலையில் மாற்றம் ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். உடல் நிலை சீராகும். ராகு/கேது/சனி வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

கடகம் : வேலையில் ஊதிய உயர்வு கிட்டும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். நண்பர், உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். வாக்குவன்மை மேலோங்கும். உடன்பிறப்புகள் உதவுவார்கள். தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படும். வியாழக்கிழமைதோறும் குரு வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.

சிம்மம் : தொலைதூரப் பயணங்கள்

வந்து சேரும். கடன் தொல்லை தீரும். குழந்தைகள் வழியில் சுப காரியம் நடக்கும். மனசஞ் சலம் தீரும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். ராகு / கேது / சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.

கன்னி : பணி இடமாற்றம் வந்து சேரும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். நண்பர், உறவினர்கள் மூலம் நற்பலன் கிட்டும். சொத்து சுகம் வந்து சேரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். சனிக்கிழமை தோறும் சனி பகவானுக்கு தீபம் ஏற்றி வர சங்கடங்கள் தீரும்.

துலாம் : சுபகாரியம் நடக்கும். புண்ணிய



நடக்கும்!

ஸ்தலம் செல்வீர்கள். கடன் சுமை தீரும். குழந்தைகள் மூலம் மன சந்தோஷம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். திடீர்ப் பிரயாணம் வந்து சேரும். சனிக் கிழமைதோறும் ஆஞ்சநேயருக்கு தீபம் ஏற்றி வர நற்பலன் பெருகும்.

விருச்சிகம் : பேச்சில் கவனம் தேவை. வாகனங்களில் செல்லும்போது உஷார். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. நெருங்கிய கூட்டாளிகளை விட்டு விலக நேரிடும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பண விஷயத்தில் ஜாக்கிரதை. வேலைப் பளு அதிகரிக்கும். ராகு / கேது / குரு வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

தனுசு : நீண்டகாலக் கனவு நிறை

தஞ்சை பரத்வாஜ்

வேறும். பல எதிர்ப்புகளை மீறி வெற்றிக் கொடி நாட்டுவீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்ப வாழ்வில் இருந்து வந்த மன சஞ்சலம் தீரும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். வழக்கு வெற்றி பெறும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர சங்கடம் தீரும்.

மகரம் : பணவசதி பெருகும். பொன் பொருள் வாங்குவீர்கள். கடன் சுமை தீரும். வழக்கு வெற்றி அளிக்கும். வராத நிலுவைகள் வசூலாகும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். வெளிநாட்டிலிருந்து அழைப்பு வந்து சேரும். சனி பகவானுக்கு சனிக்கிழமைதோறும் தீபம் ஏற்றவும்.

கும்பம் : மன தைரியம் மிகுதியாகும். வராத பாக்கிகள் வசூலாகும். கடன் சுமை குறையும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். பூர்வீகச் சொத்து கைக்கு வந்து சேரும். படிப்பில் முன்னேற்றம் உண்டாகும். நீண்ட தூரப் பிரயாணம் வந்து சேரும். ராகு / கேது / சனி / குரு வழிபாடு செய்து வர நன்மை உண்டாகும்.

மீனம் : உத்தியோகத்தில் இடமாறுதல் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். குழந்தைகள் பற்றின மனக்கவலை தீரும். புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். வீட்டில் சுபச் செலவுகள் ஏற்படும். மன அமைதி கிட்டும். பண வருவாய் பெருகும். கல்வி வளம் மேலோங்கும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்துவர நன்மை உண்டாகும்.

18.10.09 முதல் 24.10.09 வரை

விரல்களின் நட்சத்திரம்!

ட்ரெண்டியா ட்ரஸ், நல்ல மேக்கப், லேட்டஸ்ட் ஹேர் ஸ்டைல்... இவை மட்டும் பியூட்டிஃபுல் அப்பியரன்ஸுக்குப் போதாது. கை கால் நகங்கள் க்ளீனாக, நன்றாக ஷேப் செய்யப்பட்டு, அதில் ட்ரஸ்ஸுடன் மாட்ச் பண்ணும் நெய்ல் பாலீஷ் போட்டால் பர்ஸனாலிட்டி இன்னும் பரிமளிக்கும்.

ஒருவரின் நகங்களைப் பார்த்தே அவர் ஹெல்தியானவரா அழகுணர்ச்சியுள்ளவரா எனச் சொல்லிவிட முடியும்.



நியூ ஏஜ் ஃபேஷனில் நெய்ல் ஆர்ட்டுக்கு மகத்துவம் அதிகம். மெனிக்யூர் பண்ணி, நகங்களை ஷேப் செய்து, நெய்ல் பாலீஷ் போடுவதெல்லாம் ஓல்டு... விதவிதமாக நகங்களில் டிஸைன் செய்து கொள்வதுதான் லேட்டஸ்ட் ட்ரெண்ட். இதற்கென நெய்ல் ஆர்ட் ஸ்டூடியோ என பிரத்யேக பார்லர்களும் உண்டு.

நெய்ல் டெக்னாலஜி என்ற ஸ்பெஷல் கோர்ஸ் படித்து நெய்ல் பார்லர் ஆரம்பிப்பவர்களுக்கு இன்று அம்பானிக்கு அடுத்த ப்ளேஸ்... தடபுடல் பிஸினஸ்!



ஃபங்கி லுக், போல்ட் மேக்கப், க்ரேஸி ஹேர் ஸ்டைல்...தான் இன்றைய யூத் மந்த்ரா! ''நெய்ல் ஆர்ட் டிஸைன் செய்த விரல்களால் உங்கள் கான்ஃபிடன்ஸ் கூடிப் போகும். அட்டிட்யூட் எகிறும்...'' என்கின்றனர் நெய்ல் நிபுணிகள்.

ஒருவரை நாம் சந்திக்கும் போது கை குவித்து வணக்கம் சொல்கிறோம் அல்லது ஹாண்ட் ஷேக் பண்ணுகிறோம். சொர சொரப்பான கைகளும், கூர்ப்பான அழகான நகங்களும் என்ன மாதிரி இம்ப்ரஷனை ஏற்படுத்தும்? ப்ளீஸ் திங்க்...!

ப்ளெயினாக நெயில் பாலீஷ் போடுவதெல்லாம் பழசு. இப்போது நகங்களில் விதவிதமாக பூக்கள், வரிகள், ஸ்டோன், அப்ஸ்ட்ராக்ட் டிஸைன்... என கற்பனைக்கேற்றவாறு டிஸைன் செய்யலாம். பேஸ் கலர் என்று ப்ளாக் கலரைப் போட்டுவிட்டு, மேலே வொய்ட் அண்ட் ரெட் கலரில் புள்ளிகள் வைக்கலாம். (வாசல் தெளிச்ச கோலம் போடுன்னா போடறது கெடையாது. இப்ப நக்கனூண்டு நகத்துக்குள்ள கோலமா... யம்மாடி!)

சிலருக்கு நகமே வளராது. அடிக்கடி உடைந்து போகும். அல்லது டைரக்டர் ஸ்ரீதரைக் காப்பியடித்து (பெஸ்ட் இயக்குநராவதற்கல்ல) நகத்தைக் கடித்துக் கொண்டேயிருப்பார்கள்... இவர்களுக்கென்றே ஃபால்ஸ் நகங்கள் வருகின்றன.

நெய்ல் ஆர்ட் டிஸைனில் பல வகை.

டிஜிட்டல் ஆர்ட், அக்ரிலிக் ஆர்ட், 3டி ஆர்ட்... என வெரைட்டிகள் ஏராளம். கம்ப்யூட்டரும்கூட உங்கள் நகத்துக்கேற்றவாறு டிஸைன் செலக்ட் பண்ணும் சௌகர்யம் வெளிநாடுகளில் உண்டு. இங்கும் சில ஹைகிளாஸ் பார்லர்களில் இருக்கிறது. நெய்ல் ஆர்ட் ஒரு க்ரியேட்டிவ் ஃபீல்ட். ரசனையுள்ள பெண் போட்டு விடுவாள்; போட்டுக் கொள்வாள்.

வீட்டிலேயே கூட ஈஸியாக மெனிக்யூர் செய்து கொள்ளலாம்.

★ முதலில் ஓல்டு நெய்ல் பாலிஷை நெய்ல் பாலிஷ் ரிமூவர் கொண்டு அழிக்கவும். நெய்ல் பாலீஷ் இல்லையே என்பவர்களுக்கு - ரிமூவர் நகங்களில் ஒட்டியிருக்கும் அழுக்கு, பிசுக்கை எடுக்கும் வல்லமை படைத்தது - ஸோ ஃபேர்ஸ்ட் ஸ்டெப் இஸ் க்ளீனிங்.

★ ஒரு பவுல் எடுத்து அதில் வெதுவெதுப்பான நீரை நிரப்பவும். உங்கள் இரு கை விரல்களையும் பத்து பதினைந்து நிமிடங்களுக்கு அமிழ்ந்தாற்போல் வைத்திருக்கவும். பிறகு கையை வெளியே எடுத்து நீட்டான டவலால் ஒற்றினாற்போல் துடைக்கவும்.

★ இதற்குப் பிறகு நகங்களை உங்களுக்கு வேண்டிய நீளத்தில் கட் செய்யவும்.

★ ஃபைலர் என்று ஒரு கருவி காஸ்மெடிக்ஸ் கடைகளில் கிடைக்கும். இதைக் கொண்டு நகங்களை ஒரே டைரக்ஷனில் ஃபைல் செய்யவும். (ராவணும்னு சொல்றதெல்லாம் வன்முறை)

★ பிறகு க்யூட்டிகில் பகுதிகளில் ஆலீவ் ஆயில் அல்லது க்யூட்டிகில் ஆயில் கொண்டு மஸாஜ் செய்யவும். க்யூட்டிகில் புஷ்ஷர் கொண்டு க்யூட்டிகிளைப் பின்னால் தள்ளவும்.

★ ஹாண்ட் க்ரீம் அல்லது லோஷன் கொண்டு கைகள், புறங்கைகளில் நன்றாக மஸாஜ் செய்யவும். நகங்களிலும் போட வேண்டும்.

★ காட்டன் பஞ்சு கொண்டு நகத்திலிருந்து லோஷனை எடுக்கவும். பெயிண்ட் செய்ய ஈஸியாயிருக்கும்.

★ லைட் பேஸ் கோட் போட வேண்டும்.

★ இதன் மீதே நெய்ல் பாலிஷ் போட வேண்டும். இரண்டு கோட் போடலாம்.

- லதா சேகர்






இவங்க இப்படித்தாங்க... 2

சேம்பகோலா

ஹவுசில் ஒருமுறை ஆனந்த்பாபுவைப் பார்க்கப் போயிருந்தேன். ''லஞ்ச் பிரேக்கில் பேசுவோம்'' என்றார். லஞ்ச் டைம் வந்ததும் ஆளுக்கொரு தட்டு கையில் பிடித்தும் சாப்பிட்டுக்கொண்டே பேச ஆரம்பித்தோம்.

எங்களுக்குச் சற்று தள்ளி ஒரு பந்தி நடந்தது. ஜெய்சங்கர், கவுண்டமணி, செந்தில் வட்டமாய் உட்கார்ந்து

"ஒரு புண்ணு ஒண்ணு நான் பார்த்தேன்!"





சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் பகுதி படு கலகலப்பாக இருந்தது.

''மணி! செந்தில் தலையைப் பார்த்தியா...? மூடி வளர்ற தைலம் பூசியிருக்காணாம்'' என்றார் ஜெய்சங்கர்.

''நிஜமாவா?'' - என்று அவர் செந்தில் தலையைப் பார்த்தார்.

''ஆமாண்ணே! முடி வளரும்னு பொள்ளாச்சியில ஒரு மூலிகைத் தைலம் கொடுத்தாங்க. அதான் பூசியிருக்கேன்'' என்று அப்பாவியாய்ச் சிரித்தார் செந்தில்.

''ஏண்டா... குதிரைக்குக் கொம்பு முளைச்சதை எங்காவது நீ பார்த்திருக்கியா?''

''இல்லண்ணே.''

''பார்த்துப் பூசு... இருக்கிற நாலு புல்லும் உதிர்ந்திடப் போகுது'' என்று கமெண்ட் அடிக்க, ஜெய்சங்கர் பெரிதாகச் சிரித்தார்.

இதுதான் கவுண்டமணி கேரக்டர்.

தமிழ் காமெடி நடிகர்களிலேயே அதிகமான சம்பளம் (ஒரு நாளுக்கு - 8 மணி நேரத்துக்கு - 2 லட்சம்) வாங்கிய முதல் நடிகர்.

அன்றைய இளம் ஹீரோக்களான பிரபு, கார்த்திக், பிரசாந்த், விஜய், அஜித் போன்றவர்களுக்கு இணையாக இவருக்கும் படங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

படத்தின் வியாபாரத்துக்கு கவுண்டமணியின் காமெடியை விநியோகஸ்தர்கள் பொரிக செய்த காலம் அது.

'பூமகள் ஊர்வலம்' படம் பார்த்து விட்டு வாசன் ஹவுசில் 'பரம்பரை' படப் பிடிப்பிலிருந்த விவேக்கைப் பார்க்கப் போயிருந்தேன். அங்கு கவுண்டரும் இருந் தார்.

விவேக் கையைக் குலுக்கி, ''பூமகள் ஊர்வலத்தில் நல்லா பண்ணியிருக்கீங்க. சமீபகாலமாக உங்க காமெடி மக்கள் ரசிக்கும்படி இருக்கிறது. வாழ்த்துகள்'' என்றேன். அங்கு வந்த கவுண்டமணி, ''பையன் ஸோலோவாக காமெடி பண்ணி யிருக்கானாமே. பாவம் ஜனங்க என்ன சொல்றாங்க?'' என்றார். இதைக் கேட்டு நெளிந்த விவேக் என்னை வேறொரு பக்கம் அழைத்துக்கொண்டு போய்ப் பேசி னார்.

இதுதான் கவுண்டமணியின் சுபாவம். எந்த விமர்சனத்தையும் நேரடியாகவே சொல்லிவிடுவார். அவரது பேச்சில் இயல் பாகவே ஒரு நக்கல், நையாண்டி, லொள்ளு சற்றுக் கூடுதலாக இருக்கும்.

கவுண்டரும் செந்திலும் படப்பிடிப் பில் இருந்தால் அந்தப் பகுதியே கலகலப் பாக இருக்கும். அவர்கள் முன்பு நடித்த படத்தின் காமெடி சீன்களையும், அப் போது நடந்தவற்றையும் சொல்லிச் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பார்கள்.





சபீதா ஜோசப்

சந்தனக் கடத்தல் வீரப்பன் கன்னட நடிகர் ராஜ்குமாரைக் கடத்திக்கொண்டு போனதால் நாடே பெரும் பரபரப்பில் இருந்த நேரம் அது. அருணாச்சலம் ஸ்டுடியோ வில் 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்'

நுக்கடா நியூஸ்

'வேலூர் கோட்டை' புராதன சின்னம் மட்டுமல்ல, மத நல்லிணக்கத்தின் மாபெரும் அடையாளம். இக்கோட்டையினுள்ளே, ஹிந்துக்கள் வழிபடும் 'ஜலகண்டேஸ்வரர்' கோயிலும், கிறிஸ்துவர்களின் 'சர்ச்'சும், முஸ்லிம்களின் 'மசூதி'யும் இருப்பதுதான் அதற்கு உதாரணம்.

- வே.ந.கதிர்வேல், வேலூர் - 6



ஷூட்டிங்கில் இருந்த ரம்பாவைப் பேட்டி காணச் சென்றிருந்தேன்.

ரம்பா ஷாட்டில் இருந்தார். இன்னொரு பக்கம் சத்யராஜும் கவுண்டமணியும் ஒரு ஓரமாக உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். நானும் அந்த ஜோதியில் ஐக்கியமானேன்.

''ஒரு புண்ணு ஒண்ணு நான்
பார்த்தேன்
பல்லு இளிக்கச் சொல்லி அதைக்
கேட்டேன்
பாபூ...பாபூ...'' - என்று கவுண்டர் நக்கலாகப் பாடி ஆடிக் கொண்டிருந்தார். கவுண்டர் குஷி மூடில் இருந்தால் சக நடிகர்கள் ஷூட்டிங் ஸ்பாட்டில் அடிக்கும் லூட்டிகளைக் கிண்டலாக விவரிப்பார்கள். அன்றைக்கும் சிலரைப் பற்றி நக்கலடித்தார்.

''அண்ணே, நீங்க சொன்னதையெல்லாம் அடுத்த வாரம் பத்திரிகையிலே சபீதா எழுதிடப் போறார் பாருங்க'' என்றார் சத்யராஜ்.

''நம்ம ஃபிரண்ட் அதெல்லாம் எழுத மாட்டார். எங்களுக்குள் ஒரு ஜென்டில் மேன் அக்ரிமெண்ட் இருக்கு'' என கவுண்டர் தமக்கே உரிய சிரிப்பை உதிர்த்தார்.

''இன்னைக்கு எப்படியாவது உங்களைப் பேட்டி எடுக்கணும் என்று வந்திருக்கேன்'' - என்றேன்.

''பேட்டியா... என்னைப் பத்திச் சொல்றதுக்கு என்னா இருக்கு நண்பா... எங்கப்பன் ஒரு விவசாயி. அவரோட மகன் நான், நாடகங்களில் நடிச்சேன். இப்ப சினிமாவுல இருக்கேன். ஊரிலேயே எங்கப்பன்கூட இருந்திருந்தால் ஒரு விவசாயி ஆகியிருப்பேன். நான் என்ன பெரிசா பண்ணிட்டேன். காசு வாங்குறேன்; நடிக்கிறேன். அவ்ளோதான்.

இப்ப நீங்க பேட்டி எடுக்க இந்தியாவுலேயே பெரிய ஆள், பெரிய ஹீரோ சந்தனக் கடத்தல் வீரப்பன்தான். கன்னட நடிகர் ராஜ்குமார் எவ்ளோ பெரிய நடிகர், அவரையே காட்டுக்கு இழுத்துட்டுப் போறதுன்னா அவனுக்கு எத்தனை தில் இருக்கணும்.

நல்லவேளை... அவன் நம்மூர்ல இருக்கிற பெரிய ஸ்டார்களைப் பிடிச்சுட்டுப் போகலை. அப்படிப் பண்ணியிருந்தான், நம்ம ஸ்டார்களின் மானம் கப்பலேறிப் போயிருக்கும். சினிமாவுல பத்துப் பேரைப் பறந்து பறந்து அடிக்கிறே... வீரப்பனைப் பார்த்ததும் நடுங்கிப் போயிட்டியே... நீ பெரிய ஹீரோவானு ஜனங்க சிரிச்சிருப்பாங்க. அதனாலதான் சொல்றேன் நீங்க இப்ப பேட்டி எடுக்க வேண்டிய ஆள் வீரப்பன்தான்'' என்றார்.

''சரியா சொன்னீங்கண்ணே'' என்று சத்யராஜ் சொன்னார்.

இதுதான் கவுண்டமணியின் சுபாவம். அவரு இப்படித்தாங்க.

(அடுத்த வாரம்: **மீனா...**)

தீபாவளி
கொண்டாட்டம்

கம்ப்யூட்டர்ஸ், லேப்டாப்ஸ், பிரிண்டர்ஸ்
மற்றும் அனைத்து வகையான
கணினி உதிரிபாகங்களும்
கிடைக்கும் சிறந்த இடம்



hp COMPAQ GET GOING VAIO SAMSUNG DELL TVS IBM

VISIT THE BIGGEST
COMPUTER SHOW ROOM IN CHENNAI

BUY BACK OFFER AVAILABLE

SRI LAKSHMI SYSTEM PRODUCTS

No. 9A, Periyar Road, T.Nagar, Chennai - 17.
Ph: 2834 5811 / 1627 / 93848 42272
www.slsponline.in

தமிழகத்தின் வெப்பமான மாவட்டம் வேலூர். ஆனா அதுலதான் இருக்கு ஏழைகளின் ஊட்டி என்றழைக்கப்படும் குளுகுளு ஏலகிரிமலை...


வேலூர்லேருந்து தொண்ணூறு கி.மீ.ல இருக்கு பொன்னேரி கிராமம். ஏலகிரி மலையோட அடிவார கிராமம். அங்கே இருந்து தொடங்குது, ஏழைகளின் ஊட்டி மலைப் பயணம்! ஆயிரத்து நானூறு அடி உசரத்துக்கு, சுமார் முப்பது கி.மீ. சுத்தளவுல ராட்சஸத்தனமா நீண்டு கிடக்குது ஏலகிரி மலை.

மலைப் பாதையோட நீளம் பதினாலு கி.மீ. அதுல பதினாலு கொண்டை ஊசி வளைவுகள்! ஒவ்வொரு வளைவுக்கும் தமிழ்ப் புலவர்களோட பேரு. வள்ளல்களோட பேரு. என்ன விந்தை! ரெண்டு மூணு வளைவுகள்லயே ஆரம்பிச்சுடுது அந்தக் குளிர்ச்சி.

குரங்குகள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் கொஞ்சிக் குலவிக் கொண்டிருப்பதைக் காணலாம். பதிமூணாவது கொண்டை ஊசி வளைவுல வனத்துறை ஒரு டெலஸ்கோப் ஹவுஸ் அமைச்சிருக்கு. அந்த டெலஸ்கோப் வழியா பார்த்தீங்கன்னா மலையடிவார' எழிலும், மலைப்பகுதி அழகும் மனசுல வந்து பச்சக்னு ஒட்டிக்கும்.

தமிழ்நாட்டிலேயே ஏலகிரியிலதான் மியூஸிக்கல் நீரூற்று இருக்கு!

பதினாலாவது கொண்டை ஊசி கடந்து வந்தா ஆரம்பிக்குது ஏலகிரி



மலை கிராமங்கள். பொதுவா மலைப்பிரதேசங்கள் ஒவ்வொண்ணுலயும் வருஷத்துக்கு சிலன் டைம்னு ஏதாவது இருக்கும். ஏலகிரி மலை அப்படி இல்லையாம். வருஷம் முன்னூத்து அறுபத்தைஞ்சு நாளும் சிலன்தானாம். கடுங்கோடையிலகூட வெயில் மிதமாத்தான் இருக்குமாம்.

"பதினோராயிரம் பேர் இங்கே வசிக்கறாங்க. துவக்கப்பள்ளி, மேனிலைப்பள்ளி எல்லாம் இருக்கு. அரசுப் பள்ளிகள்ல ஆசிரியர் பற்றாக்குறையும் உண்டு. மலைங்கறதால வாத்தியாருங்க பலர் மலைக்குப் போய் வேலைக்கு ஒத்துக்கிட மாட்டேன்றாங்க!"னு வருத்தமா பேசுறாரு ஏலகிரி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பொன்னுரெங்கம்.

மார்ச், ஏப்ரல், மே மாசங்கள்ல இங்கே கூட்டம் அதிகமா இருக்கும். ஆனா வருஷத்துல எல்லா நாளும் எல்லா ஜனங்களும் குறைஞ்ச செலவுல வந்துட்டுப் போற குளுகுளு மலைதான் எங்களோட ஏலகிரி மலை.

இந்த மலையிலயும் கோடை விழா நடக்குது. மே மாசக் கடைசி, இல்லைன்னா ஜூன் முதல் வாரம், மூணு நாள் விழா. ஒண்ணரை லட்சம் பேர் வந்து போறதாச் சொல்றாங்க. ஊட்டியில பொட்டானிகல் கார்டன்

ஊட்டி பொட்டானிக்கல் கார்டன் மாதிரியே ஏலகிரியில நேச்சுரல் பார்க் இருக்கு!



• பொன்னுரெங்கம்



ஏழைகளின் ஊட்டி!



நிலாவூர்ல சித்ராபௌர்ணமிக்கு பொண்ணுங்க நிலாவைப் பார்த்துப் பாட்டுப் பாடுவாங்க!



✱ குமரேசன்



✱ அசோதா

மாதிரி, இங்கேயும் நேச்சரல் பார்க் ஒண்ணு இருக்கு. அங்கே மியூஸிகல் நீரூற்று, இரவு நேரங்கள்ல பார்க்க ரம்யம். தமிழ்நாட்டுல ஏலகிரி மலையில மட்டும்தான் இது இருக்குனு சொல்றாங்க'' என்கிறார் குமரேசன்

நிலாவூர். ஊருக்கு ஏன் அந்தப் பேரு? கடைசியில் சொல்றோம்.

நிலாவூர்லேந்து காட்டுப் பகுதியில அஞ்சு கி.மீ. தூரம் நடந்து போனா, ஜலக்கம்பாறை. ஐம்பதடி உயரத்துலேருந்து இயற்கை நீர்வீழ்ச்சி. திருப்பத்தூர்லேருந்து வந்தா நீர்வீழ்ச்சிக்குக் கொஞ்ச தூரத்துல பஸ் நிக்கும்னு சொல்றாங்க.

மினி போட் ஹவுஸ் நிலாவூர்ல இருக்கு. படகு தயாரா இருக்கு. பக்கத்துல பூங்கா. அடுத்து காதவநாச்சியம்மன் கோயில். நிலாவூர்ல மலைவாழ் மக்கள் நெறைய இருக்காங்க.

நிலாவூர்லேருந்து சென்னைக்கு நேரடி அரசுப் பேருந்து. இருநூற்று நாற்பது கி.மீ. தூரம். தினசரி ஒரு பேருந்து வந்து செல்கிறது.

இயற்கை ரசிகர்களுக்கு சொர்க்கம் நிலாவூர்! அந்த அழகுணர்ச்சியைக் குண்டுகள் வைத்துத் தகர்த்தெறிகின்றன, அப்பகுதியில் உள்ள கிரானைட் குவாரி இரைச்சல்கள். எவர் வந்து காப்பார் ஏலகிரி மலையை?

''சித்ரா பௌர்ணமியப்ப ஒரு இடமல்ல, கல்லுரல்களை வரிசையாக் கொண்டாந்து வைச்சிருப்பாங்க. உரல், உலக்கைகளுக்கு மஞ்சள் பூசி சந்தனம் குங்குமம் வைப்பாங்க. உரல்ல நெல்லு போட்டுக் குத்திக்கிட்டே எங்க ஊர்ப் பொண்டுகள் நிலாவைப் பார்த்துப் பாட்டுப் பாடிட்டே இருப்பாங்க. வருஷந்தோறும் இந்த நிலாப் பாட்டு நிகழ்ச்சி நடந்துக்கிட்டிருக்கு. எங்க முன்னோருங்க காலத்துலேருந்து அதான் எங்க ஊருக்கு நிலாவூர்னு பேரு!'' என்கிறார் அசோதா.

வாசகர் யோசனை : **எல்.மாறன்**

திணறும் தீப்பெட்டி!

''கடந்த இருபது வருஷமா விலையே ஏறாத ஒரு பொருள் இருக்கு. அது என்னங்க?'' என்று புதிர் போட்ட குடியாத்தம் நகரவாசி, அவரே அந்தப் புதிரை விடுவித்தார். ''தீப்பெட்டி!''



''இருபது வருஷத்துக்கு முன்னாடி வித்த, எந்த ஒரு பொருளும், பழைய விலைக்கு எங்கேயுமே விற்கலை. ஆனா, இந்தத் தீப்பெட்டி மட்டும் இருபது வருஷத்துக்கு முன்னாடியும் எட்டணாதான். இன்னைக்கும் எட்டணாதான்! அப்புறம் இந்தத் தொழில் திணறாம என்ன செய்யும்?'' - கேட்கிறார் 'குடிசை தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர்' வி.ஜி.தனபால். இவர் குடியாத்தம் தொகுதியின் முன்னாள் தி.மு.க. எம்.எல்.ஏ.

* வி.ஜி.தனபால்.



''சிவகாசியை குட்டி ஜப்பான்னு சொல்வாங்க. குடியாத்தத்தை குட்டி சிவகாசின்னு சொல்றாங்க. ஏன்னா... ஊருக்குள்ளார அம்புட்டுப் பேருக்கும் தீப்பெட்டி உற்பத்திதான் குடிசைத் தொழில். அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி இதே ஊர்ல சுமார் ஐந்நூறு தீப்பெட்டி சிறு தொழிலகங்கள் இருந்துச்சு. அதுல இப்ப அம்பது சதவிகிதம் மூடியாச்சு.



ரெண்டு விதமா இந்தத் தொழில் நசுக்கப்படுது. ஒண்ணு பகுதி, நேர தீப்பெட்டி எந்திர ஆலைகளின் உற்பத்தி. இன்னொண்ணு மூலப்பொருட்களின் கடும் விலைஉயர்வும் தட்டுப்பாடும். குடியாத்தத்துல மட்டும் கடந்த ரெண்டு வருஷங்கள்ல தீப்பெட்டி எந்திர ஆலைகள் பதினைஞ்சு வந்திடுச்சு.

அதனாலேயே, சிறு தொழிற்சாலைகள் பெரும்பாலும் இழுத்து மூடியாச்சு. குடியாத்தத்துல மட்டும் அம்பதாயிரம் தொழிலாளர்கள், அவங்கள்ல தொண்ணூறு சதவிகிதம் பெண்கள். இப்ப அவங்கள்ல பல்லாயிரம் பெண்கள் வேலையிழப்புக்கு ஆளாகி வேற வேலைக்குப் போய்ட்டு வர்றாங்க. இதுல சில ஆயிரம் பெண்கள் வேலை இல்லாம வீட்லயும் இருக்காங்க.

தீப்பெட்டி தொழிலுக்கு முக்கிய மூலப் பொருள் பொட்டாசியம் குளோரைடு. இது தமிழ்நாட்ல உள்ள எல்லா ஊர் தீப்பெட்டி கம்பெனிக்கும் காரைக்காலிலி



ருந்துதான் சப்ளை ஆகிட்டு இருந்திச்சு. சமீபத்துல காரைக்கால்ல பொட்டாசியம் குளோரைடு உற்பத்தி பண்ற மூணு கம்பெனிகளை மத்திய அரசு சீல் வைச்சுடுச்சு. அதனால குடியாத்தம் உட்பட சிவகாசி, சாத்தூர்,



கோவில்பட்டி, விருதுநகர்... போன்ற நகரங்கள்ல தீப்பெட்டி கம்பெனிகளுக்கு பொட்டாசியம் குளோரைடு வரத்து நின்னு போச்சு.

கடந்த மூணு மாசமா ரொம்ப சிரமத்துக்கு ஆளாகிப் போனது தீப்பெட்டி தொழில். துணை முதல்வர் கவனத்துக்குக் கொண்டு போனோம். இப்ப சீனா, ஈரான், அமெரிக்கா போன்ற நாடுகள்லேர்ந்து அவரோட முயற்சியால பொட்டாசியம் குளோரைடு இறக்குமதி செய்யப்படுது. ஆனாலும் காரைக்கால் விலைக்குக் கிடைக்கல.

இந்தியாவின் மொத்த தீப்பெட்டி தேவையில் தொண்ணூறு சதவிகிதத்தைத் தமிழ்நாடு பூர்த்தி பண்ணுது. தமிழ்நாட்டுல மட்டும் பத்து லட்சம் தொழிலாளர்கள், தீப்பெட்டி உற்பத்தியை நம்பி இருக்காங்க. எந்திரத் தொழிற்சாலைகள் தவிர சிறு - குறு மற்றும் குடிசைத் தொழில் தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் தொழில் சிரமங்கள் சொல்லி மாளாது. எந்திர உற்பத்தி தீப்பெட்டிகளுக்குப் பதினாறு சதவிகித வரி விதிப்புச் செய்யணும். சிறு - குறு மற்றும் குடிசைத் தொழில் தீப்பெட்டி உற்பத்தியை அரசே கொள்முதல் செய்து ரேஷன் கடைகளில் விற்பனைக்கு அனுப்ப வேண்டும். இன்றும் தீப்பெட்டித் தொழிலை அப்பத்தான் காப்பாத்த



முடியும்!'' என்கிறார், அகில இந்திய குடிசை தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத் துணைத் தலைவரான வி.ஜி.தனபால்.

வாசகர் யோசனை: **முத்து ஆனந்த்**



“நானும் படம் எடுக்கப் போறேன்!”

அழகியபெரியவன் அதிரடி!

யார் நீங்கள்?

''வேலூரில் பேரனாம்பட்டு அருகே உள்ள ஒரு கிராமத்தில் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிபவன். நான்கு சிறுகதைத் தொகுப்புகளும் மூன்று கவிதைத் தொகுப்புகளும் சில கட்டுரைத் தொகுப்புகளும் 'தகப்பன் கொடி' என்ற நாவலும் எழுதிய ஒரு எழுத்தாளன். 1980-களிலிருந்து எழுதத் தொடங்கிவிட்ட நான் என் படைப்புகளில் எங்கள் தலித் சமூகத்தின் வாழ்க்கை அனுபவங்களை அசலாகப் பதிவு செய்தேன். தலித் எழுத்தாளன் என்று சொல்லிக் கொள்ளாமல் இருந்தபோதும் எனக்கு அந்த அடையாளம் வந்து சேர்ந்தது. இதில் சங்கடம் ஏதுமில்லை. அது ஒரு வரலாற்றுத் தேவையாகவும் உணர்ந்திருக்கிறேன். இதைக் கடந்து என் எழுத்தை பொதுத் தளத்தில் அடையாளப்படுத்தவே விரும்புகிறேன்.''

தலித் இலக்கியம் தலித்துகளிடம் சென்றடைந்துள்ளதா?

''தலித் இலக்கியம் பாமரர்களிடம் போய்ச் சேர்ந்திருப்பதாகச் சொல்ல முடியாதுதான். எழுத்து மட்டுமே நேரடியாகப் போய்ச் சேராது. நாடகம், பாட்டு, ஓவியம், சினிமா, பேச்சு என பல கலை வடிவங்களும் சேர்ந்து 'பங்காற்ற' வேண்டும். அப்போதுதான் தலித் மக்களின் வாழ்க்கையைப் பதிவு செய்து, இருக்கும் தலித் இலக்கியம் கடைநிலை தலித்திடமும் போய்ச் சேரும். இதற்கு அரசும் அரசு ஊடகங்களும் உதவ வேண்டும்.''

தலித் வரையறைக்குள் எல்லா ஒடுக்கப்பட்ட சாதிகளும் வராமல் ஒதுங்குவது ஏன்?


''தலித் இலக்கியம், பொது இலக்கியம் என்ற இரண்டு வகைப்பாடுகளுமே அந்தந்தக் காலகட்டங்களின் தேவையைப் பொறுத்தது. இலக்கியம் எப்போதும் ஒன்றுதான். 'தலித்' என்பது உதிரிகளாகப் பிரிந்திருக்கும் மக்களைச் சேர்க்கும் சொல். ஆனால், பழங்குடியினரே தங்களை உயர்வாகக் கருதி இதில் சேராமல் ஒதுங்கிவிடுகிறார்கள். தலித் என்ற வரையறைக்குள் பள்ளர்களும், அருந்ததியர்களும்கூட வர விரும்புவது இல்லை. இதற்குக் காரணம் குழு மனப்பான்மையும், உட்சாதி மேலாண்மைக்கு ஆசைப்படுவதும்தான். இதை அரசியல் இலக்கிய விமர்சகர்கள் இன்னும் கூர்மையாக்கி விட்டனர்.''



தலித்துகள் சினிமாவில் தடம் பதிக்கத் திணறு

வதேன்?

''சினிமா ஒரு வணிக தொழிற்சாலை. சமூகமாற்றத்துக்கான கருத்துக்கள் இதில் நான்காம் பட்சம்தான். சாதி, மதங்களைக் கேள்வி கேட்பது கூட இல்லை. பெரும் சமரசத்துக்கு உட்பட வேண்டியிருக்கும். இதற்கு தலித் படைப்பாளிகள் ஆட்பட இயலாது. அந்த மகா சமரத்துக்கு உட்பட்ட தலித் எழுத்தாளர்கள், பாடலாசிரியர்கள் இசையமைப்பாளர்கள் பட்டியல் என்னிடமுண்டு. ஆனால், அவர் கள் தம்மை தலித் எனப் பிரகடனப்படுத்திக் கொள்வது இல்லை. அதற்குக் காரணம் இன்னும் இன்னும் ஜெயிக்க சாதியோடு சமரசம் ஆகிவிடுகிறார்கள். இன்று திரைப்படத்தை வெற்றியாக்கும் குத்துப்பாட்டுக்கான எல்லா இசை வடிவங் களும் சேரியின் கலை வடிவங்களே.''



''இலக்கியவாதிகள் அரசியலுக்குப் போவது இலக்கியத்துக்குத்தான் இழப்பு!''

நீங்கள் எந்தக் கட்சி?

''பெண் விடுதலை, ஒடுக்கப்பட்டோர்க்கு முன்னேற்றம், மனித உரிமை பேசுகிற செயல்படுகிற எல்லா அமைப்புக் களுக்கும் நான் ஆதரவாளன். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தலித் எழுத்தாளர்கள் அரசியலில் அடைக்கலமாவது எந்த வகையில் பயன்படும் என்பது அவர்களின் தீவிரச் செயல்பாட்டைப் பொறுத்தது.''

என்ன சாதிக்கும் உங்க எழுத்து?

''என் எழுத்து எதையும் சாதிக்கும். சாதிய உணர்வுக்கு எதிரான பெரும் இருளை அகற்றும் பணியில் ஒரு அகல் விளக்காய் என் படைப்பும் செயல்பாடும் இருந்துகொண்டேதான் இருக்கிறது.''

இப்போதும் நாளையும் உங்கள் பணி என்ன?

''இப்போது... கடந்த நூற்றாண்டின் தொடக்க கால வாழ்வை, இந்திய வரலாற்றின் சாதிய வரைபடமாக ஒரு நாவலாக எழுதிக் கொண்டிருக்கிறேன். நாளை... என் நாவலைத் திரைப்படமாக மாற்றும் ஆசையோடும் அதற்கான முயற்சியோடும் இருக்கிறேன்.''

வாசகர் யோசனை : **இரா.கணேசன்**



''இப்போது பல பிரபலமான கடைகளில் காஞ்சிபுரம் பட்டு என்று சொல்லி விற்பது ஆரணியில் தயாராகும் பட்டுப் புடைவைகளே'' என்று அதிரடி குண்டைத் தூக்கிப் போடுகிறார் பட்டு உற்பத்தியாளரும் வியாபாரியுமான குணசேகரன். ''என்ன இப்படிக் மிரள வைக்கறீங்க ஸார்?'' என்றதும் ''ஸார் ஒரு பிரச்னையுமில்லை. தர வாரியாகப் பார்த்தால்கூட ஆரணிக்கே முதலிடம்'' என்றபடி தொடர்ந்தார் அவர். ''ஏனென்றால் முப்பதாயிரம் தொழிலாளர்கள் பட்டு நெசவில் இங்கு ஈடுபட்டிருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் உள்ள நெசவாளர்களும், மற்றும் இளைய தலைமுறையினரும் ஸ்ரீபெரும்புதூர் சுற்றி உருவான பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கு வேலைக்குச் சென்றுவிட்டார்கள். இப்போது அங்கே வேலைக்கு அனுபவம் வாய்ந்த ஆள் இல்லை'' என்பதுதான் உண்மை'' என்றார் குணசேகரன்.



ஆரணியில் வேலை வாய்ப்பைக் கொடுக்கும் முதன்மைத் தொழில் பட்டு நெசவுதான். தமிழகத்தின் அத்தனை பிரபல துணி நிறுவனங்கள், ஆரணியில் கொள்முதல் நிலையங்களை வைத்திருக்கின்றன. பட்டு



* குணசேகரன்

அசத்தும் ஆரணி; ஆட்டத்தில்

நூல் பெங்களூரிலிருந்து வாங்கப்படுகிறது. ஜரிகை மட்டும் சூரத்தில் இருந்து தருவிக்கப்படுகிறது. இதில் ஏகப்பட்ட டூப்ளிகேட் சமாசாரங்கள். எனவே, தரமான நூல் மற்றும் ஜரிகை கொண்ட ஆரணிப்பட்டைக் கண்டுபிடிக்க கொஞ்சம் உஷாராக இருக்கவேண்டும்.

ஆரணி பஸ் நிலையத்தில் இறங்கியவுடனேயே நம்மைச் சுற்றிக் கொள்கிறார்கள் தரகர்கள். ''ஸார்... அசல் ஆரணி... கூட்டுறவுச் சங்கம் ஸார்'' என்று நமக்கு வலை

"காஞ்சி பட்டு என்று கடைகளில் சொல்லி விற்பதெல்லாம் ஆரணியில் தயாராகும் பட்டுப்புடைவைகளே!"

விரிக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் என்றால் தரம், சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்பது நமது நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கு வேட்டு வைக்கிறார்கள். 'பட்டுத் தொழிலாளர் சங்கம்' என்ற பலகையுடன் நிறைய கடைகள். சில கடைகளில் 'கூட்டுறவு' என்பதையும்

நெசவாளர்கள்!

சேர்த்துக் கொள்கிறார்கள். ஆனால், இதுபோன்ற கடைகள் அரசின் பதிவையோ, அங்கீகாரத்தையோ பெறுவதில்லை.

தரமான புடைவைக் கடையை அடையாளம் காணுவதுதான் எப்படி? ''நன்றாகத் தெரிந்தவர்கள் மூலமாக நாணயமான கடையை அடையாளம் காண முடியும். ஓரிரு முறை ஏமாந்தால்கூட அதன்பின் சரியான கடையை ஒருவரால் அனுபவத்தால் காண முடியும்''' என்கிறார் குணசேகரன். ''அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தரமான சரக்குகளை விற்கின்றன'' என்கிறார் அவர்.

போலி ஜரிகையைக் கண்டுபிடிப்பதும் சுலபம்தான். பட்டு நூலின் மீது வெள்ளி முலாம் பூசி, பின்னர் தங்க முலாம் பூசப்படுவதுதான் அசல் ஜரிகை. எனவே ஜரிகையைக் கையால் வேகமாக உரித்தால் உள்ளே வெள்ளியும், அதையும் தேய்க்கும்போது நூலும் தெரியும். போலி ஜரிகை என்றால் கலரும் காட்டிக் கொடுக்கும்; தேய்த்தாலும் உள்ளே வெள்ளி முலாம் இருக்காது!'' என்கிறார் நெசவாளர் சண்முகம். ''நான்காயிரத்துக்குக் குறைந்து விற்கப்படும் பட்டுப் புடைவைகளின் தரம் கொஞ்சம் சந்தேகத்துக்குரியதே'' என்று சொல்கிறார்கள் நெசவாளர்கள். 50,000 ரூபாய் வரைகூட ஆரணியில் பட்டுச் சேலை விற்கப்படுகிறது.

காஞ்சிப்பட்டைவிட ஆரணிப் பட்டு கொஞ்சம் உசத்தி!



பட்டு பளபளக்கும் அளவுக்கு நெசவாளர்களின் வாழ்க்கை பிரகாசிக்கவில்லை என்பது நெருடும் ஒரு விஷயம். ''நான் ஒன்றுக்கு இருபது மணி நேரம் வேலை செய்தால் ஒரு வாரத்தில் ஒரு பட்டுப் புடைவை நெய்ய முடியும். அதற்கு கூலி 1500 ரூபாய். இப்படி நான்கு புடைவைகளை நெய்தால் 5000 ரூபாய் சம்பாதிக்கலாம். நான் ஒருவன் நெய்வதற்கு, குடும்பமே எனக்கு உதவ வேண்டும். புது டிசைனைத் தறியில் செட் செய்யும்போது ஒரு மாதம் ஆகலாம். அப்போது வருமானம் மேலும் குறையும். இந்த வருமானத்தை வைத்துக் கொண்டுதான் வாழ்க்கையை ஓட்டுகிறோம்'' என்கிறார் சண்முகம். தறி வேலையில் மின்வெளிச்சம் அவசியமாதலால் மின் கட்டணத்தில் நெசவாளர்களுக்குச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். வெளிமார்க்கெட்டில் அரிசி விற்கும் விலையில், ஒரு ரூபாய் அரிசி பெரிய நிவாரணம் இவர்களுக்கு!

வாசகர் யோசனை :
பவித்ரா நந்தகுமார்



ஸ்ரீ ஷீரடி சாயி பக்த கோடிகளுக்கு,

சிரம்தாழ்த்தி வேண்டிக்கொள்வது. மிகவும் கடினமான சூழ்நிலையில் அடியேன் இருப்பதால் கீழ்கண்ட விவரம் தெரிந்தபின் உங்களால் மற்றும் உங்கள் தோழர்கள் மூலமாகவோ நிதி திரட்ட வேண்டுகிறேன்.

வருகிற 2010 மார்ச் 9-ந்தேதி இந்தக் கோவிலின் நிர்மாணயம் செய்து 12 வருடங்களாகிறது. ஆகையால் 2010 மார்ச் 9ந்தேதி மகா கும்பாபிஷேகம் நடக்கவிருக்கும் சமயத்தில் முன்னாள் கட்டிட வேலையில் 75 மடங்கு மாறுதல் செய்ய இருப்பதால் மாற்று வேலைப்பாடுகளுக்கும், கோவிலை புதுப்பிப்பதற்கும் செலவாகும் தொகை 30 இலட்சமாக கணக்கிடப்படுகிறது.

தவிர தினசரி அன்னதானம் ஏழை மக்களுக்குப் போய்சேர நான்கு சக்கர வண்டியை பிரத்யேகமாக அன்னதானத்திற்கு உபயோகப்படுத்த ஏற்பாடு செய்யும் தொகை சுமார் 4 இலட்சம் என கணக்கிடப்பட்டுள்ளது.

ஆகையால் இதைப்படிக்கும் வாசகர்கள் எந்த அளவுக்கு பண உதவி செய்ய முடியுமோ தாராளமாக நன்கொடை செய்து வருமான வரிவிலக்கு, 80G Income Tax Act சலுகைகளைப் பெற்று இந்த அறக்கட்டளை ஒரு ஆலவிருட்சமாக இருக்கச்செய்து எல்லோருடைய வறுமைக் கோடுகளையும் களைக்க, ஏகமனதுடன் பொருள், பண உதவி செய்து விழாவை சிறப்பித்துத் தருமாறு மிகப் பணிவுடன் வேண்டுகிறோம்.

மேலும் உங்கள் கவனத்திற்கு இந்த அறக்கட்டளை 25 அனாதை குழந்தைகளை அறக் கட்டளை சார்பாக பராமரிக்க தங்களுடைய உதவியை பெரிதும் நாடும் சீரடி சாய்தாசன் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் வாயில்லாத ஜீவன் 100 கால்நடைகளைப் பராமரிக்க எடுத்துக்கொண்டுள்ள முயற்சி வீண்போகாமல் காக்க உங்களை சிரம் தாழ்த்தி வேண்டுகிறேன். கோவில் ராஜகோபுரம் கட்டவே ரூபாய் 5 லட்சத்திற்கு மேல் ஆகிறது. அதிக பண உதவி தேவைப்படுவதால் தங்களால், தங்கள் தோழர்களால் இயன்ற பணஉ தவி செய்து சீரடி சாய்பாபாவின் மகத்தான அருளைப்பெற இதுதான் சமயம் என கோவில் விழாக்களில் கலந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளவும். உங்கள் காசோலையை சரியாக A/c. Payee என்று எழுதி Bank-க்கு நேரடியாக அனுப்பி விழாவை சிறப்பித்துத் தருமாறு வேண்டுகிறேன். உங்களுடைய காசோலையை இந்த முகவரிக்கு அனுப்பவும்:-

SB A/c. No. 846511242 Indian Bank
Siruseri (1502) Anand Institute of Higher Technology Campus,
Old Mahabalipuram, Phone : 2747 5210.

காசோலையை கிராஸ் செய்து அனுப்பவும். நீங்கள் அனுப்பிய விவர நகலை கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம்.

நன்றி! வணக்கம்.

இப்படிக்கு

(அறக்கட்டளை உறுப்பினர்கள்)

ஸ்ரீஷீரடி பைரவ சாயித்திருக்கோயில் அறக்கட்டளை,
பிளாட் நம்பர் 6, பாரத் நகர் மெயின் ரோடு,
மேடவாக்கம் நெடுஞ்சாலை, மடிப்பாக்கம், சென்னை-600 091.
தொலைபேசி 2247 6833 / மொபைல்: 9445151574

(வைஸ் பிரஸிடன்ட்ஸ்)
ஹரிஹரன் / சுவாமிநாதன்
ஷண்முகம் / வேணுகோபால்
சாந்தா ராமச்சந்திரன்
மற்றும் உறுப்பினர்கள்

மீண்டும் சிரம் தாழ்த்தி
வணங்கும் ஸ்தாபகர்
சீரடி சாய்தாசன்
(G.மீனாட்சி சுந்தரம்)

V. ராமமூர்த்தி
(பிரஸிடன்ட்)
S. சீனிவாசன்
(எக்ஸிகியூட்டிவ்
வைஸ் பிரஸிடன்ட்)

- சுபம் -

“எங்களைக் காப்பாய் எல்லையம்மா!” என்று பக்தர்கள் மனமுருகி வேண்டுகிறார்கள். அவ்விதமே அம்மனும் தொல்லைகள் நீக்கி அனைவரையும் காத்து வருகிறாள்” என்கிறார்கள். வேலூரிலிருந்து இருபத்தைந்து கி.மீ தூரத்தில் உள்ள கிராமம் வெட்டுவாணம். ஜவ்வாது மலைச்சாரலில் பாலாற்றங்கரையில் அமைந்துள்ளது. அங்கு எழுந்தருளியுள்ளாள் எல்லையம்மன். அம்மனுக்கு வரலாற்றுப் பெயர் ரேணுகாதேவி.

எல்லையம்மன் கோயிலில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் கூட்டமே அலைமோதுகிறது. பிரார்த்தனை ஸ்தலம் என்பதால் குடும்பத்தலைவிகள் மற்றும் இளம் பெண்களின் படையெடுப்பு அதிகம். காரணம், நாகதோஷ நிவர்த்தி ஸ்தலமாகவும் விளங்கி வருகிறது. அம்மன் சிரசு மீது எட்டு நாகங்கள் இடம் பெற்றுள்ளன. அதற்கெனவே கருவறைக்குப் பின்புறம் இடப்புறமாகத் தனியாக எட்டு தலை நாகர் சன்னிதி அமையப் பெற்றுள்ளது.

ஸ்தல விருட்சம் வேப்ப மரம் பல நூறு ஆண்டுகளுக்கு முந்தையது எனச் சொல்லப்படுகிறது. எல்லையம்மன் கோயில் ஸ்தல விருட்ச வேப்ப மர இலைகள், துளியும் கசப்பதில்லை.



* நாகர் சன்னிதி



ஆடி மாதத்தில் பத்து வெள்ளியும் இங்கு திருவிழாக் கோலம். அதிகமாகப் போனால்கூட அஞ்சு வெள்ளிதானே வரும்; அதெப்படி பத்து வெள்ளி? ஆடியை அடுத்து வருகிற ஆவணி மாத வெள்ளிக்கிழமைகளையும் சேர்த்து பத்து வெள்ளி. அதெல்லாம் சரி. ‘வெட்டுவாணம்’னா என்னங்க?

ஜமதக்னி ரிஷியோட தர்மபத்தினி ரேணுகாதேவி, மணலால குடம் செஞ்சு தினசரி தண்ணீர் மொண்டு வருவா சிவபூஜைக்கு. அப்படி ஒருநாள் தண்ணீர் கொண்டு வர்றா. ஆகாயத்துல பறந்து போற கந்தர்வனோட யௌவன உருவம் மணல் குடத்துல இருக்கற தண்ணீர்ல தெரியுது. கந்தர்வனின் வசீகரத்துல ஒரு விநாடி ஆழ்ந்து விட்டாள் ரேணுகா தேவி. மணல்குடம் கரைஞ்சு போச்சு.

இந்த விஷயம் தவ வலிமையால ஜமதக்னி ரிஷிக்குத் தெரியுது. தன்னோட நான்கு பையன்களையும் அழைத்து, அவர்களின் தாயின் தலையை வெட்டி வருமாறு பணிக்கிறார்.

தொல்லை நீக்கும்



மூன்று மகன்கள் மறுத்துடறாங்க. கடைசி மகன் பரசுராமன் மட்டும், தமக்கு இரண்டு வரங்கள் வேண்டும் என்கிற நிபந்தனையோடு தாயைத் தேடிச் செல்கிறான். மற்ற மூன்று மகன்கள் செடி கொடிகளாக மாறி விடுகின்றனர்.

எல்லையம்மன் கோயில் நாகதோஷத்தின் நிவர்த்தி ஸ்தலமாக விளங்குகிறது!

கோடாரியோடு விரைந்து வரும் பரசு ராமனைக் கண்டு, ரேணுகாதேவி பதுங்கி ஓடுகிறாள். விரட்டுகிறான் பரசுராமன். ஓடிச் செல்லும் ரேணுகாதேவி, எதிர்ப்பட்ட அருந்ததியப் பெண்ணைக் கட்டிப்பிடித்துக் கொள்கிறாள். ஆத்திரத்துடன் கோடாரியை வீசுகிறான். அந்தோ பரிதாபம்! இரு தலைகளும் மண்ணில் வீழ்கின்றன.

வேதனையுடன் தலையை எடுத்துச் சென்று, தான் கேட்ட இரு வரங்களை வேண்டுகிறான் தந்தையிடம். சகோதரர்கள் உயிர் பெறுகிறார்கள். தாயை உயிர்ப்பிக்க வேண்டுகிறான். அருந்ததிப் பெண்ணின் தலையை தன் தாய்க்கும், தன் தாயின் தலையை அருந்ததிப் பெண்ணுக்கும் மாற்றிப் பொருத்தி விடுகிறான். தாயின் உடலோடும் அருந்ததிப் பெண்ணின் தலையோடும் உயிர் பெறுவதாலே மாரியம்மனாக ஆகிறாள். தலை வெட்டுப்பட்ட இடம் வெட்டுவாணம் என்றும் ஆகிப் போனது!'' என்கிறார் எல்லையம்மன் கோயில் அர்ச்சகர் சந்திரசேகர குருக்கள்.

வாசகர் யோசனை:

இரா.கணேசன்



எல்லையம்மன்!



மயக்கும்-மக்கன்பேடா!

"இனிப்புகள்ல மகாராஜா எங்க ஊரு மக்கன்பேடா'' என்கிறார் அதன் நீண்டகால ரசிகர் முத்து. மத்த ஊரு இனிப்புப் பிரியர்களுக்கு இது ஏதோ குலோப் ஜாமூன் வகையறா போலத் தோணும். ஆனா இது குலோப்ஜாமூன் இல்லே. ஜீரா இருக்கு. அது நடுவுல மெதுவடை சைஸுக்கு பிறக் குறதுக்குப் பேருதான் மக்கன் பேடா!

''சர்க்கரை அல்லாத பால்கோவா, மைதா, நெய், சர்க்கரை, பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை இதனோட சம விகிதக் கலவையில தயாராவது இது. இந்தக் கலவையில ஏதோ ஓரிடத்துல சின்ன மிஸ்டேக் ஆகிப் போச்சுன்னாலும் கடைசியா மக்கன் பேடாவா வராது. மக்கர் பேடாவா மாறிப் போயிடும். லைட்டா இதோட செய்முறையைச் சொல்றேன்.

வெறும் பாலைக் கண்டக் காய்ச்சி பால் கோவா ஆக்கி, மைதா - நெய் கலந்து உருண்டையா பிடிக்கணும். பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை மற்றும் பூரணத் தூளை உள்ளே தள்ளி, அந்த உருண்டைகளை நெய்யில் பொன் வறுவலாக வறுத்தெடுத்து, சர்க்கரை ஜீராவுல அரை மணி நேரம் ஊற வெச்சா மக்கன்பேடா ரெடி!

வேலூர் பழைய பஸ் ஸ்டாண்ட் பக்கத்துல சிம்லா ஜூஸ் பார்ல நாங்க நூத்தைம்பது வருஷமா பரம்பரையா, மக்கன்பேடா தயாரிப்புல ஈடுபட்டு வர்றோம்!'' எனக் கூறுகிறார் நான்காவது தலைமுறையைச் சேர்ந்த காசி தாஸ். ○

நியூஸ்


ஆரணி ஆவணம்

● எஸ்.பொன்னம்பலம்



பிரெஞ்சுக்காரர்கள் புதுவையை ஆண்ட போது பல நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. அதில் ஒன்று ஆரணி வராகன் என்று அழைக்கப்பட்டது. இது போன்ற சின்னச் சின்ன ருசிகரமான செய்திகளை உள்ளடக்கி 'ஆரணியின் வரலாற்றுப் பதிவுகள்' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார் மூத்த பத்திரிகையாளர் எஸ்.பொன்னம்பலம். ஊரின் பெயர்க் காரணம் முதற்கொண்டு, சமீப காலத்திய தேர்தலில் 92 சதவிகிதம் வாக்குப்பதிவானது வரை குறிப்பிட்டிருக்கிறார்.

தமது 18வது வயதிலேயே, ஆசைத்தம்பி துவக்கிய 'தனி அரசு' என்ற பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார் பொன்னம்பலம். அதன்பிறகு பல்வேறு நாளிதழ்களில் பணியாற்றி அனுபவம் பெற்றுள்ள பொன்னம்பலம், ''அவசர நிலைக் காலத்தை மறக்கவே முடியாது. தணிக்கை அதிகாரிகளுடன் போராடி, பல செய்திகளுக்கு அனுமதி வாங்கிப் போட்டது மட்டுமல்லாமல், அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவும் விதமாக தலைப்புகளிலேயே பல செய்திகளைச் சொன்னதை மறக்க முடியாது. தமிழ் மொழியின் விசாலத்தையும் ஆழத்தையும் அப்போது புரிந்து கொண்டேன்'' என்கிறார். ○



இந்துக்கள் கட்டிய முஸ்லிம் தர்கா!

வேலூர் கோட்டை மைதானத்தில், 'அஜரத் சைதானி பீ அம்மாள் தர்கா' அமைந்துள்ளது. அதனைக் கட்டியவர்கள் இந்துக்கள் என்பது சிறப்புத் தகவல். ''இந்த தர்கா எழும்பிட முக்கியஸ்தராக இருந்தவர் என் தந்தை வழி தாத்தா'' எனக் கூறுகிறார், கல்கியின் நீண்ட கால வாசகரும் ஆட்டோ ஓட்டுநருமான கே.ஆர்.தேவேந்திரன்.

''அஜரத் சைதானி பீ அம்மாள் என்பவர் உயிருடன் சமாதி நிலை அடைந்தார். வேலூர் நகர வியாபாரிகள் யோசித்து அந்த சமாதியை தர்காவாகக் கட்ட முடிவு செய்தனர். என் தாத்தா வி.த.லக்ஷ்மண முதலியார் தலைமையில், அப்போதைய கலெக்டர் துரையைச் சந்தித்து அனுமதி பெற்று 1909ல் தர்கா கட்டத் தொடங்கினர்.



திருமணமாகி நெடு நாளாகக் குழந்தை பாக்கியம் இல்லாமலிருந்த என் தாத்தா, சைதானி பீ அம்மாளை வழிபட்டு தர்கா கட்டிடும் வேலையில் ஈடுபட்டு வந்தார். முழுமையாகக் கட்டி முடிப்பதற்குள் அவருக்குக் குழந்தை பாக்கியம் கிட்டியதாக என் அத்தைகள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன் '' என்கிறார் கே.ஆர்.தேவேந்திரன்.


ஏந்தி பவன்

ஐந்தாவது வரை மட்டுமே பள்ளிக்குப் போன விழியரசு, அதற்குப் பின் அப்பாவின் நெசவுத் தொழிலில் இறங்கிவிட்டார். தொழில் அவரது நேரத்தை எடுத்துக்கொண்டாலும், தமிழ் ஆர்வம் தட்டுப்பாடற்ற ஊற்றாகப் பெருகியது. அதன் உச்சமாகத் தொடங்கிவிட்டார் சிறு பத்திரிகை. ''புதிய நற்றிணை என்னும் கலை, பண்பாட்டு மாத இதழை நடத்தி வருகிறோம். சிறு பத்திரிகைகளுக்குரிய பிரச்னைகளுடன் போராடிக்கொண்டே இப்போது நான்கு ஆண்டுகளாக நடத்திவிட்டோம்'' என்கிறார் விழியரசு. நற்றிணையின் தமிழ்த் தொண்டினை அங்கீகரிக்கும்விதமாக மத்திய அரசின் மைசூர் மொழி ஆராய்ச்சி நிறுவனம் மூன்றாண்டுகளுக்கு, முப்பதாயிரம் ரூபாய் மான்யமாக வழங்கி வருகிறது.

''இந்தத் தொகை எங்கள் போராட்டத்தில் வெள்ளிக்கீற்றுதான். ஆனாலும் இது பெரிய ஊக்கம்'' என்கிறார் விழியரசு. ''இருப்பதெல்லாம் தமிழனுக்கு இன்பத் தமிழ் ஒன்றே; இனியதையும் இழந்துவிட்டால் இங்கே வாழ்வில்லை'' என்ற தேவநேயப்பாவாணரின் வைர வரிகளை நெஞ்சில் நிறுத்திச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் விழியரசு.



● விழியரசு



வாழ்விக்கும் தமிழ்



ஸாரு பையனுக்கு நல்ல வேலை கிடைக்குமா?
ஸாரு வெளிநாடு போவாரா?

- வட்டவடிவமான 'சாமக்கலம்' எனப்படும் பித்தளைத் தட்டில், சிறு கோலால் டங், டங்கென்று தட்டியவாறு செங்கமலம் கேட்கும் கேள்விகளுக்கு மேலும் கீழும், வேக வேகமாகத் தலையாட்டுகிறது பூம் பூம் மாடு. இது மட்டுமா?

"ஐயா எந்தக் கையிலே ரூபா கொடுப்பாரு?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டவுடன் வலது காலைத் தூக்கி மடக்கிக் காண்பிக்கிறது மாடு.

"மூதேவி கை... பிச்சாங்கை எதுடா... சொல்றா ராஜா?" என்றவுடன் இடது காலைத் தூக்கி மடக்குகிறது. கடைசியாக, "ஸாருக்கு வணக்கம் சொல்லுடா!" என்றவுடன் வலது காலை மடக்கி, முட்டியைத் தரையில் வைக்கிறது மாடு. சாமக்கலத்தின் டங் டங்கும் தவிலின் டும் டும்மும் மினி நாதஸ்வரத்தில் (கிளாரினெட்?) வாசிக்கப்படும் 'வாள மீனும்' அந்த இடத்துக்குப் பரபரப்பைக் கூட்டுகின்றன. முகப்படாமும், முதுகில் வண்ணப் போர்வைகளும் போர்த்திக்கொண்டு இருக்கும் காளையின் கழுத்துக்குப் பின்பகுதியில் உள்ள



வர்றான் வர்றான் பூச்சாண்டி மாட்டு வண்டியிலே...





பூம் பூம் மாட்டுக்காரர்கள் குழுவாக கிராமத்தை விட்டுக் கிளம்பினால், திரும்பிவர ஒரு மாதம்கூட ஆகும்.

திமில் எனப்படும் கூம்பான பகுதியில் தொப்பி போல் வைத்து அதன் உயரத்தைக் கூட்டுகிறார்கள். இந்த பூம் பூம் மாடுகளுக்குப் பயிற்சி கொடுத்து எப்படித் தயார் செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டுமானால் வந்தவாசி அருகில் இருக்கும் பெரும்பாக்கம் கிராமத்துக்குச் செல்ல வேண்டும்.

பூம் பூம் மாட்டுக்காரர்களைத் தாசரிகள் என்கிறார்கள். பெரும்பாக்கத்தில் சுமார் நூறு தாசரி குடும்பங்கள் இருக்கின்றன. மூன்று தலைமுறைகளாக இங்கே வசிக்கும் இவர்கள் தெலுங்கு கலப்புடன் தமிழ் பேசுகிறார்கள். ஊராட்சி மன்ற உறுப்பினராக இருக்கும் முனுசாமிதான் தாசரிகளின் தலைவர். ''எங்களுக்குப் பூர்விகம் திருப்பதி. பெருமாளுக்கு நந்தவனம் உருவாக்கிப் பராமரித்து வந்தவர்கள் எங்கள் முன்னோர்கள். நந்தியைத்தான் நாங்கள் வழிபடுவோம். காலப்போக்கில் திருமலையை விட்டுக் கீழிறங்கி ஆங்காங்கே போய் செட்டில் ஆகிவிட்டோம். தமிழ்நாட்டிலேயே திருச்சி, காஞ்சிபுரம் பகுதிகளில் எங்கள் ஆட்கள் இருக்கிறார்கள்'' என்கிறார்.

அது சரி... பூம் பூம் மாடு எப்படி உங்கள் உடன்பிறப்பானது?

''சாமிக்கு வேண்டிக்கொண்டு காளை மாடுகளை நேர்ந்து விடறாங்க. அந்த மாடுகள்தான் எங்கள் பராமரிப்பின் கீழ் வருகின்றன. அவற்றைத்தான் நாங்கள் பூம் பூம் மாடுகளாக எங்கள் பிழைப்புக்கு உதவியாக உருவாக்குகிறோம்.''

பூம் பூம் மாடு லைனுக்கு வருவதற்கு கிட்டத்தட்ட ஆறு மாத காலப் பயிற்சிகள் தேவையாம். முதலில் மாட்டின் முதுகில் சங்கு, சக்கரத்தை முத்திரையாகப் போடுகிறார்கள். (பெருமாள் மாடு!) மாட்டுக்கு நான்கு, அல்லது ஐந்து வயதாகியிருக்க வேண்டும். ''முதல்ல மனித சகவாசம் அதுக்குப் பழகணும். சுமார் ஒரு மாத காலம் மாட்டைத் தடவிக் கொடுத்துக் கொண்டு, அதன் நெருக்கத்திலேயே இருப்போம். பின்னர் பயிற்சியை ஆரம்பிப்போம். காதைப் பிடித்துக் கிள்ளுவோம். மாடு உடனே தலையை மேலும் கீழும் ஆட்டும். இந்தப் பயிற்சி ஒரு மாத காலம் நடக்கும். நாங்கள் கையைக் காது அருகில் கொண்டு செல்வதுபோல் தூக்கினாலே, தலையை ஆட்டப் பழகிக்கொண்டு விடும்



* முனுசாமி



* வெங்கடேசன்

மாடு. அந்தப் பழக்கம் வந்தவுடனேயே சாமக்கலத்தைத் தட்டி, 'ஸாரு பணம் கொடுப்பாரா?' என்ற பல கேள்விகளை எழுப்புவோம். 'ஆமாம்' போட கற்றுக் கொண்டு விடும் மாடு.''

இப்படி பயிற்சி கொடுப்பது, மாட்டைக் கொடுமைப்படுத்துவது போல இருக்கிறதே...

''ஐயா சாமி அப்படிச் சொல்லாதீங்க... அது எங்க தெய்வம்'' என்று நெகிழ்ந்து சொல்கிறார் முனுசாமி.


இப்படிப்பட்ட பயிற்சிக்குப் பின் காளை மாட்டுக்கும், பசு மாட்டுக்கும் கல்யாணம் செய்து வைக்கிறார்கள். இந்தக் கல்யாணத்தைப் பார்க்க கிராமமே திரள்கிறது. மனிதர்கள் கல்யாணத்தில் இடம் பெறும் காசி யாத்திரை போன்ற காட்சிகள் எல்லாம்கூட காளை மாட்டுக் கல்யாணத்தில் இடம்பெறும். இந்தக் கல்யாணம் முடிந்தபின் காளைகளை அலங்கரித்துக் கொண்டு கிளம்பி விடுகிறார்கள் தாசரிகள். சாமக்கலம் அடிப்பவர், தவில்காரர், நாதஸ்வரக்காரர் என்று ஒரு டீமில் மூன்று பேர். கிராமத்தை விட்டுக் கிளம்பினால், திரும்பி வர சமயத்தில் ஒரு மாதம்கூட ஆகுமாம். ''சனிக்கிழமைகள் எங்களுக்கு செமை கலெக்ஷன் இருக்கும். பெருமாளுக்கு உகந்த நாளாச்சே'' என்கிறார் பெருமாள்.

முன்போல் நீண்ட முடி வளர்த்து கொண்டை போட்டுக்கொண்டு, நெற்றியில் நாமத்துடன் செல்வதற்கு வெட்கப்படுகிறது இப்போதுள்ள தலைமுறை.

தாசரி இனத்தில் யாரும் இதுவரை கல்லூரிக்குச் சென்றதில்லை
இப்போதுதான் சிலர் ப்ளஸ் டூ படிப்பை எட்டியிருக்கிறார்கள்

பெரும்பாக்கத்தில் உள்ள 75 குடும்பங்களில் பத்து குடும்பத்துக்கு நில வசதி இருப்பதால் அவர்கள் தொழிலுக்குச் செல்வதில்லை. தாசரி இனத்தில் யாரும் இதுவரை கல்லூரிக்குச் சென்றதில்லை. சில வருடங்களுக்கு முன்னர் கிராமத்தில் ஐந்தாவது வரை உள்ள பள்ளிக்கூடம் வந்ததால் தாசரி இனக் குழந்தைகள் படிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அரசு இவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டவர்களாக அடையாளம் கண்டிருக்கிறது. இப்போதெல்லாம் மாடு இல்லாமல் தவில், நாதஸ்வரத்துடன், அருகே இருக்கும் டவுன்களுக்கு தினசரி சென்று பாட்டுப் பாடி பிழைப்பை ஓட்டுகிறார்கள் தாசரிகள். அரசு இவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறது. சில சிறுவர்கள் இப்போது ப்ளஸ் டூ படிப்பை எட்டியிருக்கிறார்கள். ஒரு ரூபாய் அரிசியும், இலவசத் தொலைக்காட்சியும் இவர்களுக்கு வாழ்க்கையின் சுமையைக் குறைத்துவிட்டன. ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் கையில் பணம் பார்க்க வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. மாட்டைத் தடவிக் கொண்டிருக்கும் சிறுவன் வெங்கடேசனிடம், ''என்ன செய்யப் போற?'' என்றவுடன் ''டாக்டர் ஆகணும்'' என்று கண்களை அகல விரித்துச் சொல்கிறான் ஐந்தாவது படிக்கும் அந்தச் சிறுவன்.

வாசகர் யோசனை:
சண்முகம், திருவண்ணாமலை
படங்கள்: **ராஜன்**


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Chettinad
cement
செட்டிநாடு
சிமெண்ட்
உறுதிக்கும், உழைப்பிற்க்கும்

''**க**டலைக்கா போடலையா பக்கிரி?''னு குரல் கேட்குது. ''நாலைஞ்சு வருஷமா படுற பாடு போதாதா? இப்பவும் போட்டு பொட்டியக் கட்டிட்டு ஊரை விட்டுப் போவச் சொல்றியாக்கும்?''னு பதில் வருது. ''துணிஞ்சவனுக்குத் துக்கமில்ல. மலைச்சவனுக்கு மகசூல் இல்லனு எங்க ஏரியாவுல எல்லாத்தையும் மீறி இப்பவும் கொஞ்ச நஞ்ச ஆளுங்க கடலை போட்டிருக்காங்க. இதுக்கெல்லாம் அப்பால காட்டுப் பன்றிங்க கும்பலா வந்து சூறையாடிட்டுப் போன மிச்சம்தான், கூடைக்கு வந்து சேரும். வேறென்ன செய்யறது?'' என்கிறார் கொத்தமாரிக்குப்பம் கிராம விவசாயி.



குடியாத்தம் தாலுகாவில் ஜவ்ரிக்கல் காடு. வானம் பார்த்த பூமி. நிலக்கடலை, சோளம், கம்பு, துவரை, மொச்சை விளையும் மானாவாரி மண். இதில் நிலக்கடலை மூன்று மாதப் பயிர். அதுவும் பணப் பயிர். கடந்த நான்கைந்து வருடங்களாக அந்த வருமானத்தையும் சூறையாடுகின்றன காட்டுப் பன்றிகள். இது அப்பகுதி விவசாயிகளுக்குக் கடும் சவாலை உண்டு பண்ணி இருக்கிறது.!

''**நா**லைஞ்சு வருஷமாத்தான் தொல்லையா?'' என்றால், ''முன்னாலயும் இருந்திச்சு. ஒண்ணு ரெண்டு வரும். அதுவும் நாங்க செட் பண்ணி வெச்சருக்கற கம்பி வலையில மாட்டி அதுங்க செத்துப் போயிடும். அதனால காட்டுப் பன்றிங்க இனப்பெருக்கமும் இல்லாம இருந்திச்சு. நாலைஞ்சு வருஷத்துக்கு முன்னாடி வனத் துறையினர் ஊருக்குள்ளார வந்து, காட்டுப் பன்றிங்க செத்துப் போச்சுனா அதுக்குக் காரணமா இருக்கற ஆளுங்களைப் பிடிச்சு, பத்தாயிரம் ரூபா அபராதம் வசூலிக்க ஆரம்பிச்சாங்க. விவசாயிங்க எல்லோரும் மிரண்டு போனோம். எந்த விவசாயியும் வலை

" எங்கத் தலைமுறைக்கே கடலைதான் பணப்பயிர். அதுலயும் மண்ணைப் போடுது காட்டுப் பன்றி!"



விரிக்கறது இல்ல. அதுங்களோட இனப்பெருக்கம் அதிகமாகி இப்ப அதுங்களோட ராஜ்ஜியமா ஆகிப் போச்சு. நள்ளிரவுல வனப் பகுதியிலேருந்து வெளியே கூட்டமா வரும். கடலைக் காட்டைத் துவம்சம் பண்ணிட்டு விடியறதுக்குள்ள வனப் பகுதிக்கு ஓடிப் போயிரும். பள்ளக்குப்பம் வனப் பகுதியைச் சார்ந்த சுமார் பத்தாயிரம் ஏக்கர் கடலைக் காடு, கடுமையா பாதிக்கப்பட்டிருக்கு!'' என்கிறார் பள்ளக்குப்பம் கிராம இளைஞர்.

''எங்க தலைமுறைக்கே கடலை தாங்க பணப் பயிர். அதுலயும் மண்ணை அள்ளிப் போட்டுடுச்சு இந்தக் காட்டுப் பன்றிங்க. கலெக்டர்கிட்ட மனு தந்தோம். வன அதிகாரியைப் பார்க்கச் சொன்னாரு. வனத்துறை அதிகாரிகிட்டே மனு தந்தோம். எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கலை. ஆனா, சாகுபடிப் பயிர்களை அழிக்கிற காட்டுப் பன்றிகளைத் துன்புறுத்தக் கூடாது; வலை விரிச்சுப் புடிக்கக் கூடாதுனு வனத்துறை சொல்லுது. அப்ப இந்தக் காட்டுப் பன்றிகளை விவசாயக் காட்டுக்குள்ளார வரவிடாம தடுக்கறது வனத்துறையோட வேலைதானே? இல்லேன்னா, வனப் பகுதியில அரசாங்கமே காட்டுப் பன்றிகள் காப்பகம் அமைக்கணும். அப்பத்தான் எங்க சுத்துவட்டாரக் கிராமப் பகுதிகளோட கடலை சாகுபடியைக் காட்டுப் பன்றிகள்கிட்டே இருந்து காப்பாத்த முடியும்!'' எனக் கோரிக்கை வைக்கிறார் மேல்பட்டி - லெட்சுமியம் மாள்புரம் கிராம விவசாயி ரெங்கநாதன்.

வாசகர் யோசனை : **எல்.மாறன், மேல்பட்டி**



★ ரெங்கநாதன்



காலி பண்ணும் காட்டுப் பன்றி!

பத்தமடைக்குச் சவால்விடும் வந்தவாசி!




வந்தவாசிக்கு வருபவர்கள் திரும்பிப் போகும்போது அவர்கள் லக்கேஜில் கூடுதலாக இடம் பிடிக்கிறது அங்கே தயாராகும் பாய்கள். பாய்களில் பல விதம். சிங்கிள் கோரை, டபுள் கோரை, கலர் பாய், முகூர்த்தப் பாய் என்று நான்கு ரகங்கள். நாற்பத்தைந்து ரூபாயிலிருந்து தொண்ணூறு ரூபாய் வரை இந்தப் பாய்கள் விற்கப்படுகின்றன. மூன்று தலைமுறைகளாக பாய் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகிறது ஜானி பாட்சாவின் குடும்பம். ''ஒரு காலத்தில் இங்கே உள்ள காயிதே மில்லத் நகரில் எங்க ஜனங்க முழுவதும் இந்தத் தொழில்லதாங்க இருந்தாங்க. இப்ப குறைவா போச்சுங்க'' என்கிறார் ஜானி பாட்சா.


கிட்டத்தட்ட நானூறு ஆண்டுகளாக பாய்த் தொழில் நடந்து வருகிறதாம். பத்து வருடங்களுக்கு முன்பு வரை கூட கைத்தறியால்தான் பாய் செய்து வந்திருக்கிறார்கள். பின்பு விசைத்தறி புகுந்திருக்கிறது. இப்போது மிகச் சிலரே விசைத்தறிகள் வைத்து பாய்கள் தயாரிக்கிறார்கள். ''கையால் நெய்யும்போது மயில், தாஜ்மகால் என்று பலவித டிசைனெல்லாம் போட்டு, அற்புதமான பாய்களை எங்கள் முன்னோர்கள் தயாரித்திருக்கிறார்கள். ஒரு பாய் தயாரிக்க பத்து நாட்கள்கூட ஆகும். ஆனால் இப்போது அப்படியெல்லாம் செய்து கொண்டிருந்தால் கட்டுப்படியாகாது. விசைத்தறி மூலம் உற்பத்தி செய்கிறோம்'' என்கிறார் ஜானி பாட்சா.

பாயோட தரம் கோரையில்தான் இருக்கு. வந்தவாசி பாய் தயாரிப்பாளர்கள் திருச்சி மற்றும் வந்தவாசியைச் சுற்றியுள்ள தென்னாங்கூர், தெள்ளூர், பொன்னூர் ஆகிய இடங்களிலிருந்து கோரை தருவிக்கிறார்கள். கோரையை ஆறுமாதத்துக்கு ஒருமுறை அறுவடை செய்ய வேண்டும். ஒரு தடவை நடவு செய்தால் பத்து ஆண்டுகள் மகசூல் கொடுக்கும் கோரை. அறுவடை செய்து அப்படியே வந்தவாசிக்கு அனுப்ப முடியாது. பச்சைக் கோரையைக் கிழித்துக் காய வைத்து, பதம் செய்து அனுப்புகிறார்கள். கோரையில் எழுபது ரகங்கள் இருக்கின்றன.

வந்தவாசிக்குக் கோரை வந்ததும், மறுபடி கோரையைச் சுத்தப்படுத்துகிறார்கள். பின்னர் பச்சை, ஊதா, சிவப்பு என்று கலர் ஏற்றுகிறார்கள். ஒரு நாள் காய்ந்த பின் விசைத்தறியில் ஏற்றப்படுகிறது









கோரை. துணி நெய்வது போலத்தான் பாய் நெய்வதும். ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு பாய்கள் கூட தயாரிக்கிறார்கள். விசைத்தறியில் நெய்தவுடன், கையால் ஓரங்களைத் துணி போட்டுத் தைக்கிறார்கள். அப்புறம் சைஸ் வாரியாக கட்டிங். கலர் போடுவது, ஓரம் தைப்பது போன்றவற்றைப் பெரும்பாலும் பெண்கள்தான் செய்கிறார்கள். கைத்தறியில் பாய் நெய்து கொண்டிருந்தவர்கள் பெரும்பாலும், விசைத் தறியாளர்களிடம் மொத்தமாகப் பாய்களை வாங்கி சைக்கிள், மொபட்டில் வைத்து சுற்றுவட்டாரப் பகுதிகளுக்குச் சென்று விற்கிறார்கள்.

''தரமான கோரையைப் பயன்படுத்துவதால் எங்கள் தயாரிப்பு பத்தமடைப் பாய்களைக் காட்டிலும் சிறப்பானது. கோரை விவசாயம் குறைந்து கொண்டு வருவது கவலையளிக்கிறது. கொள்முதல் விலையும் உயர்ந்து வருகிறது. இருபது ஆண்டுகளுக்கு முன்னர் பன்னிரண்டு ரூபாய் விற்ற பாய் இப்போது நாற்பத்தைந்து ரூபாய். முப்பது ரூபாய்க்கு விற்ற முகூர்த்தப் பாய் இப்போது தொண்ணூறு ரூபாய். எதிர்காலத்தில் இந்தத் தொழிலில் இறங்க எங்கள் இளைய தலைமுறை விரும்பாது என்றுதான் நினைக்கிறேன். இப்போது அவர்கள் வேறு தொழில்களில் நாட்டம் காட்டுகிறார்கள்'' என்று சொல்கிறார் ஜானி பாட்சா. வியாபாரம் களை கட்டுவது பொங்கலின் போதுதானாம். கட்டில், மெத்தை கலாசாரம், இப்போது கிராமங்களிலும் பரவி விட்டதால் பாய்களின் தேவை குறைகிறதாம். ''ஆனால் கல்யாணத்தின்போது கட்டாயம் பாய் வாங்குகிறார்கள்'' என்கிறார் ஜானி பாட்சா.

"தரமான கோரைகளைப் பயன்படுத்துவதால் வந்தவாசி பாய் பத்தமடை பாயைவிடத் தரமானது!"

வாசகர் யோசனை : **சண்முகம்**



வாரியாருக்கு ஒரு கோயில்!



வாரியார் சுவாமிகளுக்கு ஒரு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் பிறந்த காங்கேயநல்லூரில். வேலூர் மாவட்டத்தில் காங்கேசுவரர் ஆலயம் மிகப் பழமையான கோயில். காங்கேசுவரர் கோயில் கொண்டுள்ளதே அவ் ஊரின் பெயர்க் காரணமாயிற்று.

1993ல் முக்தியடைந்தவர் வாரியார் சுவாமிகள். சுவாமிகளின் அன்பர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய 'தெய்வத்திரு திருமுருக கிருபானந்தா வாரியார் சுவாமிகள் டிரஸ்ட்!'

வாரியார் சுவாமிகளால் பல்வேறு கால கட்டங்களில் திருப்பணி செய்யப்பட்ட ஊர்க் கோயிலான சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு எதிரே, வாரியார் சுவாமிகளுக்குக் கோயில் கட்ட முடிவானது. வாரியார் சுவாமிகள் ஞான வளாகம் உருவாகி, கருவறை உள்ளிட்ட கோயிலாக அது மாற்றம் பெற்றது. கருவறையின் உள்ளே வாரியார் சமாதி அமைந்துள்ளது. அதன் அருகே யோக நிலையில் வடக்கு நோக்கி அமர்ந்த வண்ணம் கருங்கல் சிலையாக வடிவமைக்கப்பட்டுள்ளார் வாரியார் சுவாமிகள்.


1.9.2000ல் தமிழக முதல்வர் கருணாநிதி, இந்த ஞான வளாகத்தினைத் திறந்து வைத்துள்ளார். மறுநாள் 2.9.2000 அன்று கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. தற்போதும் தமிழகத்தின் பல ஊர்களிலிருந்தும், வேலூர் மாவட்டத்திலிருந்தும் பக்தர்கள் வாரியார் சுவாமிகள் கோயிலுக்கு வந்த வண்ணம் உள்ளனர். ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி அன்று சிறப்புப் பூஜைகள் நடத்தப்படுகின்றன. அன்று ஒரு நாள் மட்டும் சுமார் ஆறாயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

வாசகர் யோசனை: **ஆர்.சுஜாதா**




தரத்துடன் !
தூய்மையுடன் !!
அன்புடன் !!!
25 ஆண்டுகளாக . . .
வீனஸ்
VENUS
• கிளீனிங் பவுடர்
• கிளீனிங் பார்
• வாஷிங் பவுடர்
VENUS CHEMICALS
51, 9th Street, Tatabad, Coimbatore - 641 012.
Phone : 2493302, 5585811. Fax : 0422-2493303
Email : info@venuschemicals.com
*DISTRIBUTORS WANTED IN UNREPRESNTED AREAS


Wish you
Happy Deepavali
Whole Sale Dealer
for all Kinds of
Paper & Boards
star royal papers (p) limited
No.6, Varadarajulu Street, Egmore,
Chennai - 600 008. India
☎ 044 - 4344 5400 (30 LINES)
Fax : 044 - 4344 5466
Email : mail@starroyal.com



இங்கேயொரு இலங்கை தமிழ் மன்னன்!

வேலூர் பாலாற்றங்கரையில் தற்போது சமூக விரோதச் செயல்களுக்கு இடமாகவும் இரவு நேரங்களில் கேளிக்கை மையமாகவும் மாறிப் போயுள்ளதாக ஏரியாவாசிகள் கூறும் இந்த முத்து மண்டபத்துக்குள் உறங்குபவர்கள் யாராயிருக்கும்?

இலங்கையை ஆட்சி புரிந்த கடைசி தமிழ் மன்னனும், அவரது மகனும் பட்டத்தரசிகளும்தான். இலங்கையில் கண்டியைத் தலைநகரமாகக் கொண்டு, மதுரை நாயக்க வம்சத்தைச் சார்ந்த தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். அதில் கி.பி.1798 - 1815 வரையிலும் இலங்கையில் சிறப்பாக ஆட்சி செய்த விக்ரமராச சிங்கன்தான் கடைசி தமிழ் மன்னன்.

ஆங்கிலேயர்கள் இம்மன்னன் மீது நான்கு முறை போர் தொடுத்தனர். தமிழ் மன்னனும், பட்டத்தரசிகளும் சிறைப்பிடிக்கப்பட்டனர். அவர்களைக் கப்பலில் ஏற்றி தமிழகம் கொண்டு வந்து 1816ல் வேலூர் கோட்டையில் உள்ள அறையில் (தற்போது பதிவு அலுவலகம்) பதினாறு ஆண்டுகள் சிறை வைத்தனர்.

இதில் விக்ரமராச சிங்கன் 30.1.1832ல் மரணம் அடைந்தார். அதனைத் தொடர்ந்து வந்த சில வருடங்களில் அவரது மகனும், பட்டத்தரசிகளும் வரிசையாக இயற்கை எய்தினர்.

ஆவணமாயிருக்கும் இலங்கைத் தமிழ் மன்னனின் கல்லறையை இனியாவது அரசு கவனிக்குமா?

வாசகர் யோசனை:
சுஜாதா கணேஷ்





''இதுக்கு முன்னாடி நான் கைநாட்டுங்க. செஞ்ச குத்தத்தால நான் அனுபவிக்கறது ஆயுளு. சிறைக்குள்ளேயே வகுப்பு எடுத்தாங்க. இப்ப நான் கைநாட்டு கிடையாது. நாலு வருஷமா பூட்ஸ் தயாரிக்கற பிரிவுல வேலை செய்யறேன். வர்ற சம்பளத்தை வீட்டுக்கு அனுப்பி புள்ளைங்களைப் படிக்க வைக்கிறேன். பையன் காலேஜ்ல படிக்கிறான். என்ன படிப்புனு எனக்குச் சொல்ல வரமாட்டேங்குது!'' என்கிறார் வேலூர் மத்தியச் சிறைவாசி ஒருவர்.

வேலூர் மத்தியச் சிறை, ஆங்கிலேயர் ஆட்சியின்போது ஒன்றுபட்ட சென்னை ராஜதானியில் முதல் மத்திய சிறை. 1867ல் உருவாக்கப்பட்டது. இதற்குள் சிறைவாசிகளாக வந்துபோன அரசியல் தலைவர்களில் மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முன்னாள் குடியரசுத் தலைவர்கள் ஆர்.வெங்கட்ராமன் மற்றும் வி.வி.கிரி. அடக்கம்.



* என்.சேகர்

நூற்றைம்பத்து மூன்று ஏக்கர் பரப்பில் விரிந்து அமைந்துள்ளது.

சிறைக்குள்ளேயே ஒரு மருத்துவமனை, இரண்டு மருத்துவர்கள். சிறைவாசிகள் யாருமே கல்வியறிவு இல்லாதிருக்கக் கூடாது எனும் நோக்கத்தில், வளர் கல்வி திட்ட வகுப்புகள் நடைபெறுகின்றன. எழுதப் படிக்கத் தெரிவதில் நூற்றுக்கு நூறு இலக்கை நோக்கி விரைகின்றனர். இதற்கென ஆயிரம் சிலேட்டு மற்றும் நோட்டுப் புத்தகங்களை மாவட்ட நிர்வாகம் வழங்கியுள்ளது. ஏனைய சிறைவாசிகளுக்கு, பட்டதாரிகளான பத்து பேர் வகுப்பு எடுக்கிறார்கள். வகுப்பறைகள் மட்டுமல்லாது, சிறைக்குள்ளேயே பல அரங்குகளில் பல நிலை சார்ந்த தொழில்கள் இயங்கி வருவது, வேலூர் மத்தியச் சிறையின் தனிச் சிறப்பு.

தமிழக மத்தியச் சிறைகளிலேயே வேலூரில் மட்டும்தான் ஷூ யூனிட்





★ தையல் பயிற்சி

இயங்கி வருகிறது. தமிழக காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்புத் துறையினருக்கு இங்கிருந்துதான் ஷூக்கள் தயாரித்து அனுப்பி வைக்கப் படுகின்றன. இந்த யூனிட்டில் மட்டும் நூறு சிறைவாசிகள் வேலை செய்கின்றனர். ''இந்த வருட உற்பத்தி, இருபதாயிரம் ஜோடி ஷூ என இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது'' என்கிறார் வேலூர் மத்தியச் சிறை கண்காணிப்பாளர் என்.சேகர்.



நெசவுப் பிரிவு,

தமிழக மத்தியச் சிறைகளில் பெரிய ஷூ யூனிட் உள்ளது வேலூரில்தான்!

தமிழக அரசு மருத்துவமனைகளில் பயன் படுத்தப்படும் கட்டுத்துணி, இங்குதான் அதிக அளவில் உற்பத்தியாகிறது. அடுத்து பைண்டிங் செக்ஷன். கோப்பு அட்டைகள் அங்கு தயாரிக்கப்படுகின்றன. இந்த முறை ஐந்து லட்சம் கோப்பு அட்டைகளுக்கான ஆர்டர் வந்துள்ளதாம்.

அடுத்து இயங்குவது தையல் பிரிவு. வேலூர் மாவட்ட ரோட்டரி கிளப், பதினைந்து தையல் இயந்திரங்களை நன் கொடையாகத் தந்துள்ளது. லயன்ஸ் கிளப், அவர்களுக்கான தையல் ஆசிரியர்களை அனுப்பி வைத்துப் பயிற்சி தந்துள்ளது. தற்போது அந்த யூனிட்டில் முப்பது சிறை வாசிகள் தையல் வேலை செய்து வரு கின்றனர்.

''மத்தியச் சிறைக்குள் பத்தாயிரம் மரக் கன்றுகள் நட்டு வளர்ப்பதென இலக்கு நிர்ணயித்துள்ளோம். முனுசாமி என்னும் சிறைவாசி ஆயிரத்து முன்னூற்று முப்பது திருக்குறளையும் மனப்பாடமாக ஒப்பித்து, வி.ஐ.டி. வேந்தரிடம் பத்தாயிரம் ரூபாய் பரிசும், உலகப் பொதுமறை மன்றத் தலைவி ரூபி ரெஜினாவிடம் பத்தாயிரம் ரூபாய் பரிசும் பெற்றுள்ளார். அந்தத் தொகை மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த அவரது அம்மாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வேலூர் மத்தியச் சிறை, மாநிலத்திலேயே கல்வியிலும் தொழிலிலும் முதலிடம் பெறவேண்டும் என்பதே எங்கள் நோக்கம்!'' என்கிறார் வேலூர் மத்தியச் சிறை கண்காணிப்பாளர் என்.சேகர்.

★ ஷூ தயாரிப்பு






காலம் காட்டும் கல்கி!

“கல்கி இதழின் நகைச்சுவை போட்டியில் அரை பவுன் தங்க டாலர் பரிசு பெற்றேன். பின்னர் கல்கி நடத்திய ஒரு லட்ச ரூபாய் பொருட்கள் பரிசுப் போட்டியில் கைக் கடிகாரம் பரிசாக வென்றேன். இன்றுவரை என் கரத்தை அலங்கரிப்பது அந்தக் கைக் கடிகாரம். காலம் காட்டும் கல்கியாக எனக்கு நேரத்தை உணர்த்தி வருகிறது. அஞ்சல் வழிக் கல்வியில் எம்.ஏ., தேர்ச்சி பெற வேண்டுமென எண்ணியுள்ளேன். கல்கி தலையங்கங்கள் குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற வேண்டும் என்பது எனக்கு கல்லூரி நாட்களிலிருந்தே தீராத பேராசை'' என்கிறார் மேல்பட்டி கிராமத்தின் எல்.மாறன்.

இருபத்தைந்து வருட கல்கி வாசகர் இவர். இருபது வயதில் தொடங்கிய கல்கி மீதான வாசிப்பும் நேசிப்பும் இன்றுவரை தொடர்கிறது.

எழுதப் படிக்கத் தெரியாத பெற்றோர்கள், மாறனையும் அவரது சகோதரி கவிதாவையும் நன்கு படிக்க வைத்துள்ளனர். கரும்பூர் இந்து அரசு மேனிலைப் பள்ளி ஆசிரியையாகப் பணிபுரிகிறார் கவிதா. வணிகவியல் பட்டதாரியான மாறன், தனியார் நிறுவனங்களில் பணியாற்றியவர். இருபது வருடங்களாக அஞ்சலக சேமிப்பு முகவர். பதினைந்து வருடங்களாக ஆயுள் காப்பீட்டு முகவர். சுற்றுவட்டாரக் கிராமங்களில் ஒவ்வொரு குடும்பத்தைக் குறித்தும் விவரங்கள் விரல்நுனியில் வைத்துள்ளார். தன் சொந்தக் கிராமத்தில் பள்ளிப் பிள்ளைகளின் வசதிகளுக்காகவே, ஸ்டேஷனரி கடை ஒன்றை நடத்தி வருகிறார்.

வீட்டுக்குள் அலமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பைண்டு புத்தகங்கள், அத்தனையும் கல்கியில் வெளியான தொடர்கள். நிறைய பத்திரிகைகளுக்கு வாசகர் கடிதம் எழுதுவதும், போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் வெல்வதும் மாறனுக்கு வெல்லக் கட்டியை ருசிப்பது போல அத்தனை தித்திப்பு! ○





''உங்க ஆபீஸ்ல எத்தனை பேர் வேலை செய்யறாங்க?''

''பத்துபேர்ல ஒருத்தர்!''

- மலை அரசன்



''எம்மதமும் சம்மதமேன்னு கூறும் உன் மனைவியைப் போய் திட்டறியே...!''

''தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்ஜான் அப்டீன்னு எல்லா பண்டிகைகளுக் கும் புதுச் சேலை கேட்கறாப்பா...!''

- ஆர்.பஞ்சவர்ணம்



ரெண்டு புடவை



''புதுசா திறந்திருக்கிற ஜவுளிக்கடை போட்ட விளம்பர நோட்டீஸைக் கொடுத் துக்கிட்டு வர்றியே... என்னப்பா விஷயம்...?''

''அது நம்ம கடைதான் தாயி... நான் பிச்சை எடுக்கிற வீட்டைச் சேர்ந்தவங்க அங்கே துணி எடுத்தா 20% சிறப்புத் தள்ளுபடி உண்டு தாயி...!''

- ஆர்.பஞ்சவர்ணம்

‘‘வேலை செய்யற ஆபீஸ் கோயில் மாதிரினு நேத்து நான் சொன்னது வாஸ்தவம்தான்... அதுக்காக, இப்படி கழுத்தில ருத்திராட்சக் கொட்டைபோட... பேர்பாடியோட... அர்ச்சனைத் தட்டை ஏந்திக்கிட்டு வர்றது நல்லாயில்லே..!’’

- ஆர்.பஞ்சவர்ணம்





‘‘என்னாங்க! நீங்க எனக்கு ரெண்டு புடைவை வாங்கிக் கொடுக்கறதா கனவு கண்டேன்...!’’

‘‘அப்படியா? அப்ப ஒரு புடைவையை தீபாவளிக்கும் மற்றதைப் பொங்கலுக்கும் கட்டிக்க!’’

- ஆர்.பஞ்சவர்ணம்

கனவு!

‘‘டாக்டர் என்னை எப்போ டிஸ்சார்ஜ் பண்ணுவீங்க?’’

‘‘நான் சொந்தமா ஒரு வீட்டை உங்க ஃபீஸ்ல கட்டிக்கிட்ட பிறகு!’’

- சி.கலைவாணி





மயிலைக் காளை

கொஞ்ச நேரம் சும்மா நின்றபின், கிருஷ்ணன், ''நீ மகத்துக்குப் போகலையா?'' என்று கேட்டான்.

''நீ போகலையா?''

''நான்தான் இங்கே இருக்கேனே; எப்படிப் போயிருப்பேன்?''

''நானுந்தான் இங்கே இருக்கேனே; எப்படிப் போயிருப்பேன்?''

''நீ என்ன, சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையா?'' என்று சிரித்துக் கொண்டே கிருஷ்ணன் கேட்டான்.

பூங்கொடி பெருமூச்செறிந்தாள். ''கிளியாயிருந்தால் எவ்வளவோ நல்லாயிருக்குமே? ஒரு கஷ்டமுமில்லாமல் காட்டிலே சுகமாய்ப் பறந்து திரிந்து கொண்டிருக்கலாமே?'' என்றாள்.

கிருஷ்ணனுக்கு அவனையறியாமல் அசட்டுத்தனமாய்ப் பேச வந்தது. ''நாம் இரண்டு பேரும் கிளியாய்ப் போய் விடலாம்'' என்றான். பிறகு, ஏதோ நினைத்துக் கொண்டவன் போல், ''ஆமாம்! பூங்கொடி! நீ ஏன் முன்னைப் போலெல்லாம் வெளியிலேயே வருவதில்லை? உன்னைக் காணவே முடிகிறதில்லையே?'' என்று கேட்டான்.

''உனக்குத் தெரியாதா? சொல்லவேணுமா? ஒரு வருஷமாய்த்தான் என்னுடைய மாமன் பக்கவாயு வந்து படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாரே. மாமி ஒன்றும் அவரைச் சரியாய்க் கவனிக்கிறதில்லை. நான்தான் எப்போதும் அவர் பக்கத்தில் இருக்கவேண்டியிருக்கிறது. கொஞ்சம் அக்கம்பக்கம் போனால்கூட மாமன் கூப்பிட்டு விடுகிறார். எப்படி வெளியே வருகிறது?''

''நிஜந்தான். ஆனால் இரண்டொரு தடவை என்னைப் பார்த்தபோதுகூடப் பாராததுபோல் போய்விட்டாயே! அது ஏன்?'' என்றான் கிருஷ்ணன்.

வெட்கத்துடன் கூடிய புன்னகை அவள் முகத்தில் ஒருகணம் தோன்றியது. ''நாம் இன்னும் சின்னப்பிள்ளைகளா, என்ன? ஆண்பிள்ளைகளுடன் பேசக் கூடாதென்று மாமி ஒருநாள் கண்டித்தாள். அவள் சொல்கிறது நியாயந்தானே? யாராவது ஏதாவது சொல்ல மாட்டார்களா?'' என்றாள்.

இப்போது கிருஷ்ணன் உள்ளத்தில் ஒரு முக்கியமான கேள்வி எழுந்தது. 'இன்றைய தினம் பூங்கொடி எதற்காக இக்காட்டுக்கு வந்தாள்?' இந்தக் கேள்வி முன்னமே தனக்குத் தோன்றாதது அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. ஒருகணம், 'ஒருவேளை நம்மைப் பார்க்கத்தான் வந்திருப்பாளோ?' என்று எண்ணினான். அந்த எண்ணமே அவன் உடம்பை ஓர் அங்குலம் பூரிக்கச் செய்தது. உடனே அப்படி இருக்க முடியாதென்று தெரிந்தது. தான் காட்டில் மயிலைக் காளையைத் தேடுவது அவளுக்குத் தெரிந்திருக்க இடமில்லை. மேலும் தன்னைப் பார்த்ததும் அப்படித் திடுக்கிட்டு

மினி தொடர்



அமரர் கல்கி

நின்றாளே? ஏதோ மர்மம் இருக்க வேண்டும்.

''ஆமாம், இன்று எதற்காகக் காட்டுக்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

''அதைச் சொல்லக்கூடாது'' என்று கூறி, பூங்கொடி பக்கத்திலிருந்த புதரிலிருந்து இலைகளைக் கிள்ளிப் போடத் தொடங்கினாள்.

கிருஷ்ணனுடைய மனத்தில் இப்போது பயங்கரமான ஒரு சந்தேகம் உண்டாயிற்று. வேறு யாரேனும் ஓர் ஆண் பிள்ளையைச் சந்திப்பதற்காக ஒருவேளை வந்திருப்பாளோ? கண்ணால் கண்டிராத - வாஸ்தவத்தில் இல்லாத - ஒரு மனிதனின் பேரில் கிருஷ்ணனுக்கு அளவில்லாத அருவை உண்டாயிற்று; சொல்ல முடியாத கோபம் வந்தது.

பூங்கொடி சற்றுநேரம் தரையில் கால் கட்டை விரலால் கோடு கிழித்துக் கொண்டு நின்றாள். பிறகு நிமிர்ந்து பார்த்து, கவலை கொண்ட முகத்துடன் கூறினாள்.

''நான் ஒன்று சொல்கிறேன். கேள்; நான் தப்புக் காரியம் எதுவும் செய்யவில்லை. சத்தியமாகச் சொல்கிறேன்; தப்பு ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், நான் இன்று இந்தக் காட்டுக்கு வந்தது ஒருவருக்கும்

தெரியக் கூடாது. ஒருவரிடமும் சொல்லாமல் இருப்பாயா?''

''ஒருவரிடமும் நான் சொல்லவில்லை. ஆனால், எதற்காக வந்தாய் என்று என்னிடம் மட்டும் சொல்லிவிடு'' என்றான் கிருஷ்ணன்.

''அதுவும் இப்போது சொல்ல முடியாது, சமயம் வரும்போது நானே சொல்லுகிறேன். அதுவரையில் நீ என்னைக் கேட்கக் கூடாது. இது ஒரு முக்கியமான காரியம். என்னிடம் உனக்கு நம்பிக்கை இல்லையா? நான் தப்பான காரியம் செய்வேனென்று உனக்குத் தோன்றுகிறதா?''

இப்படிச் சற்று நேரம் வாக்கு வாதம் நடந்தது. கடைசியில் பெண்மை தான் வெற்றி பெற்றது.

''இதோ பார், பூங்கொடி! உன்னை நான் நம்புகிறேன். ஆனால், எனக்குத் துரோகம் செய்தாயென்று மட்டும் எப்போதாவது தெரிந்ததோ, அப்புறம் என்ன செய்வேனென்று தெரியாது'' என்றான் கிருஷ்ணன்.

''துரோகமா? அப்படியென்றால் என்ன?'' என்றாள், பூங்கொடி.

இருவரும் இராஜன் வாய்க்கால் வரையில் சேர்ந்து போனார்கள். அங்கே கிருஷ்ணன் பின்தங்கினான். பூங்கொடி போய்க் கொஞ்சநேரத்துக்குப் பிறகு வீடு சென்றான். வீட்டுக் கொல்லையிலே மயிலைக்காளை சாவதானமாய் அசை போட்டுக்கொண்டு நின்றது.

வேறு சமயமாயிருந்தால், கிருஷ்ணன் அதை நாலு அடி அடித்திருப்பான். மகத்துக்கு ஓமாம்புலியூர் போக முடியாமல் செய்துவிட்டதல்லவா? ஆனால், அச்சமயம் அவன் உள்ளம் மிகவும் குதூகலம் அடைந்திருந்தது. எனவே, மயிலைக் காளையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அதன் கன்னங்களைத் தடவிக் கொடுத்தான்.



எனக்குத் துரோகம் செய்தாயென்று எப்போதாவது தெரிந்ததோ...



துரோகமா... அப்படியென்றால் என்ன?

பெருமாள் கோனாரை நேயர்களுக்கு நான் அறிமுகப்படுத்தி வைக்க முடியாமல் இருப்பதற்காக வருந்துகிறேன். ஏனெனில், கதையில் அந்தக் கட்டத்துக்கு நான் வருவதற்கு முன்னால் அவர் காலமாகிவிட்டார்.

அதற்காக வருத்தப்படவேண்டாம். அவருக்குப் பதிலாக அவருடைய மனைவியைத் தெரிந்துகொள்ளுங்கள். அந்த அம்மாளுடைய உண்மைப் பெயர் என்னவோ நமக்குத் தெரியாது. ஊரிலே எல்லாரும் பிடாரி என்று அவளை அழைத்தார்கள். அந்தப் பெயரே நமக்குப் போதுமானது.

பிடாரி, பெருமாள் கோனாருக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட்டாள்.

முதல் மனைவியிடம் கோனார் ரொம்ப ஆசை வைத்திருந்தார். அவளுக்குக் குழந்தை பிறக்காதது ஒன்றுதான் கோனாருக்குக் குறையாயிருந்தது. அவள் இறந்த பிறகு, தம்முடைய சொத்துக்கு வாரிசு இல்லாமல் போகிறதே என்பதற்காக இன்னொரு தாரத்தை மணந்து கொண்டார். இரண்டாவது மனைவி அவருடைய விருப்பத்தை என்னவோ நிறைவேற்றி வைத்தாள். மூன்று குழந்தைகள் பிறந்தன. ஆனாலும், இந்தப் பிடாரியை ஏன் கல்யாணம் செய்துகொண்டோமென்று அவர் பலமுறை வருத்தப்பட்டதுண்டு. கோனார் இறந்ததும், பிடாரி தன் தலையிலிருந்த பெரிய பாரம் இறங்கியது போல் பெருமூச்சு விட்டாள். இனிமேல் வீடு, வாசல், நிலபுலன் எல்லாவற்றுக்கும் தானே எஜமானி. ஐந்து வயதுப் பிள்ளை மேஜராகும்வரையில் தன் இஷ்டப்படி எல்லாம் நடக்கும். ஊரையே ஓர் ஆட்டு ஆட்டிவிடலாம்.

ஸ்ரீமதி பிடாரிதேவியிடம் நீங்கள் அனுதாபம் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவள் கட்சியிலும் கொஞ்சம் நியாயம் உண்டென்பதைக் கவனிக்கவேண்டும். கோனார் ரொம்பக் கண்டிப்புக்காரர். அவரிருந்த வரையில் அவளுடைய பிடாரித் தனத்தின் முழுச் சக்தியையும் வெளிக்காட்ட முடியாமலிருந்தது. அதிலும் அவர் நோயாய்க் கிடந்த காலத்தில் படுத்தி வைத்த பாடு சொல்லத் தரமல்ல. பூங்கொடிதான் அவர் பக்கத்தில் இருக்கலாம். வேறு யாராவது பக்கத்தில் போனாலும் 'வள்வள்' என்று விழுவார். இதனால் இந்தப் பெண்ணுக்குத்தான் எவ்வளவு கர்வம்! அந்தக் கொட்டத்தையெல்லாம் இப்போது பார்க்கலாம்.

கோனார் காலஞ்சென்று நான்கு நாள் ஆயிற்று. வர வேண்டிய உறவு முறையினர் எல்லாரும் வந்து போய் விட்டார்கள். பிடாரி அம்மாள், வீட்டில் ஒருவரும் இல்லாத சமயம் வாசல் கதவைத் தாழிட்டு விட்டு வந்தாள். கூடத்தின் மத்தியிலிருந்த களஞ்சியத்தண்டை சென்றாள். அதன் ஓர் ஓரத்தில் பெயர்த்திருந்த இரண்டு கல்லைப் பிடுங்கி அகற்றினாள். அவ்வாறு ஏற்பட்ட துவாரத்தில் கையை விட்டாள். அச்சமயம் அவளுடைய முகத்தைப் பார்த்தவர்களுக்கு ஆட்டுப்பட்டிக்குள் நுழையும் நரியின் முகம் ஞாபகத்துக்கு வந்திருக்கக்கூடும்.

ஆனால், அடுத்த நிமிஷம் அந்த முகத்திலேயே ஏமாற்றமும் திகிலும் கலந்து காணப்பட்டன. மறுபடியும் மறுபடியும் கையை விட்டுத் துழாவினாள். கந்தல் துணி ஒன்றுதான் அகப்பட்டது.

அந்தப் பணம் எங்கே போயிருக்கும்?



''இங்கிருந்து திருவண்ணாமலை எவ்வளவு தூரம்...?''

''என் பையனுக்கும் படிப்புக்கும் உள்ள தூரம்...!''

- நங்கநல்லூர் ஜீவி

● கி.பி. முதல் நூற்றாண்டில் வேலூரில் சமணர்கள் வாழ்ந்ததற்கு அடையாளமாக அம்மணாங்குட்டை என்ற இடம் உள்ளது.

● கி.பி. 1526 - 1595 வரை வேலூரை ஆட்சி செய்த சின்ன பொம்மி நாயக்கர் தனது ராஜகுருவான அப்பைய தீட்சிதர் ஆலோசனை பேரில் வேலூர் கோட்டையையும், கோயிலையும் கட்டினார்.

● 1918ல் ஆரம்பித்த ஸ்ரீபாலகணேசர் மாவுமில்தான் ஆசியாவிலேயே பெரிய மாவு அரைவு நிலையமாக திகழ்ந்தது.

● 15.12.1966 அன்று மேலாலத்தூரில் மண் பரிசோதனை நிலையம் தொடங்கிய பிறகுதான் வட ஆற்காடு மாவட்டம் பசுமைப் புரட்சியில் சாதனை படைத்தது.

● திருப்பதி தேவஸ்தானம் சார்பில் நடத்தப்படும் ஸ்ரீவெங்கடேஸ்வரா மேனிலைப் பள்ளி 1875 முதல் இயங்குகிறது.

● 1751ல் ஆற்காடு நவாப்பிடமிருந்து ஆட்சியை ராபர்ட் கிளைவ் கைப்பற்றியதன் நினைவாக கோட்டைக்கு எதிரே நுழைவு வாயில் அமைக்கப்பட்டது. அதற்கு டெல்லி கேட் என்று பெயர்.

- அ.யாழினி பர்வதம்

துக்கடா நியூஸ்



பத்து நாளைக்கு முன் நரசிம்மலு நாயக்கர் வந்திருந்தார். கோனார் பெட்டியிலிருந்து அவருடைய பிராமிஸரி நோட்டை எடுத்துவரும்படி சொல்லவே, பிடாரி கொண்டு போய்க் கொடுத்தாள். நாயக்கர் அதை வாங்கிக் கொண்டு ரூ.150 நோட்டுகளாக எண்ணி வைத்தார். கோனார் அதை வாங்கி ஒரு கடுதாசியில் சுற்றித் தலையணைக்குள் செருகி வைத்துக்கொண்டார். கொஞ்ச நேரம் கழித்துப் பிடாரி அவரிடம் வந்து, ''பணத்தைப் பெட்டியில் வைக்கட்டுமா?'' என்று கேட்டபோது, ''சீ! போ! உன் காரியத்தைப் பார்!'' என்று எரிந்து விழுந்தார்.

அன்றிரவு பிடாரி சமையலறைக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு படுத்தாள். தூங்குவது போல் பாசாங்கு செய்தாளே யொழியக் கண்கொட்டவேயில்லை. இரவு ஜாமத்துக்குக் கோனார் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து சுற்று முற்றும் பார்த்தார். எல்லாரும் தூங்குகிறார்களா என்று பார்த்துவிட்டுத் தலையணைக்குள்ளிருந்து ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொண்டார். பிறகு மெள்ள மெள்ள நகர்ந்து சென்று களஞ்சியத்தை அடைந்தார். அந்தக் கற்களைப் பெயர்த்தெடுத்த பின்னர் உள்ளே கையை விட்டு ஒரு சின்னஞ்சிறு தகரப் பெட்டியை எடுத்தார். அதற்குள் நோட்டுகளை வைத்த பிறகு மறுபடியும் முன்போல் அதைத் துவாரத்துக்குள் வைத்து மூடிவிட்டு, திரும்பப் படுக்கைக்கு வந்து படுத்துக் கொண்டார்.

(அந்தப் பெட்டி எங்கே போயிற்று..? அடுத்த வாரம்...)

அருள்வாக்கு

கர்மா



பசுவைக் கட்டிப் போடாவிட்டால் அது பயிரையும் பாழாக்குகிறது; தானும் அடிபடுகிறது. அதுபோல் கர்மாவால் ஈஸ்வரன் நம்மைக் கட்டிப் போடாவிட்டால் நம்மையும் கெடுத்துக்கொண்டு லோகத்தையும் கெடுத்துவிடுவோம் - இப்போதே கெடுக்கிறோம். துர்பலத்திலேயே இவ்வளவு கெடுத்தால், சுயேச்சை பலம் பூரணமாக இருக்கும்போது எவ்வளவு கெடுப்போம்? கயிறு போட்டுக் கட்டுவதால்தான், ஏதோ ஒரு சமயத்திலாவது பசுவுக்குக் கட்டுத் தறியிடம் வந்து படுக்க முடிகிறது. கர்மம் கட்டுவதால்தான், நாமும் எப்போதாவது அதற்கு முளையான ஈஸ்வரனிடம் சித்தத்தைப் படுக்க வைக்கிறோம். இல்லாவிட்டால், பகவானை அடியோடு மறந்து, இப்படியே சம்ஸாரத்தில் உழன்று கொண்டுதான் இருப்போம்.

நம்முடைய நலனுக்காக, நாமே நமக்கு அதிக உபத்திரவத்தை உண்டாக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காக, பகவான் நம்மைக் கட்டிப் போட்டிருக்கிறார். 'எப்போது அவிழ்த்துவிடுவீர்?' என்று அவரைக் கேட்டால், 'ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யாமல், அதனால் உனக்கும் பாபம் உண்டாக்கிக் கொள்ளாமல் இருக்கிற பக்குவம் வந்தால், அவிழ்த்துவிடுவேன்' என்கிறார்.

குழந்தை விஷமம் செய்தால், கட்டிப் போடுகிறோம். நம்மிடம் 'ஆசை' என்ற விஷமம் இருப்பதால், நம்மைப் பசுபதி கட்டிப் போட்டிருக்கிறார். குழந்தைக்கு விஷம புத்தி போய்விட்டால் அப்புறம் கட்ட மாட்டோம். நமக்கு ஆசை போய்விட்டால் ஈஸ்வரனும் நம்மை அவிழ்த்துவிடுவார். கட்டு இருக்கிறவரையில் நாம் வேறு, ஸ்வாமி வேறு என்று பூஜிக்கிறோம். கட்டு போய்விட்டால் நாமே அவன் என்று தெரிந்துகொள்வோம். அப்புறம் பூஜைகூட வேண்டாம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

பக்கத்திலிருக்கும் சிறிய
நகரத்துக்குத்தான்
பேருந்து வசதியிருந்தது.
ஒரு நாளைக்கு மூன்று முறை வரும்
பேருந்துக்காக ஊரே தயாராகி நிற்கும்.

திருவிழாக் காலங்களில் விடப்படும்
சிறப்புப்பேருந்தில்
புளியம்பழத்தைக்
கொட்டையடிப்பதுபோல
நெட்டித் தள்ளும் கூட்டம்.

மழைக் காலத்தில் சாலை
கொழகொழத்துப்போகும்
ஏரி நிரம்பி வழிந்தால் சாலை
மூழ்கிவிடும்

தார் பூசப்பட்ட சந்தோஷங்கள்



எங்கள் ஊர் சாலை இனி
தேசியநெடுஞ்சாலையென்று
காது நிறைத்த செய்தியால்
சுத்துவட்டாரக் கிராமங்களும்
களியாட்டம் போட்டன

கூடுமிடங்களிலும்
விருந்தாளிகளிடமும் உறவுகளிடமும்
புதுப்புதுப் பேருந்து வரப்போவதைப்
பேசித் தீர்த்தோம்

இளைப்பாறிக் கிடக்க இடமளித்த
புளியமரங்கள்
சாலையோரங்களில் பசுமையை அள்ளி
நெஞ்சில் ஊற்றின

அறுவடை வைக்கோலைச் சாலையில்
பரப்பிவிட்டு
புளியமரத்தடியில் கதை பேசிக்
கிடப்போம்
அவசரத் தொட்டில்களில் குழந்தைகள்
தூங்கும்

சாலைப்பணி தொடங்கிய அன்று
போடவிருக்கும் சாலைக்காக
காவு கொடுக்கப்பட்ட
புளியமரங்களோடு
எங்கள் சந்தோஷமும் சரிந்தது!



ச. விசயலட்சுமி

சிரிப்போ தெரபி!

எம்.மிக்கேல்ராஜ்



மலை அரசன்



* தொல்காப்பியன்

கத்துக் கோங்க கம்புச் சண்டை!

* எஸ்.கே.பொன்னுச்சாமி

''சிலம்பப் பயிற்சியை நான் வேலையா பார்க்கலை. கலையை வளர்க்கணும்கற இலட்சியமா பார்க்கறேன். அந்தக் கலை மேல எனக்கு ஒரு தனி மரியாதை உண்டு'' என்கிறார் சிலம்ப ஆசான் எஸ்.கே.பொன்னுச்சாமி.

''கலைங்கிறது போற்றிப் பாதுகாக்கப்படவேண்டிய ஒன்னுதான். ஆனா பொத்திப் பூட்டி வைக்கற இரகசியம் இல்ல. அப்படித்தான் யாருக்கும் கத்துத் தராம பரம இரகசியமா வைச்சதால வர்மக்கலை மாதிரி பல அரிய கலைகள் அழிஞ்சிடுச்சு. என்னுடைய ஆரம்ப காலத்துல சிலம்பக் கலை மேல எனக்கு ஆர்வம் அதிகம் இருந்தும் யாரும் கத்துத் தாராததாலே சிரமப்பட்டேன். என்னோட அதிர்ஷ்டம் எஸ்.பி.மாணிக்கம்னு சிலம்ப குரு என்னோட சொந்த ஊரான ஈரோடு மாவட்டம், அந்தியூருக்கு வந்திருந்தாரு. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சிலம்பக் கலையைக் கத்துக்கிட்டேன். இந்தக் கலை அழியக்கூடாத மகத்தான கலை. இது சிறந்த உடற்பயிற்சி, தற்காப்புப் பயிற்சியும் கூட. அப்படிப்பட்ட கலையை வளர்க்கணும்னு நெனைச்சு களத்துல இறங்கினேன். என்னோட தேடல் என்னை மாதிரியே சிலம்பக்கலையைக் கத்துக்க ஆர்வமா உள்ளவங்கதான். ஆரம்பத்துல நாலு பேர், அஞ்சு பேருன்னு ஆரம்பிச்ச இப்ப சுத்துவட்டாரத்துல இருக்கற எல்லா பள்ளிகள்லயும் மாணவர்களுக்குக் கத்துக் கொடுத்துட்டிருக்கேன். ஐந்நூறு பேருக்கு மேல எங்கிட்டே பயிற்சி எடுத்துட்டிருக்காங்க'' என்கிறார்.

தற்போது இவர் வீர ஆஞ்சநேயர் சிலம்பக் கலைக்கூடத்தை நடத்தி வருகிறார். சிலம்பப் போட்டிகளில் நடுவராகவும், ஈரோடு மாவட்ட சிலம்பக் கழகத்தின் செயலாளராகவும் இயங்கி வருகிறார். இவரே பல சிலம்பப் போட்டிகளையும் நடத்தியுள்ளார். தொல்காப்பியன் என்னும் ஐந்து வயதுச் சிறுவனுக்கு இந்தக் கலையைப் புகட்டி மாவட்ட அளவில் வெற்றி பெறச் செய்துள்ளார். சிலம்பக் கலைக்காகவே தம் வாழ்க்கையை அர்ப்பணித்திருப்பதாகக் கூறுகிறார் இந்தச் சிலம்பக் காதலன்.

படங்கள், செய்தி : **கி.ச.திலீபன்**



போளூர் சி.ரகுபதி

என்னைப் பெண் பார்க்க இதுவரை பலபேர் வந்தாகிவிட்டது. எல்லாரிடமிருந்தும் ஒரே பதில் பெண்ணைப் பிடிக்கவில்லை. நான் பெரிய அழகி இல்லாவிட்டாலும் சுமாராக இருப்பேன். என்னைவிட மோசமாக இருப்பவர்களுக்கெல்லாம் திருமணம் ஆகிவிட்டது; எனக்கு ஆகவில்லை. காரணம் எங்கப்பா ஒரு சமையல்காரர். தொழிலை, அப்பாவும் நாங்களும் தெய்வமாகக் கருதினாலும் அதில் வரும் வருமானம் சாப்பாட்டுக்கும் வாடகைக்கும் சரியாக இருக்கும்.

அப்பாவின் தொழிலின் உதவியால் பல பெரிய மனிதர்களைத் தெரியும். அவர்கள் உதவியால் என் தம்பிக்குக் கல்லூரியில் படிக்கும் பாக்கியம் கிடைத்துள்ளது.

அப்பாவை போலத்தான் மாமாவும். அவர் எல்லா விசேஷங்களையும் ஏற்று நடத்துவதால் இன்று முதலாளி ஆகிவிட்டார். இப்போது அவரிடம் சமையல் செய்ய, சுற்று வேலை செய்ய நூறு பேர் வேலை செய்கிறார்கள்.

சிரிக்கச் சிரிக்கப் பேசி எல்லா காண்டிராக்ட்டும் தன்னிடமே வருமாறு பார்த்துப்பார். அப்பாவுக்கு அதுக்கெல்லாம் சாமர்த்தியம் போதாது. வேலை முடிஞ்சா கொடுத்ததை வாங்கிக்கொண்டு வருவார். இந்த வரும்படியில் என் திருமணத்தைப் பற்றி நினைக்க முடியுமா?

நாளை அப்பாவுக்கு வக்கீல் வீட்டு ஆண்டு நிறைவுக்குப் போக வேண்டும். வக்கீலின் மகள் மஞ்சு என் கூடப் படித்தவள். அவளது இரண்டாவது குழந்தைக்கு ஆண்டு நிறைவு.

வக்கீல் மாமி என் திருமணத்துக்குத் தாலி செய்து தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

நேற்று மஞ்சுவைக் கோயிலில் பார்த்தேன். 'இவளே திருமணம் ஆகாதவள். இவளிடம் போய் பெருமை அடித்துக் கொள்கிறோமே' என்ற எண்ணமே இல்லாமல் பெரிய மாமியைப் போல குடும்பம், குழந்தை, வீட்டுக்காரர் என்று ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தாள்.

வக்கீல் வீட்டுக்கு லிஸ்ட் கொடுத்து விட்டு வருவதாகக் கிளம்பிய அப்பா திடீர் என்று வாசல்படியிலேயே மயங்கி விழுந்து விட்டார். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. ஹார்ட் அட்டாக். ஹாஸ்பிடலில் சேர்த்தோம். 'நாளைக்குத்தான் சொல்ல முடியும்' என்றார்கள். கண்ணாடி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். ஏதேதோ குழாய்கள் செருக்கப்பட்டு அப்பாவைப் பார்க்கவே பயமாக இருந்தது. அம்மா பயந்து அழ ஆரம்பித்துவிட்டாள். அவளைச் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அழைத்து வந்தேன்.

'கடவுளே! நாளைய ஆண்டு நிறைவுப் பணத்தில் எந்தச் செலவுக்குத் திட்டம் போட்டிருந்தாரோ? இப்போது வந்த திடீர் ஹாஸ்பிடல் செலவுக்கு என்ன செய்வது?' சவால்கள் வரும் போதுதான் நம்மிடம் மறைந்திருக்கும் திறமை நமக்கே தெரியும் போலும். ஓடினேன் வக்கீல் வீட்டுக்கு. கொஞ்சம் பணம் வாங்கி தம்பியிடம் கொடுத்து வீட்டுக்குப் போகச் சொன்னேன்.

எல்லோருக்கும் மகிழ்ச்சி விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வசந்தம் வருவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகலாம் அவ்வளவுதான்.

நானே அப்பாவின் வேலையைச் செய்வதாகச் சொன்னேன். முதலில் தயங்கினார்கள். பிறகு, கடைசி நேரத்தில் யாரைக் கூப்பிடுவது என்று நினைத்து என்னையே ஏற்று நடத்தச் சொன்னார்கள்.

சின்ன வயதிலிருந்தே சாப்பாடு, பலகாரம்... என்று வாழ்ந்த எனக்கு இந்த நூறு பேர் சமையல் அவ்வளவு பெரிதாகத் தெரியவில்லை.

சமையல் மிகவும் நன்றாக இருந்தது என்று வந்தவர்கள் எல்லாரும் புகழ்ந்தார்கள். என்னை பலர் அவர்கள் வீட்டு விசேஷத்துக்கு அழைத்தனர். ஒரு மாமி அடுத்த வாரம் நடக்கும் அவர்கள் வீட்டு சீமந்தத்துக்கு அட்வான்ஸ் பணத்தையே என்



''கிரிவலம் எப்படிப் போகணும்?''

''லா...கிரி வஸ்து எதுவும் யூஸ் பண்ணாம போகணும்...!''

- ஜி.வெங்கட்ராமன்

கையில் கொடுத்துவிட்டார்.

அட என்னாலேயும் முடியுதே... ஏன், மாமாவைப் போல் நாமும் ஏற்று நடத்தினால் என்ன? விருந்துகளில் பெண்கள் பரிமாறினால் இன்னும் அழகாக இருக்குமே? வக்கீல் மாமாவும் பேங்க்கும் கைகோத்து உதவ, என் போன்ற பல பெண்களைச் சேர்த்துக்கொண்டேன். அடுப்படியில் வேலை செய்யும்போது தனி உடை, 'உணவு வழங்கும்போது பல வண்ணங்களில் என பலவிதமாக வாங்கிக் கொடுத்து ஃப்ரெஷ்ஷாக ஸ்டார்ட் ஆனது கேட்டரிங் பிஸினஸ். தொழிலில் அமர்க்களமான முன்னேற்றம்.

இப்போது நானும் மாமாவைப் போல ஒரு சமையல் ஏஜென்ட். பெண்கள் என்பதால் நிறைய பேர் அழைத்தார்கள். அப்பா இப்போது வீட்டிலேயே இருக்கிறார். வரும் வேலைகளின் நாட்களைத் தேதிவாரியாகப் பிரித்து ஏற்பாடு செய்யவே அவருக்கு நேரம் சரியாக இருக்கும். கையில் போட்டிருக்கும் மோதிரத்தையும் வாட்ச்சையும் அடிக்கடி பார்த்து ரசித்துக் கொள்வார்.

பல விசேஷங்களிலும் என்னை இப்போது பார்க்க முடியும். ஆனால் புகழுக்கோ பணத்துக்கோ நான் இந்த வேலைக்கு வரவில்லை. எனக்கும் எல்லாரையும் போல திருமணம் நடக்க வேண்டும் என்பதற்காக!

அப்பா ஃபோனில் சொல்லிக் கொண்டிருந்தார். ''இல்லீங்க... அடுத்த புதன் கிழமை அவளால செய்ய முடியாதுங்க... வேற யாராவது பார்த்துக்கங்க!''

''.........''

''அவங்க மாமாவும் அந்த சமயத்துல ஒரு கல்யாண ஆர்டர் ஒத்துக்கிட்டிருக்காரு. ஆமா என் பொண்ணு கல்யாணத்துக்குத் தான்.''

ஃபோனை வைத்துவிட்டு கல்யாண வேலையில் மீண்டும் பரபரப்பானார்.

'எல்லோருக்கும்தான் மகிழ்ச்சி விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வசந்தம் வருவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகலாம். அவ்வளவுதான்!' என்று எண்ணிக்கொண்டேன். ○

துக்கடா நியூஸ்

வாரியார் ஒரு சொற்பொழிவில் சொன்னது:

''கள்ளைக் குடித்தால்தான் போதை வரும் என்பதில்லை; 'கள்' என்று வாயால் சொன்னால்கூட பலருக்கு போதை மயக்கம் வந்திடும். ஒருவரைப் பார்த்து 'நீ' என்று ஒருமையில் அழைப்பதற்குப் பதில், 'நீங்கள்' என்று அவரைப் பன்மையில் அழைத்துப் பாருங்கள். உடனே அவர் மயங்கிப் போவார். காரணம், 'நீங்கள்' என்று பிரயோகித்த சொல்லில் இருந்த 'கள்'தான்.''

- வே.ந.கதிர்வேல், வேலூர்-6



''ஸார் என் செல்ஃபோன் இங்க வெச்சிருந்தேன் பாத்தீங்களா?''

விஜயவாடாவில் காலையில் எழுந்ததும் முதல் வேலையாகப் புத்தகத்தைப் புரட்டிக் கதையினுள் மூழ்கியவனை இப்போதுதான் அந்தக் குண்டு ஆசாமியின் குரல் வெளியே இழுத்துவந்து போட்டது.

''என்ன ஸார்...?''

''ஸார் என் செல்ஃபோன் பக்கத்துல வெச்சிட்டு பாத்ரூமுக்குப் போயிருந்தேன். பாத்தீங்களா?''

அந்த ஆளுக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். வெள்ளை வேட்டி. அரைக்கை பனியன் போட்டிருந்தார்.

''தெரியலை ஸார் நான் பாக்கலை... உங்க மனைவிகிட்ட கேட்டுப்பாத்தீங்களா...?''

''இல்லை ஸார் இப்பதான் உங்க பக்கத்துல இப்படி வெச்சிட்டு...''

இவனுக்குக் கடுப்பாக இருந்தது.

''நம்பரைச் சொல்லுங்க வேணும்னா அடிச்சுப் பாக்கறேன்.''

''ஸார்... இப்பதான் ஸார் அஞ்சு நிமிஷம் கூட ஆகியிருக்காது.''

படித்துக்கொண்டிருந்த கதையின் நாயகி இவனது எரிச்சலைக் கண்டு சிரிப்பதுபோல் பட்டது. ச்சே எத்தனை துள்ளலான பெண். மணிரத்னம் நாயகிகளுக்கெல்லாம் இவள்தான் இன்ஸ்பிரேஷனோ? அவனது மனசு மீண்டும் பாதியில் நிறுத்தியிருந்த கதைக்குள் விழுந்தது.

''ஸார் என் செல்ஃபோன் காணோம்னு சொல்லிக்கிட்டிருக்கேன். நீங்க பாட்டுக்குச் சிரிக்கிறீங்க.''

இவன் அந்த ஆளை முறைத்தான்... ''ஹலோ ஸார். நான்தான் நம்பரைச் சொல்லுங்க. போட்டுப் பாக்கறேன்னு சொன்னேன் இல்ல...''

சட்டென என்ன தோன்றியதோ, கோபத்தை அடக்கிக்கொண்டு அமைதியாகப் புன்னகைத்தபடி தன் இருக்கையிலிருந்து எழுந்து அவருக்குக் காண்பித்தான்.

அங்கு இருக்கை வெறுமையாக இருப்பது கண்டு வெறுத்துப் போன அவருக்கு முகம் சுருங்கிப்போனது...

''பரவாயில்லை ஸார் இப்பவாவது நம்பரைச் சொல்லுங்க. போட்டுப் பாக்கறேன்.''

அவர் வேறுவழியில்லாமல் நம்பரைச் சொல்லத் துவங்க, இவன் செல்ஃபோனை வைத்துக்கொண்டு என்னைத் தட்டத் தயாராக, காணாமல்போனதாக அந்த நபர் சொன்ன ஃபோனைக் காதில் பொருத்தி, யாருடனோ பேசியபடி

பகல் மீன்கள்




அந்த நபரின் குண்டு மனைவி கூபேயினுள் நுழைந்தாள்.

பெரிசுக்கு முகத்தில் ஈ ஆடவில்லை. இவன் சிரித்தபடி அங்கிருந்து எழுந்து கொண்டான். கைக்கு அடக்கமான அந்தப் புத்தகத்தை பேகினுள் சொருகி வைத்து விட்டுப் பெட்டியை விட்டு வெளியே வந்தான்

காற்று உற்சாகமாக அவன் முகத்தில் மோதியது. இனம்புரியாத மகிழ்ச்சி மனத்தில் அலையடித்தது.

ஒவ்வொரு பெட்டி முன்பும் சிறு சிறு கூட்டம் அமர்ந்து வெட்டியாக வம்பளந்து கொண்டிருந்தது. ஒரு பெட்டி முன்பு மட்டும் பெரிதாகக் கும்பல் கூடி எதையோ பாடிக் கொண்டிருந்தனர். கையில் டோலக்கு, ஜால்ராகூட இருக்கும் போல. காலை ஏழுமணி வெயில் அவர்களுக்குள் உறங்கிக் கிடந்த கலைஞர்களை உசுப்பி

அஜயன் பாலா



விட்டதோ என்னவோ?

அவன் சத்தம் வந்த என்ஜினின் திசையை நோக்கி நடந்தான். வழியில் நின்ற டி.டி. ஆரிடம் என்ன பிரச்னை எனக் கேட்டுத் தெரிந்துகொண்டான். 'ஆந்திராவில் வேறு என்ன... நக்சலைட் பிரச்னைதான்' என தமிழ் டி.டி.ஆர். நொந்துகொண்டார். விஜயவாடாவுக்கும் ஏலூருக்கும் இடையில் இருந்த முக்கியமான பாலம் ஒன்றில் சக்தி மிகுந்த குண்டுகள் வைத்துவிட்டார்களாம். அதைத் தேடி அப்புறப் படுத்தியபின்தான் ஹவுரா மெயில் நகருமாம். எப்படியும் இரண்டு மணிநேரம் ஆகிவிடும் என அவர் புலம்பினார்.



துக்கடா நியூஸ்

தமிழகத்தில் ராணுவ வீரர்கள் நிறைந்த மாவட்டம் வேலூர்! ஆரணிச் சாலையில் அமைந்துள்ள 'கம்மவான் பேட்டை' கிராமத்தில் வீட்டுக்கு ஒருவர், இன்றும் ராணுவத்தில் பணியாற்றி வருகின்றனர்! இந்த ஊரை 'ராணுவப் பேட்டை' என்றே செல்லப்பெயரிட்டு அழைக்கின்றனர்!

- மன்னை ஜீ.நீலா

இவன் கூட்டத்தினூடே கடந்து கச்சேரி நடந்த இடத்துக்கு வந்தான். அது ஒரு வித்தியாசமான கலவையாக இருந்தது. குடும்பத்துப் பெண்களும் குழந்தைகளுமாக இருந்தனர். பூரி ஜெகன்னாதரைச் சந்திக்க கடலூர் பக்கமிருந்து வந்திருக்கும் ஐம்பது, அறுபதுபேர் கொண்ட கோஷ்டி போலிருக்கிறது. கைத்தட்டலும் கேலியும் கிண்டலுமாக அந்த இடமே களைகட்டிக் கொண்டிருந்தது. ட்ரவுசர் போட்டபடி தோளில் துண்டும் தொந்தியும் தொப்பையுமாக விநோதமாகக் காட்சியளித்த நபர்தான் அங்கு ஹீரோ போல ஆர்கெஸ்ட்ராவை கண்டக்ட் பண்ணிக்கொண்டிருந்தார். ஒருவர் நன்றாகப் பாடத் தெரிந்தவர் போல, 'புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே' எனப் பாடி முடித்தார். கரகோஷம் அதிகமாக இருந்தது. ஒரு இளைஞன் சினிமா பாட்டுக்கு மாறும்படி கெஞ்சிக்கொண்டிருந்தான். ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி, 'வாராயோ தோழி வாராயோ' எனப் பாடத்துவங்கினாள். ''அக்காவுக்கு இன்னும் நலங்கு வைச்ச ஞாபகம் போகல போலிருக்கு'' என இன்னொரு பெண்மணி கிண்டல் செய்ய, பாடிக்கொண்டிருந்தவருக்கு வெட்கம் வந்து பாட்டு பாதியில் நின்றது.

''இப்போதுதான் அவன் அந்தப் பெண்ணைக் கவனித்தான் சூழலுக்குச் சற்றும் பொருந்தாத ஜீன்ஸ் அணிந்த பெண்ணொருத்தி, வேடிக்கை பார்ப்பவர்களிடையே அதிக உற்சாகமாகக் கைதட்டிக் கொண்டிருந்தாள். இவள் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவளில்லை என்பது பார்த்ததுமே இவனுக்குத் தெரிந்தது. வாராயோ

தோழி பாடியவரின் அருகில் அமர்ந்து, ''அக்கா நல்லா பாடினீங்க ப்ளீஸ் பாட்டை கன்டினியூ பண்ணுங்க'' எனக் கெஞ்சிக்கொண்டிருந்தாள். ''வேணாம் கண்ணு போதும்'' என அந்த அம்மாள் அவளின் பேச்சைக் கனிவுடன் தட்டிக் கழித்தாள். ''இப்ப நீங்க பாடலைன்னா அப்புறம் நான் பாடிடுவேன்'' என்றாள். தொப்பை ஆசாமிக்கு உற்சாகம் பொத்துக்கொண்டது. ''அக்கா பாருங்க... இவுங்க பாடி அப்புறம் வண்டி கிளம்பி ஓடிடுச்சன்னா அப்புறம் எல்லாரும் இங்கேயே டெண்ட் போட வேண்டியதுதான். தொப்பை ஆசாமி கிண்டல் செய்ய மொத்தக் கூட்டமும் கைதட்டி ரசித்தது.

இப்போது அதே கூட்டத்தைச் சேர்ந்த இன்னோர் இளைஞன் மீண்டும் அந்த ஜீன்ஸ் பெண்ணிடம் ''உன் பேர் என்னம்மா?''

''தேன்மொழி.''

''தேன்மொழின்னு பேர் வைச்சவங்களுக்கெல்லாம் எங்க ஊர்ல பாட அனுமதிக்கறதில்லம்மா...'' எனக்கூற இப்போது கூட்டத்தில் இவனும் கலந்துகொண்டான். தொப்பையிடம், ''அண்ணாச்சி நீங்க அவங்களைப் பாடவைச்சீங்கன்னா அப்புறம் நானும் பாடுவேன் சொல்லிப்புட்டேன்'' எனக் கூற, ''அய்யய்யோ இது என்ன வம்பாப் போச்சு. நாங்கள்லாம் ஊர் போய்ச் சேர வேணாமா?'' ட்ரவுசர் ஆசாமி அலறுவதைப் போல நடிக்க, அந்த இடமே சிரிப்பலையால் அதிர்ந்தது.

இந்த எதிர்பாராத தாக்குதலைச் சமாளிப்பவளாகத் தேன்மொழியும் அவர்களோடு சேர்ந்து சிரிப்பதைப்போல கைதட்டிக்கொண்டே, ட்ரவுசர் பக்கத்தில் நின்றபடி சற்றுமுன் தானும் பாடுவதாக அடம்பிடித்த அவனைப் பார்த்தாள். மெட்ராஸ் மூஞ்சி பளிச்செனத் தெரிந்தது.



துக்கடா நியூஸ்

ஆரூரில் பிறக்க முக்தி; தில்லையம் பதியைத் தரிசிக்க முக்தி; காசியில் இறக்க முக்தி. ஆனால், அண்ணாமலையை நினைத்தாலே முக்தி. அத்தகைய பெருமை வாய்ந்த முக்தி திருத்தலம் திருவண்ணாமலை.

- எ.வெங்கடேசன்

மேலும் அவளுக்குப் பிடிக்காத கறுப்பு நிறத்தில் வேறு அவன் டீஷர்ட் போட்டிருந்தான். இசைக்கும் இவனுக்கும் இரண்டாயிரம் கி.மீ இடைவெளி என்பது, அவன் மூஞ்சியில் எழுதி ஒட்டியிருப்பதை வாசித்தவளாக அவனை இன்சல்ட் செய்யும் விதமாக ஓர் அலட்சியப் பார்வையை அவன் மேல் வீசி சட்டென திருப்பிக் கொண்டாள்.

இதற்குள் சட்டென சூழல் இவள் பக்கமாகத் திரும்பியிருந்தது. பெண்களின் கூட்டத்தில் பலர் இவளுக்கு ஆதரவாகப் பேசி பாட வாய்ப்பு வாங்கித் தந்தனர். துவக்கத்தில் கொஞ்சம் வெட்கப்படுபவளாக நடித்தவள், முன்பு பாடிய பெண்மணியின் வற்புறுத்தலுக்குப் பின் பாடச் சம்மதித்தவளாகச் சப்பணம் போட்டு,

கண்களை மூடி அமர்ந்தான்.

அனைவரது பார்வையும் அவன் மேலேயே குவிந்து கிடந்தது. இவனும் அவள் என்ன பாடப்போகிறாள் என்பதை அறிய ஆவல் கொண்டவனாக நின்று கொண்டிருந்தான். பெரும்பாலும் சூழலுக்குச் சற்றும் பொருந்தாமல் 'வசீகரா' என ஆரம்பிப்பாள் என்றுதான் நினைத்திருந்தான்.

ஆனால் அவளோ, 'செந்தூர் முருகன் கோயிலிலே ஒரு சேதியை நான் கேட்டேன்' எனத் துவங்க, சட்டென அந்த இடமே அவளது குரலின் வாத்ஸல்யத்தில் உறைந்து நின்றது.

முழுவதுமாக அவள் பாடி முடித்ததும் கைதட்டல் ஓசை அதிகமாக இருந்தது. சற்று நேரம் கழித்து மெதுவாக அவள் கண்விழித்தபோதுதான் தன்னைச் சுற்றி பெரும் கூட்டம் கூடிவிட்டிருந்ததை உணர்ந்தாள்.

கைத்தட்டாமல் வெறுமனே அந்தக் கறுப்பு டீ ஷர்ட் வேடிக்கை பார்ப்பதைக் கவனித்தாள்

அனைவரும் இவளிடம் இன்னொரு பாட்டைத் தொடர்ந்து பாடுமாறு நச்சரித்தனர்.

தேன்மொழி இப்போது அந்தக் கறுப்பு டீ ஷர்ட்டைப் பார்த்துக் கை நீட்டினாள்.

''ஏதோ அப்ப பாடப்போறேன். அது இதுன்னு பந்தா பண்ணீங்க ம்.. நாந்தான் பாடிட்டேன்ல்ல இப்ப பாடுங்க'' எனக் கூறி பழிதீர்க்கும் விதமாக முறைத்தாள்.



எவ்வளவோ கட்டுப்படுத்தியும் தன்னை மீறி அழுகை வெளிப்பட்டு விட்டது தேன்மொழிக்கு!

நான் பாடுனா அதுக்குப் பக்கவாத்தியம் லாம் பக்காவா இருக்கணும்.''

''பாடத் தெரியாதுன்னு சொல்லிட்டு அந்தப் பக்கமா போய் உட்கார்ந்து வேடிக்கை பாருங்க.''

''சரி... உங்களைவிட நான் நல்லா பாடிட்டேன்னா இந்தக் கோபத்தை வாபஸ் வாங்கிக்கறீங்களா?'' அவன் சிரித்துக்கொண்டே தேன்மொழியைப் பார்த்தான்

''முதல்ல பாடுங்க பார்ப்போம்''

இப்போது அனைவரது பார்வையும் அவன் மேல் குவிந்தது. தேன்மொழியும் அவன் முகத்தையே பார்த்தாள்.

எல்லோருடைய இதயத்துக்குள்ளும் பனிக்கட்டி உடைவது போல் ஒரு குரல். வாழ்வில் இப்படி ஒரு குரலை அவள் கேட்டதே இல்லை. அவன் பாடியது ஒரு நாட்டுப் பாடல். புதுப் பாவாடை இல்லாததால் பள்ளி செல்ல மறுக்கும் மகளுக்கு, தான் வாழ்வில் கடந்த துயரங்களைச் சொல்லிப் பழைய பாவாடையையே உடுத்திவிடும் ஒருதாய் பாடுவதாக அமைந்த பாடல்.

எதற்காக அழுகிறோம் எனத் தெரியாமலே அனைவரும் அழுதுகொண்டிருந்தனர்.

எவ்வளவோ கட்டுப்படுத்தியும் தன்னை மீறி அழுகை வெளிப்பட்டு விட்டது தேன்மொழிக்கு.

(மீன்கள் துள்ளும்)

நீங்கள் கேட்டவை
தராசு

ஓ போட வைக்கிறாரே ஒபாமா?


* ஓஹோபாமா!

• கு.அருணாசலம், தென்காசி

? தி.மு.க.வினருக்குத் தரப்படும் பரிசுப் பொருட்களைக் கட்சிக்குத் தர வேண்டும் என்று மு.க. உத்தரவு போட்டிருப்பது பற்றி?

! பரிசுப் பொருட்களே தரவேண்டாம் என்று உத்தரவு போட்டிருந்தால் அது ஜனநாயகத்துக்கு உகந்த நல்ல கருத்து. கருவூலத்துக்கு எல்லாமும் வந்து சேராது என்பதுடன், பரிசளிக்கும் கலாசாரத்தால் கட்டாய வசூல் கொடுமை அதிகரிக்கும். அந்தக் கொடுமைக்கு மு.க. வழங்கியுள்ள லைசென்ஸ் இந்த அறிவிப்பு!

• ஆர்.வி.ரமணி, சென்னை - 28

? இலங்கைத் தமிழர்களின் நிலைமையை நேரில் கண்டறிய எம்.பி.க்கள் குழு செல்வது சரிதான். ஆனால், சொல்லிவிட்டுச் சென்றால் உண்மை வெளிப்படுமா? திடீர் விஸிட் போக வேண்டாமா?

! சொல்லிவிட்டுப் போனதிலேயே பல வித சோகங்கள் தெரிய வந்துள்ளன. குழுவினர் சேகரித்துள்ள தகவல்கள் அடிப்படையில், மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதில் தான் இந்தப் பயணத்தின் பயன் இருக்கும். ஆனால், அங்கு டி.ஆர்.பாலுவின் நடத்தையோ பேச்சோ இதற்கு அனுசரணையாக அமையவில்லை என்பது சோகத்திலும் சோகம்!

• ஜி.ஆர்.ராகவன், காகிதபுரம் ☐

? காஷ்மீர் மற்றும் அருணாசலப் பிரதேசத்துக்கு சீனா தனி விசா முறையை அமுல் படுத்தியதற்கு, இந்தியா அதிரடி நடவடிக்கை எடுக்குமா?



! ஹுக்கும்! சீன ஆக்கிரமிப்புன்னு எழுதின பத்திரிகைகள் மீது வழக்கு போடறதுல அயலுறவுத் துறை இஸ் வெரி பிஸி! தென்னை மரத்துல தேள் கொட்டினா பனை மரத்துல நெறி கட்டின மாதிரி

இருக்குல்ல!

● கே.கே.வேங்கடேசன்,
சென்னை - 37

? சந்திரனில் தண்ணீர் இருப்பதாகக் கண்டுபிடித்த இந்திய விஞ்ஞானிகளின் சாதனை குறித்து?

! மகிழ்ச்சி. ஆனால் அந்தத் தண்ணீர் எங்கே, எப்படி இருக்கிறது என அறிய, விண்கலத்தை அமெரிக்கா, நிலவில் கொண்டு போய் மோதியது அதிர்ச்சி! விஞ்ஞான ஆய்வு என்ற பெயரில் சந்திர மண்டலத்தையும் விண்வெளியையும் குப்பைத் தொட்டிகளாக மாற்றுவது, இயற்கையை நாம் விரோதித்துக் கொள்வதாகும்.



● முயன்றாலும் முடியாது!



● மறைக்கும் முட்டுக்கட்டை!



● உதவாத பேச்சு!

● பி.ஜெயபிரகாஷ், சர்க்கார்பதி

? ''நீங்கள் யார்?' என்று கேட்டால், 'நான் தமிழன்' அல்லது 'நான் மனிதன்' என்று கூறும் நிலை வரவேண்டும். சாதிப் பெயரைக் கூறக் கூடாது'' என்று ஸ்டாலின் பேசியுள்ளாரே?

! ரொம்ப ரொம்ப சரிதான்; வரவேற்கலாம். ஆனால், அந்த நிலை தோன்ற பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது அரசியல்வாதிகளும் அவர்கள் நடத்தும் சாதி அரசியலும்தான் என்பதை ஸ்டாலின் சொல்லமாட்டார்.

● என்.கோமதி, பெருமாள்புரம்

? 'ஓ' போட வைத்துவிட்டாரே ஒபாமா?

! நோபல் பரிசு அறிவிப்பை அடுத்து அவர் பேசியது ஓஹோஹோ போட வைத்துவிட்டதே! உலக அமைதிக்கான அவரது சிந்தனைகள் செயலுரு பெற்றுவிட்டால் ஓஹோஹோஹோதான்!

● ஏ.சுகுமார், காட்பாடி

? நடிகை புவனேஸ்வரி வழக்கில் தினமலர் செய்தி ஆசிரியரைக் கைது செய்தது பற்றி?

! தினமலர் செய்தியை வெளியிட்ட விதம் சரியல்லதான். ஆனால், லெனின் கைது செய்யப்பட்ட முறையும் சரியல்ல. பத்திரிகையில் அவதூறாகப் பிரசுரமானால், பிரெஸ் கவுன்ஸிலின் கவனத்துக்குக் கொண்டு போகலாம். மான நஷ்ட வழக்கு தொடரலாம். மறுப்பு எழுதிக் கொடுத்து பிரசுரிக்கச் செய்யும் உரிமையும் இருக்கிறது. இவற்றை விடுத்து, ஆட்சியாளர்

□ ரூ.150/- பரிசு பெறுபவர் :

ஜி.ஆர்.ராகவன், காகிதபுரம்

களுக்கு அழுத்தம் கொடுத்து, அதிகார துஷ்பிரயோகத்தைத் தூண்டுவது கண்டனத்துக்குரியது.

● பி.செந்தில்வேலன், அறந்தாங்கி

? சிதம்பரத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் வேதியியலுக்கான நோபல் பரிசைப் பெற்றது தமிழர்களாகிய நமக்கெல்லாம் பெருமைதானே?

! உலகத்துக்கே பெருமை. தமிழகத்துக்கு டபுள் பெருமை. விஞ்ஞான ஆய்வு என்பது நாட்டு எல்லைகளைக் கடந்து மக்கள் நலனுக்காகச் செயல்படுவது என்று மீண்டும் நிரூபணமானதில் விஞ்ஞான உலகுக்கு மும்மடங்கு பெருமை.

● எஸ்.ராமசாமி, வடக்கு தயிர்பாளையம்

? பி.டி.உஷா கண்ணீர்விட்டு அழும் அளவுக்கு அவமரியாதையாக நடத்தப்பட்டுள்ளாரே?

! உஷாவுக்கு உரிய மரியாதை அளிக்கப்படாதது ரொம்பக் கேவலம் தான்; சந்தேகமே இல்லை. ஆனால், பி.டி.உஷாவும் தமக்கு அழைப்பு உள்ளதா; சரியான வரவேற்பு கிடைக்குமா என்பதையெல்லாம் முன்கூட்டியே உறுதிசெய்து கொண்டு போயிருக்கலாம்.

● ஸி.விஜயகுமார், தேவனகுறிச்சி ★

? குடிப்பழக்கம், புகைப்பிடித்தல் ஆகியவற்றுக்கு அடிமையாகி, தள்ளாடுகிறதே இந்தச் சமுதாயம்?

! புகைப் பழக்கத்தின் தீமை உலகளாவிய விழிப்புணர்வாகி நம் நாட்டிலும் அதன் வீச்சு உணரப்பட ஆரம்பித்துள்ளது. மதுவின் கொடுமை குறித்து இதேபோல் விழிப்புணர்வு பரவ இன்னொரு காந்தி மகான் தோன்றினால்தான் உண்டு.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? கடவுளின் பெயரால் நடத்தப்படும் சடங்குகளால் தமிழ்க் கலாசாரம் அழிந்துவிட்டது என்கிறாரே க.அன்பழகன்?

! தமிழ்க் கலாசாரம் கொஞ்ச நஞ்சம் மிச்சம் இருப்பதே கடவுள் நம்பிக்கையினாலும் அதனைச் சார்ந்த பல அழகிய சடங்குகள், கலைகளினாலும் தான். இந்த உண்மையை அன்பழகன் எவ்வளவு முயன்றாலும் அழிக்க முடியாது.



● காக்கும் மகிழ்ச்சி



● மறந்த முன்னெச்சரிக்கை



● உலகின் பெருமிதம்

★ ரூ.75/- பரிசு பெறுபவர் :

ஸி.விஜயகுமார், தேவனகுறிச்சி

ஒப்புவமை இல்லா எழில்பாவை

வரதா என்றால் வரங்களைத் தருபவள் என்று பொருள். ஆனால் லலிதாம்பிகைக்கு **அவரதா** என்றும் திருநாமம் இருக்கிறது. அவரர்கள் என்றால் அசுரர்கள் என்று பொருள். அசுரர்களை அழிக்கக்கூடியவள், தண்டிக்கக்கூடியவள் **அவரதா.** அவள் யாக குண்டத்தில் தங்கத் தாம்பாளத்தில் **ஸ்வர்ணகர்பாவாகத்** தோன்றியதே அசுரத் தன்மையை அழிப்பதற்காகத்தான்.

வாகதீஸ்வரி - வாக்குக்கு ஈசுவரியாக, அக்ஷரங்களுக்கெல்லாம் ஈசுவரியாகத் திகழ்பவள். **ஹ்ரீம்காரி** என்ற, இதே பொருளுடைய நாமத்தை ஏற்கெனவே பார்த்தோம்.

அபரிச்சேத்யா - அளப்பரியவள்; அளவிட முடியாதவள். எதனாலும், யாராலும் அவளை அளந்துவிட முடியாது.

ஞானதா- ஞானத்தைத் தரக்கூடியவள். **ஞானவிக்ரஹா** - ஞான ஸ்வரூபமாகத் திகழ்பவள். ஞானத்தை ஒரு வடிவமாகச் செய்து வைத்தால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்கக்கூடியவள். அவள்தான் நமக்கு ஞானத்தைக் கொடுக்கிறாள். அப்படி அவள் ஞானத்தைத் தந்துவிட்டாளானால் நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்? அம்பாள் ஸ்வரூபமே முழுக்க முழுக்க ஞான ஸ்வரூபம் என்று தெரிந்து கொள்கிறோம். காளஹஸ்தியில் இருக்கக்கூடிய அம்பாளுக்கு ஞானப்ரசூனாம்பிகா - ஞானப் பூங்கோதை என்றே பெயர். அப்படி அவள் ஞான ஸ்வரூபமாக, ஞான விக்ரஹமாகத் திகழ்கிறாள்.


ஸர்வவேதாந்த ஸம்வேத்யா அனைத்து உபநிஷத்துகளின் பொருளாகவும் இருக்கக்கூடியவள். வேதாந்தம் என்பது வேதத்தின் அந்தமாக, நிறைவுப் பகுதியாக இருக்கக்கூடிய உபநிஷத்துகள். அவற்றின் திரண்ட விழுப்பொருளாகவும் அவை வழிபடும் மெய்ப் பொருளாகவும் அம்பிகையே திகழ்கிறாள்.

ஸத்யானந்த ஸ்வரூபிணி - ஸத்ய ஆனந்தம் - மெய்யான ஆனந்தம் - அதன் உருவமாக இருக்கிறாள். ஆனந்தத்திலேயே சின்னச் சின்ன ஆனந்தமெல்லாம் இல்லை. முழுக்க முழுக்க முழுக்க உண்மையாக இருக்கக்கூடிய பேரானந்தம். அது எங்கே கிடைக்கும் என்றால், அம்பிகையினிடத்திலேதான். அவள்தான் அந்த ஆனந்தமே.

லோபாமுத்ரார்சிதா - அகஸ்தியருடைய தர்மபத்னியான லோபாமுத்ராவினால் வணங்கப்படக்கூடியவள். மனு முதலான பன்னிரண்டு பேரை அம்பாள் உபாஸகர்களாகச் சொல்லியிருக்கிறது. அவர்களுள் லோபாமுத்ரையும் உண்டு. மிகப் பெரிய அம்பாள் உபாஸகரான அகஸ்தியரின் மனைவியும் அம்பாள் உபாஸனையில் ஈடுபட்டவள்.

அம்பாள்தான் இந்த உலகத்தையெல்லாம் சிருஷ்டித்தாள் என்று பார்த்தோம். (அனேக கோடி பிரம்மாண்ட ஜனனி) எப்படி சிருஷ்டித்தாள்...?

சுதா சேஷய்யன்


ஸ்ரீ சுகந்தகுந்தளாம்பிகை
செம்பொனார்கோயில்
நான்காம் பாகம்

இதற்கான பதிலைத் தரும் திருநாமம் **லீலாகிலுப்த பிரம்மாண்ட மண்டலா.** ரொம்ப விளையாட்டாக இந்த பிரம்மாண்டங்களை யெல்லாம் சிருஷ்டி செய் தாளாம் அம்பிகை! விளை யாட்டாக என்றால், அனா யாசமாகச் செய்தாள் என்று பொருள்.

அத்ருச்யா - எந்த விதமான உவமையும் இல் லாதவள்.

ஆசார்யர் பாடுவார் - அம்பாளுடைய உதடு களை வர்ணித்துச் சொல் கையில் பாடுவார் - செக் கெச்செவேல் என்று இருக் கக்கூடிய அவள் உதடு களுக்கு எதை உவமை சொல்ல முடியும்? சாதார ணமாக, சிவந்த உதடுகளுக் குக் கொவ்வைப் பழத்தை உவமையாகச் சொல்வார் கள். இல்லையானால் பவழம் மாதிரி சிவந்த அதரங் கள் என்பார் கள். ஆனால்,



ஆசார்யர் சொல்கிறார்: ''பவழக் கொடியிலிருந்து தோன்றிய பவழம் என்று சொல்லலாமா...?'' எனக் கேட்கிறார்!

அந்தக் காலத்தில் பவளக்கொடி என்றொரு நாடகம் உண்டு. பவழக்கொடிதான் பவளக்கொடி என்றாயிற்று. ளகரம் ழகரத்துக்குப் போலி என்று இலக்கணம் உண்டு.

ஆனால், பவழக்கொடி என்பதாக ஒன்று உண்டா என்ன? முன்பெல்லாம் காட்டு வழிகளில் நடந்து போகிற போது, செடி கொடிகள் நிறைய தென்படும். தனியாகப் பெயர் தெரியாத சில கொடிகளில், இலைகள் பச்சையாக இருக்கும்; ஆனால், சின்னச் சின்ன காய்கள் காய்த்து, அவை பழுக்கிறபோது சிவப்பாக இருக்கும்! பச்சைக் கொடியில் ஒரு பழம் பழுக்கிறபோது இவ்வளவு சிவப்பாக இருக் கிறதே, கொடியே சிவப்பாக இருந்து, அதிலே செம்பவள நிறத்தில் பழமும் பழுத்தால்..., எவ்வளவு சிவப்பாக இருக் கும்!

அப்படி ஒரு கொடி கிடையாது. ஆனால், ஆசார்யர் அம்பிகையின் அதரங்களைப் பவழக்கொடி என்று சொல்லிவிடலாமா எனக் கேட்கிறார், அவளிடமே!

''சரி, பவளக்கொடி என்பது என்றைக்குத் தோன்றி, என்றைக்குக் காய்த்து, பழுப்பது? அது வேண்டாம். உன் அதரங்களைக் கோவைப்பழம் என்று சொல்லலாமா?'' என்கிறார் அடுத்து!

கோவைப்பழம் 'பிம்பம்' என்று அழைக்கப்படும். அதற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது தெரியுமா? சிவப்பாக இருப்பதால் அல்ல; அது அம்பாளுடைய அதரங்களின் சிவப்பைப் பிரதிபலிப்பதனால், பிரதிபிம்பமாக இருப் பதால் அப்பெயர் வந்தது.

ஆனால், ''அந்த பிம்பத்தையும்கூட என்னால் உவமை யாகக் காட்ட முடியவில்லையே, அம்மா'' என்கிறார் ஆசார் யர் ஆதிசங்கரர். ''ஏனென்றால் ஒப்பு நோக்க, கோவைப் பழம் உன் அதரங்கள் அளவுக்குச் சிவப்பாக இல்லை!'' என்கிறார்.

அவர் இப்படி ஒப்புநோக்குவதைப் பார்த்ததாம் கோவைப்பழம். 'அடடா! அம்பாளின் அதரங்கள் அள வுக்கு நாம் சிவப்பாக இல்லையே!' என்று மலைக்கும் மடுவுக்குமான அந்த வித்தியாசத்தைக் குறைப்பதற்காக ஓர் எம்பு எம்பிப் பார்த்ததாம்! ஆனாலும் செந்நிறம் கூட வில்லை. ஆனால், அந்தப் பழத்திடம் இரண்டு மாறுதல்கள்

'அடடா! அம்பாளின் அதரங்கள் அளவுக்கு நாம் சிவப்பாக இல்லையே!'

ஏற்பட்டனவாம் - ஒருத்தர் எம்பிக் குதிக்கிறபோது, முகத்துக்கு ரத்த ஓட்டம் கூடி, சிவந்து போகும் அல்லவா? அதனால் கோவைப் பழத்திடம் தற்காலிகமாகச் சிவப்பு கூடிற்றாம். ஆனால், இரண்டு மடங்கு சிவப்பேறிய பிறகும் அம்பாளின் அதரங்களை நோக்க, தனது செந்நிறம் குறைவுதான் என்பதைப் பார்த்ததாம். அப்படி உணர்ந்ததும் அடைந்த வெட்கத்தினால் இன்னும் கொஞ்சம் சிவந்து போனதாம். ''அப்போதும்கூட அந்தக் கோவைப் பழம் அம்பாளின் அதரம்போல் அவ்வளவு சிவப்பாக இருக்க முடியவில்லையே!'' என்கிறார் ஆசார்யர்!

ஆக, அம்பாளின் எழிலுக்கு உவமை கூறப் போனால், ஏதோ வார்த்தைக்காகச் சொல்லலாமே தவிர, முழுக்க முழுக்க அது பொருத்தமாக இருக்கவே முடியாது. நிகரில்லாதவள் லலிதாம்பிகை; ஒப்புமை கூற முடியாத **அத்ருச்யா.**

த்ருச்யரஹிதா - எந்த உவமானமும் பொருந்தி வராமல், அவற்றைத் தாண்டி இருப்பவள்.

விஞ்ஞாத்ரீ - ஞானவிக்ரஹாவாக அவள் விளங்குவதை ஏற்கெனவே பார்த்தோம். விஞ்ஞானம் என்றால், விசேஷமான அறிவு. அதனால்தான் அறிவியலுக்கு விஞ்ஞானம் என்று பெயர். சாதாரணமாகத் தெரிந்திருக்கும் விஷயங்களைவிட பௌதிகம், ரசாயனம், உயிரியல் என்று தெரிந்து கொள்கிறபோது, அவை விஞ்ஞானம் என்று அழைக்கப்படுகின்றன. விஞ்ஞானம் என்ற சொல்லுக்கு வேறு சில அர்த்தங்கள் இருந்தாலும் இந்த இடத்தில் விசேஷமான அறிவு என்பதைக் குறிக்கும். அப்படிப்பட்ட அறிவுக்கு அதிபதியானவள் ஸ்ரீ லலிதாம்பிகை.

வேத்ய வர்ஜிதா - என்னதான் அறிவின் உருவாகத் திகழ்ந்தாலும் இந்த அறிவுக்கெல்லாம் அப்பாற்பட்டு இருக்கக்கூடியவள். வேதம் என்பதே 'அறிவு' என்பதிலிருந்து வந்ததுதான். அதற்கும் அப்பாற்பட்டவள் அவள்.

யோகினி- யோகமாக, யோக ஸ்வரூபமாக இருக்கக்கூடியவள்.

யோகதா - யோகத்தைத் தரக்கூடியவள்; **யோக்யா** யோகத்துக்குத் தகுதியுடையவள்; **யோகானந்தா** - யோக ஆனந்தத்தில் - யோகத்தினால் அடையக்கூடிய ஆனந்தத்தின் ஸ்வரூபிணி.

யுகந்தரா - யுகம் என்றால் இரட்டையாக இருப்பது 'யுகனம்' என்று ஆசார்யர் பாடியிருக்கிறார். நான்காக இருப்பதற்கும் யுகம் என்று பெயர். நான்கு யுகங்கள்தானே திரும்பத் திரும்ப வருகின்றன. அவற்றை சிருஷ்டிப்பவளாகவும் அம்பிகையே இருப்பதால், அந்த யுகங்களைத் தாங்கக் கூடியவளாகவும் அவளே இருப்பதால் **யுகந்தரா.**

மாட்டு வண்டிக்கு நுகத்தடி உண்டு. அதற்கு யுகம் என்று பெயர் உண்டு. ஏன் அதற்கு அப்பெயர் என்றால், மாட்டினால் தாங்கப்படுவதால். மாடு தன் கழுத்தில் நுகத்தடியைத் தாங்கி நடந்தால்தான் வண்டி ஓடும்.

அம்பாள் இந்த ஜகத்தையெல்லாம், யுகங்களையெல்லாம் கால-தேச-வர்தமானங்களையெல்லாம் தாங்கிக் கொண்டிருக்கிறாள், நடத்துவிக்கிறாள் என்பதால் **யுகந்தரா.**

(வளரும்)



'அயன்' படத்தின் சூப்பர் ஹிட்டை அடுத்து, கே.எஸ்.ரவிக்குமாருடன் கை கோத்து ஆதவனாகி, இந்த தீபாவளிக்கு 'டென் தௌசண்ட் வாலா' கொளுத்திப் போட்டிருக்கும் சூர்யாவின் ஸ்மார்ட் பேட்டி இதோ...

ஆதவன் இன்னொரு அயனா?

''நிச்சயமாக இல்லை. அது கடத்தலில் ஈடுபடும் இளைஞனின் கதை. அதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது. பணம் வாங்கிக் கொண்டு கொலை செய்யும் ஒருவனின் கதை இது. கதை கொல்கத்தாவில் நடக்கிறது. டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமாரும், நானும் தனித்தனியாக சூப்பர் ஹிட் படங்களைக் கொடுத்திருந் தாலும், முதல் தடவையாகச் சேர்ந்து ஒரு படம் வொர்க் பண்ணி இருக்கிறோம். படத்தில் கே.எஸ்.ரவிக்குமாரின் டச்சும், ஹியூமரும் நிறைய இருக்கிறது. ஒரு காட்சியில் நான் பத்து வயதுப் பையனாகத் தோன்றி இருப்பது ரொம்பப் புதுமையானது.''

சூர்யா: கா.மு - கா.பி?

'' 'காக்க காக்க' படத்துக்குப் பிறகுதான் பெரிய ஹீரோ ஆனேன். படங்களின் வீச்சு; பிஸினஸ் அதிகரிப்பு; பன்மடங்கு ரசிகர்கள் என்று பல விஷயங்களைச் சொல்லலாம். டைரக்டர் கௌதமுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். காக்க காக்கவுக் கப் பிறகுதான் எனக்கு ஸ்லீக்கான, ஸ்டைலான ஹீரோ என்று அங்கீகாரம் கிடைத்தது. ஒரு வெற்றி தருகிற நம்பிக்கை, நம்மை அடுத்த வெற்றியை நோக்கிச் செலுத்தும். சூர்யா என்ற பெயருக்காகப் படத்தை பிஸினஸ் பண்ணுவதைவிட, திறமையான டீம் உழைத்துக் கொடுத்திருக்கும் படம் என்ற அடிப்படையில், எல்லா தரப்பினரும் ரசிக்கும்படியாகப் படம் பண்ண வேண்டும்.''

'நோ ஹிந்தி' என்று சொன்ன சூர்யா இப்போது ராம் கோபால் வர்மா படத்தில் நடிப்பதேன்?

''நான் ஹிந்தியில் நடிக்க வேண்டும் என்பதற்காக அந்தப் படத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ராம்கோபால்வர்மா இந்தியாவின் மிகச் சிறந்த டைரக்டர்களில் ஒருவர். அவருடைய படமெடுக்கும் ஸ்டைல் எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால் ஒப்புக் கொண்டிருக்கிறேன். படத்தில் வசனம் பேசும் அளவுக்கு ஹிந்தி கற்றுகொள்ளப் போகிறேன்.''

கமல்?

''அவர் அரை செஞ்சுரி போட்டதைப் பெருமையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். எனக்கு அவர்தான் பெரிய இன்ஸ்பிரேஷன். அவரைப் பார்த்து நான் ஒரு நடிகனாகக் கற்றுக்கொண்ட விஷயங்கள் நிறைய.

நான் நடிக்க வந்தது இருபத்தைந்து வயதில். ஆகவே அவர் உயரத்துக்குப் போவது எனக்குச் சாத்தி யமே இல்லை. ஆனாலும், வெறும்

ஒரு நடிகனாக மட்டும் என் வாழ்க்கை முடிந்து போய்விடாமல், சினிமாவைத் தொழில்நுட்ப ரீதியில் கொஞ்சமாவது தெரிந்துகொள்ளவும் ஆசைப்படுகிறேன். இதற்கும் கமல்தான் இன்ஸ்பிரேஷன்.''

கார்த்தி..?

''நான் இந்த நிலையை அடைய எவ்வளவு வருடங்கள் எடுத்துக் கொண்டேன். ஆனால், முதல் படத்திலேயே கலக்கிவிட்டானே கார்த்தி! அவன் தான் என்னைவிடச் சிறந்த நடிகன் என்பதை எந்த மேடையிலும் பகிரங்கமாக, பெருமையாகச் சொல்லுவேன்.''


ஜோதிகா: ஜஸ்ட் மிஸ்டு!

''மொழி படத்துக்காக, சிறந்த நடிகைக்கான தேசிய விருது, ஜோதிகாவுக்கு மயிரிழையில் மிஸ் ஆனது பற்றித் தெரிந்தபோது ரொம்ப வருத்தமாக இருந்தது. அவங்களுக்கு ரொம்பப் பிடிச்ச படம் மொழி.''

குற்ற உணர்வு?

''தேசிய விருதுக்குப் பரிசீலிக்கப்படும் அளவுக்குத் திறமையான நடிகை இப்போது கணவரையும் குழந்தையையும் கவனித்துக் கொண்டு வீட்டோடு இருப்பது குறித்து உங்களுக்குக் குற்ற உணர்வு உள்ளதான்னு கேட்டா, நான் என்ன சொல்ல? யாரும் அவங்களை வீட்டுச் சிறையில் வைக்கவில்லை. அவங்களுக்கு ஒண்ணும் முடியெல்லாம் நரைத்து, கிழவியாகிடலை. அவங்க ஃப்ரீ ஆனதும், நடிக்க விரும்பினா, நான் நிச்சயம் சப்போர்ட் பண்ணுவேன்.''

- எஸ்.சந்திரமௌலி



"கமல்தான் எனக்கு இன்ஸ்பிரேஷன்!"

– சூர்யா பேட்டி

வட்டமேஜை

வாசகர்களுக்கு ஆசி வழங்குவது போல, ஆனந்தம் பெருக, பரமாச்சார்யாரின் அருளாசியுடன் துவங்கிய கல்கி தீபாவளி ஸ்பெஷல் இனித்தது.

- ரேவதிப்ரியன், ஈரோடு - 1

'**ச**மச்சீர் கல்வி' பற்றிய தங்கள் தலையங்கம் அருமை.

- டி.வி.இராமமூர்த்தி, சென்னை - 119

'**ம**ழலை' கவிதை தீபாவளிச் சிறப்பிதழின் சிகரம்!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

ராமதாஸ் பற்றிய கூட்டணி கார்ட்டூன் செம சூப்பர்!

- வி.ஜி.சத்தியநாராயணன், சென்னை- 61



கல்கி தீபாவளி சிறப்பிதழ் வெகு கனம் + கவனமாய்த் தயாரிக்கப்பட்டிருந்தது.

- எம்.ஜி.பரத், திண்டுக்கல் - 1

கலைத் துறையில் கமல்ஹாசனின் ஐம்பது ஆண்டுகள் சீரிய பணி குறித்த பன்முகப் பார்வை வெகு ஜோர்! பழனி பஞ்சாமிர்தமாய்க் கலந்து கட்டித் தித்தித்தது.

- விமலா, சென்னை

ஸ்ருதிஹாசன் பேட்டியில் சுத்தமான 22 காரட் தங்கத்தைப் போல் கேள்விகளும், பதில்களும் ஏ-ஒன்னாக பளிச்சென்றிருந்தன.

- எஸ்.ஆர்.ஹரிஹரன், சென்னை - 109

சபிதா ஜோசப்பின் மம்முட்டியின் நேர்காணல் மனத்தைக் கவர்ந்தது; அவரது வெற்றியின் ரகசியம் தெரிந்தது.

- சி.அனுஷா, சென்னை

சாதுர்யாவை காவல் துறைபணி நிரந்தரம் செய்திருப்பதால், எங்களிடமிருந்து அவர் விடைபெற்றுச் சென்றிருப்பது எந்த விதத்திலும் நியாயம் இல்லை. இவர் மீது வழக்கு தொடர சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை செய்து வருகிறோம்.

- அ.ராஜா ரஹ்மான், கம்பம்

கக்கன் போல ஒவ்வொருவரும் இருந்துவிட்டால் லஞ்சம் என்கிற பேச்சுக்கே இடமிருக்காது.

- எஸ்.எஸ்.வெங்கடகிருஷ்ணன், கோயம்புத்தூர்

புதிய நான்கு தொடர்களுடன் மின்னிய தீபாவளி சிறப்பிதழ் அழகு! அற்புதம்! அபாரம்!

- என்.எஸ்.மணிமாறன், திருவண்ணாமலை

'**ப**கல் மீன்கள்' படிக்கையில் இளமை நதியில் நீந்தி காதல் மீன்களோடு கை குலுக்கியதுபோல் உணர்ந்தேன்.

- சசிகலா, காஞ்சிபுரம்


வேலூர் - திருவண்ணாமலை மாவட்டச் செய்திகள்:
ப்ரியன், ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு
இலக்கியத்தில் அணிகலன்கள்
தொடர்- அடுத்த வாரம்

பஞ்சாமிர்தம்!

புற்றுநோய்க்கு ஒரே இடத்தில் தீர்வு!

ONE STOP SOLUTION FOR CANCER

- PET CT SCAN
- All Endoscopies
- Linear Accelerator & Brachy Therapy
- Radiation
- IGRT
- Surgical Oncology
- Medical Oncology



- பெட் சீடி ஸ்கேன்
- அனைத்து என்டோ ஸ்கோபி
- கதிர்வீச்சு
- லீனியர் ஆக்ஸிலரேடர் & உட்கதிர்வீச்சு
- IGRT
- புற்றுநோய் அறுவை சிகிச்சை
- புற்றுநோய் மருத்துவம்

இலவச ஆலோசனைக்கு:

(044) 2246 9200
(044) 66 300 300

PET CT CENTRE AT CANCER INSTITUTE (WIA)
CANAL BANK ROAD, GANDHI NAGAR, ADYAR, CH-20

24 HRS PHARMACY & AMBULANCE SERVICES AVAILABLE

Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL

1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Ph: 2246 9200, 66300300 Fax : 22463282 66300400
E-mail: info@drkamakshimemorialhospital.org.
Website: drkamakshimemorialhospital.org.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

